வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu வார மலர் ඊළනාඩු




Email : news@eelanadu.lk மலர் : 06 05.10.2025 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 278 பக்கங்கள் : 16

# அநுர அரசாங்கத்தின் காலத்திலேயே வடக்கை அபிவிருத்தி செய்யமுடியும்!

## சுட்டிக்காட்டுகிறார் ஆளுநர் வேதநாயகன்



யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 05

**தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது சொல்லில் அல்ல செயலில் நிரூபித்துக் கொண்டிருக்கின்றது. இந்த அரசாங்கத்தின் காலத்திலேயே வடக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்ய முடியும் என்று நம்புகின்றேன். இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.**

வடக்கு மாகாணத்தில் வீதிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் பொதுமக்களின் வரிப் பணத்தை பயன்படுத்தி செயற்படுத்தப்படும் "மறுமலர்ச்சிக்கான பாதை" திட்டத்தின் கீழ் "குறிகாட்டுவான் இறங்குதுறைக்கான மறுசீரமைப்பு வீதிக்கட்டுமானத்தின்" ஆரம்ப நிகழ்வும மற்றும் நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் முதல் தடவையாக எரிபொருள் நிரப்பு நிலையம் அமைப்பதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு என்பன குறிகாட்டுவானில் நேற்று சனிக்கிழமை காலை நடைபெற்றது.

இங்கு உரையாற்றிய ஆளுநர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தவிசாளருடன் கதைக்கும்போது அடிக்கடி ஓர் விடயத்தைக் கூறுவார். அமைச்சர் பிமல் ரத்நாயக்க இந்தத் துறையின் அமைச்சராக இருக்கும் போது வடக்குக்கு தேவையான நிதியைப் பெற்றுக் கொள்ளலாம். அமைச்சர் பிமல் ரத்நாயக்க எந்தத் திட்டம் வரும்போதும் அதில் வடக்கு மாகாணத்தையே முதன்மைப்படுத்துவார்

15



## குறிகாட்டுவான் இறங்குதுறை மறுசீரமைப்பு நேற்று ஆரம்பம்

- த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஒக். 05

புங்குடுதீவு குறிகாட்டுவான் இறங்கு துறைக்கான மறுசீரமைப்பு கட்டமைப்பு ஆரம்ப நிகழ்வு நேற்று காலை நடைபெற்றது.

போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள் சிவில் விமான சேவைகள் அமைச்சின் 299 மில்லியன் மக்களின் வரிப்பண நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது.

இந்நிகழ்வில் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, கடற்றொழில் நீரியல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர்,

15

## நிர்வாகம் ஆளுநர் வசம் இருப்பது வடக்கு - கிழக்கில் பெரும் தாக்கம்!

### கரு ஜயசூரிய சுட்டிக்காட்டு



கொழும்பு, ஒக். 05

நிர்வாகம் ஆளுநர் வசம் இருப்பது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். எனவே மாகாணசபைகளுக்குரிய தேர்தலை இவ்வருடத்துக்குள் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளார் சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும், முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய.

கொழும்பில் நடந்த கருத்தரங்கொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் கடந்த 11 வருடங்களாக மாகாண சபைத்

15

## அமெரிக்காவின் தடையினால் வடக்கில் வாழ்வாதாரத்தை இழக்கும் குடும்பங்கள்

### வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையம்

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஒக். 05

நீலக்கால் நண்டின் இறக்குமதியை அமெரிக்கா தடை செய்வதால் வடக்கில் 5 தொழிற்சாலைகள் மூடப்படும் துர்ப்பாக்கிய நிலைக்குள் தள்ளப்படுவதாகவும், பல்லாயிரம் குடும்பங்கள் வாழ்வாதாரத்தை இழக்க உள்ளதாகவும் வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் அன்னலிங்கம் அன்னராசா சுட்டிக்காட்டி உள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இந்த விடயத்தை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று மீனவர்களுடைய வாழ்வாதாரத்தை நீலக்கால் நண்டுகள் காப்பாற்றிக் கொண்டிருக்கின்றன. இந்த நண்டுகளின் பிரதான ஏற்றுமதிச் சந்தையாக அமெரிக்கா காணப்படுகின்றது.

அமெரிக்காவானது இந்த நீலக்கால் நண்டின்

15

## தேசிய மக்கள் சக்தி அரசால் எந்த நன்மையும் கிட்டவில்லை!

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 05

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் நாட்டின் பொருளாதாரத்திற்கோ எதிர்காலத்திற்கோ எந்த நன்மையும் கிடைக்கப்பெறவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

15



## தேசிய மக்கள் சக்தியின் அலுவலகம் வடமராட்சியில்!

- எஸ்.தில்லைநாதன், பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஒக். 05

தேசிய மக்கள் சக்தியின் வடமராட்சி அலுவலகம் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவால் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

இதன்போது விருந்தினர்கள் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டு மங்கல சுடர்கள் ஏற்றப்பட்டன.

இதில் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பாராளுமன்ற உறுப்பினர்களான இளங்குமரன், ரஜீவன், மருத்துவர் பவனந்தராஜா, தேசிய மக்கள் சக்தியின் பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச சபைகளின்

15

## மாகாண தேர்தல் ஏன் தேவை என மக்களுக்கு புரிய வைக்கவில்லை!

### மகிந்த தேசப்பிரிய கூறுகிறார்

கொழும்பு, ஒக். 05

மாகாண சபைத் தேர்தல்கள் ஏன் தேவை என்பதை மக்களுக்குப் புரிய வைக்காமல் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவது அவசியம் என்ற கருத்தை வெல்ல முடியாது என்று தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் வாக்குகள் இருப்பதைக் காட்டுவதற்காக மட்டுமே மாகாண சபைத் தேர்தல்களுக்கான

15

## இலங்கையில் எரிசக்தி துறையில் அவசர சீர்திருத்தங்கள் அவசியம்!

### வலியுறுத்துகிறது உலக வங்கி

கொழும்பு, ஒக். 05

பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகளை விட இலங்கை தொடர்ந்து கணிசமாக அதிக எரிசக்தி செலவுகளைச் சுமந்து வருவதாக சுட்டிக்காட்டிய உலக வங்கியானது, நாட்டின் எரிசக்தித் துறை சீர்திருத்தங்களுக்கான அவசரத் தேவையை வலியுறுத்தியுள்ளது.

இலங்கைக்கான முகாமையாளர் கெவோர்க்

15

## அஸ்வெசும விரைவில் இரத்து! சொல்கிறார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, ஒக். 05

அஸ்வெசும நலன்புரித் திட்டத்தை விரைவில் இரத்து செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

அநுராதபுரத்தில், நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போது, அவர் இந்த விடயத்தைக் கூறியுள்ளார்.

அத்துடன், அஸ்வெசும திட்டம் மக்களின்

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் பேசாலை பொலிஸ் நிலைய தடுப்பு காவலிருந்த நபர் உயிரிழப்பு!

## பொலிஸார் அடித்ததால் மகன் மரணம்! தாய் குற்றச்சாட்டு

மன்னார், ஒக். 05

மன்னார் பேசாலை பொலிஸ் பிரிவில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பேசாலை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 34 வயதுடைய நபர் ஒருவர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை பொலிஸ் நிலைய தடுப்புக் காவலில் இறந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

உயிரிழந்தவர் வவுனியா மாங்குளத்தைச் சேர்ந்த ராஜேந்திரன் கபிலன் (வயது-34) என அடையாளம் காணப்பட்டார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில்,

பேசாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டாஸ்பத்திரி பகுதியில் கடந்த வியாழக்கிழமை மாலை போதைப் பொருள் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

இந்த நபரை பேசாலை பொலிஸார் துரத்திப் பிடித்ததோடு, இவருடன் இருந்த மற்றொரு நபர் தப்பியோடியதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நபரை பொலிஸார் பேசாலை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்று பொலிஸ் நிலைய தடுப்புக் காவலில் வைத்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

பின்னர் குறித்த நபர் பொலிஸ் நிலைய கூண்டில் தடுத்து வைக்கப்பட்ட நிலையில் வெள்ளிக்கிழமை காலை உயிரிழந்த நிலையில் காணப்பட்டார்.

இந்த நிலையில் வெள்ளிக்கிழமை காலை 06. 30 மணியளவில் சடலம் பேசாலை பிரதேச மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த நிலையில் மதியம் 12.00 மணியளவில் மன்னார் நீதிமன்ற பதில் நீதிவான் ஜெபநேசன் லோகு, பேசாலை பிரதேச மருத்துவமனைக்கு சென்று விசாரணைகளை முன்னெடுத்தார்.

இதனையடுத்து பேசாலை பொலிஸ் நிலையத்துக்கும் சென்று பொலிஸ் நிலைய சிறைக் கூடத்தையும் பார்வையிட்டு விசாரணைகளை முன்னெடுத்தார்.

குறித்த சந்தேக நபர் பேசாலை பொலிஸ் நிலையத்தின் முதலாம் இலக்க தடுப்புக் காவல் கூடத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையிலே சடலமாக மீட்கப்பட்டார்.


உயிரிழந்த நபரின் தாய், பேசாலை பிரதேச மருத்துவமனைக்கு வெள்ளிக்கிழமை காலை வருகை தந்து தனது மகனை பொலிஸார் அடித்து கொலை செய்ததாக தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

# ஐங்கரநேசனின் 'வேர்முகங்கள்' அறிமுகவிழா முள்ளியவளையில்

முல்லைத்தீவு, ஒக். 05

கலை, இலக்கியப் பேராளுமைகளுடன் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் வடக்கு மாகாணசபையின் மேனாள் அமைச்சருமான பொ. ஐங்கரநேசன் மேற்கொண்ட நேர்காணல்களின் தொகுப்பு வேர்முகங்கள் என்ற பெயரில் எங்கட புத்தகங்கள் பதிப்பகத்தின் ஊடாக அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலுக்கான இன்று ஞாயிற்றுக்கிழமை, பிற்பகல் 3 மணிக்குத் தண்ணீரூற்று (குமுழமுனைச் சந்தி) முள்ளியவளையில் அமைந்துள்ள பரி - மத்தியா ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முல்லை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சி. குணபாலன் தலைமையில் நடைபெற உள்ள இவ்வறிமுக விழாவில் கருத்துரைகளை ஊடகவியலாளர் தி. திவாகர் மற்றும் சமூக



ஆய்வாளர் தெ. மதுசூதனன் ஆகியோர் நிகழ்த்த உள்ள னர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையின் முதுநிலை விரிவுரையாளர் க. அருந்தாகரன் அறிமுக உரையை நிகழ்த்த, நூலின் சிறப்புப் பிரதிகளை மூத்த பாடலாசிரியர் பெ.செல்லக்குட்டி வழங்கி வைப்பார்.

பல்துறைக் கலைஞர் செ. மயில்வாசன் தொகுத்து வழங்கவுள்ள இந்நிகழ்ச்சியில், வரவேற்புரையை கவிஞர் யோ. புரட்சி ஆற்ற, நிகழ்ச்சியின் இறுதியில் ஏற்புரையை நூலாசிரியர் பொ. ஐங்கரநேசன் நிகழ்த்தவுள்ளார்.

(அ)

# மரபுரிமைச் சின்னங்களை பராமரிக்க வேண்டும்

## பசுந்தேசம் அமைப்பு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 05

தென்மராட்சியில் சாவகச்சேரி பிரதேச சபை மற்றும் சாவகச்சேரி நகர சபை ஆகியவற்றின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பாரம்பரிய மரபுரிமைச் சின்னங்களைப் பராமரிப்பதுடன் அதனை மரபுரிமை சின்னங்கள் என பிரகடனப்படுத்தி பாதுகாக்க வேண்டும் என்று பசுந்தேசம் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

தென்மராட்சி பகுதியில் காணப்படும் சுமைதாங்கி, ஆவுரஞ்சிக்கல் போன்ற புராதன மரபுரிமை சார்ந்தவை நீண்டகாலமாக பராமரிப்பற்ற நிலையில் காணப்படுகின்றன.

அவற்றை பாரம்பரிய சின்னங்களாக வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தி பராமரித்து பாதுகாக்க தென்மராட்சியில் உள்ள நகர சபை மற்றும் பிரதேச சபை விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(எ)

# எலி எச்சங்களுடன் உணவு விற்பனைக்கு வைத்திருந்த உரிமையாளருக்கு தண்டம்

யாழ்ப்பாணம், ஒக். 05

பருத்தித்துறையில் எலி எச்சங்களுடன் கூடிய உணவுப் பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் பேரில் பல்பொருள் அங்காடி உரிமையாளருக்கு 60 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகர சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதியிலுள்ள உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் பல்பொருள் அங்காடிகளில் பொதுச் சுகாதார பரிசோதகர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போதே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வண்டு மொய்ந்த உணவுப்பொருட்கள், காலாவதியான உணவுப்பொருட்கள், எலி எச்சங்களுடன் கூடிய உணவுப்பொருட்கள், பூஞ்சணம் மொய்த்த உணவுப்பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்த குற்றச்சாட்டில் பல்பொருள் அங்காடி உரிமையாளருக்கு எதிராக பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு விசாரணையின் போது, தன் மீதான குற்றச்சாட்டை உரிமையாளர் ஏற்றுக்கொண்டதை அடுத்து, உரிமையாளரை கடுமையாக எச்சரித்த நீதிமன்று, 60 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்தது.

(எ-3)

# மருத்துவர் மனோகரனுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 05

கடந்த 2006. 01. 02 ஆம் திகதியன்று திருகோணமலை நகரத்தின் காந்தி சிலையருகில் வைத்துப் படுகொலை செய்யப்பட்ட ஐந்து மாணவர்களுக்கு நீதிகோரி போராடிவந்த, படுகொலையான மாணவரான ரஜிகரின் தந்தை மருத்துவர் காசிப்பிள்ளை மனோகரன் அண்மையில் அமரத்துவமடைந்திருந்தார். அன்னாருக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை காலை 10. 00 மணிக்கு யாழ்ப்பாணம் தந்தை செல்வா நினைவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.




மக்கள் செயல் தன்னார்வ அமைப்பினர் ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்வில், சாட்சியங்களுடன் தொடர்புடைய உரைகளும் நடைபெறவுள்ளன.


உரைகளின் வரிசையில், பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், "சர்வதேச தலையீட்டின் கீழ் தமிழ் இனவழிப்புக்கு எதிரான சாட்சியங்களைத் திரட்டல் - சாத்தியமும் பலவீனங்களும்" என்ற தலைப்பிலும் யாழ். பல்கலைக்கழகத்தின் அரசறிவியல்துறை தலைவர் கலாநிதி தி. விக்னேஸ்வரன், "காணாமலாக்கப்பட் டோருடன் தொடர்புடைய சாட்சியங்கள் பலவீனப்படுத்தப்படுகின்றமையும் அதற்குப் பின்னாலான அரசியலும்" என்ற தலைப்பிலும் அரசியல் செயல்பாட்டாளரான ரஜீவ்காந்த், "மருத்துவர் மனோ கரன் நடந்த நீதியின் தடம் - நடந்தவைகளும் நினைவுகளும்" என்ற தலைப்பிலும் அரசியல் ஆய்வாளர் ம. நிலாந்தன், "பதினாறு ஆண்டுகால நீதிக் கான போராட்டம் என்ற தலைப்பிலும்" பத்திரிகையாளர் அ. நிக்சன் "நீதிகோரலுக்கான சாட்சியங்களைப் பெறும் வழி முறைகளும் அதனை மையப்படுத்திய பாராளுமன்ற உரைகளும்" எனும் தலைப்பிலும் சட்டத்தரணி சிறீநாத் பெரேரா, "சர்வதேச நீதியினூடாக தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை அடைதல்" எனும் தலைப்பின் கீழும் உரையாற்றவுள்ளனர். (எ)

# வங்கிகளில் நிலவும் பிரச்னைகளுக்கு எதிராக யாழில் தீப்பந்த போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 05

அரச வங்கிகளில் நிலவும் பிரச்னைகளுக்கு எதிராக, தீப்பந்த போராட்டமொன்று யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் உள்ள இலங்கை வங்கி வடபிராந்திய காரியாலயத்துக்கு முன்பாக குறித்த போராட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 07. 00 மணியளவில் இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.



அரச வங்கிகளின் சட்ட திருத்தங்களினூடாக, வங்கி தனியார் மயப்படுத்தலை நோக்கிச் செல்லவுள்ளதாக போராட்டக்காரர்கள் இதன்போது குற்றஞ்சாட்டினர்.

(எ)

# சுகாதார விதிமுறைகளை பேணாத உணவகம், அங்காடிகளுக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஒக். 05

வல்வெட்டித்துறை நகர சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதியில் சுகாதார விதிமுறைகளை பேணாத உணவகம் மற்றும் பல்பொருள் அங்காடிகள் ஆகியவற்றுக்கு ஓர் இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை நகர சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள உணவகங்கள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் என்பவற்றில் பொது சுகாதார பரிசோதகர்கள் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது, மனித நுகர்வுக்கு ஏற்றதல்லாத உணவுப் பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்தமை போன்ற குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் மூன்று பல்பொருள் அங்காடிகளுக்கு எதிராக பொதுச் சுகாதார பரிசோதகரால் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

வழக்கு விசாரணைகளின் போது உரிமையாளர்கள் தம் மீதான குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டதை அடுத்து, உரிமையாளர்களை கடுமையாக எச்சரித்த நீதிமன்று, உணவக உரிமையாளருக்கு 50 ஆயிரம் ரூபாயும் பல்பொருள் அங்காடிகளின் உரிமையாளர் களுக்கு 40 ஆயிரம், 10 ஆயிரம் மற்றும் 60 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து தீர்ப்பளித்தது. (எ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார நிலையத்தை கூட அரசாங்கம் விற்பதற்கு திட்டம்

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ

அநுராதபுரம், ஒக். 05

எதிர்க்கட்சியில் இருந்த போது வெளிநாட்டிலிருந்து எதனையும் இறக்குமதி செய்ய மாட்டோம் என்று சொன்னார்கள். இப்போது எல்லாவற்றையும் வெளிநாட்டிலிருந்தே இறக்குமதி செய்து விவசாயிகளை ஏமாற்றி வருகின்றனர். அரசாங்கம் இப்போது பொருளாதார மத்திய நிலையங்களைக் கூட விற்க திட்டமிட்டுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கல்வித்துறையில் தற்போது கடுமையான பின்னடைவு ஏற்பட்டுள்ளது. பாடசாலை வசதிகள் பற்றாக்குறையும் ஆசிரியர் பற்றாக்குறையும் நிலவும் நேரத்தில் ஆசிரியர்களாகப் பணியாற்றிய 16, 200 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கைவிடப்பட்டுள்ளனர்.

மனித வளம் மற்றும் பௌதீக வளங்களுக்கு பெரும் பற்றாக்குறை நிலவுகின்றன. பாடசாலைகளுக்கு கணினி வசதி கொண்ட ஸ்மார்ட் திரை வழங்கியபோது என்னை விமர்சித்து, கேலி செய்த தற்போதைய ஆளும் தரப்பினரால் இன்று அதிகாரத்தை வைத்துக் கொண்டும் அதைப் போல ஒரு செயல்திட்டத்தை முன்னெடுக்க முடியாதவர்களாக காணப்படுகின்றனர் என்றும் சஜித் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் நடமாடும் சேவைத்திட்டம் மற்றும் ஐக்கிய மக்கள் சக்திக்கு புதிய அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளும் திட்டம் என்பவற்றின் மற்றுமொரு கட்டம் நேற்று முன்தினம் அநுராதபுரம் மாவட்டம், கலாவெவ தேர்தல் தொகுதியில் அமைந்துள்ள ராஜாங்கன யாய 16-17 பிரதே சத்தை மையமாகக் கொண்டு நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.(எ)

# பேருந்தை தள்ளித்திரியும் வடமராட்சி கிழக்கு மக்கள்

யாழ்ப்பாணம், ஒக். 05

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு கேவிலில் இருந்து பருத்தித்துறை நோக்கிப் புறப்பட்ட இ. போ. ச. பேருந்து நேற்று முன்தினம் திடீரென பழுதடைந்து இடை நடுவில் நின்றதால் பயணிகள் அந்தரித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

நேற்று முன்தினம் அதிகாலை கேவிலில் இருந்து பருத்தித்துறை நோக்கிப் புறப்பட்ட பேருந்து மருதங்கேணியில் பழுதடைந்தது.

பழுது பார்த்த பின்னர் மருதங்கேணியில் இருந்து புறப்பட்ட குறித்த பேருந்து மீண்டும் இடை நடுவே பழுதடைந்தது.

பின்னர் அங்கிருந்து பருத்தித்துறை நோக்கி பயணிகளை ஏற்றிக் கொண்டு மீண்டும் தனது பயணத்தை ஆரம்பித்தது. மீண்டும் அதே பேருந்து பருத்தித்துறையில் இருந்து கேவில் நோக்கி நேற்று முன்தினம் மாலை புறப்பட்டது.

அதிகளவான பயணிகளை ஏற்றி வந்த குறித்த பேருந்து மீண்டும் நாகர்கோவில் பகுதியில் பழுதடைந்தது. இதனால் குடாரப்பு தொடக்கம் கேவில் வரை செல்ல வேண்டிய பயணிகள் சிரமத்துக்கு உள்ளாகினர். இரவு வேளையில் குழந்தைகளுடன் பலர் வீதியில் அந்தரிக்கும் நிலை ஏற்பட்டது.

அண்மையில் வடமராட்சி வடக்கு பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திலும் சீரான பேருந்து சேவை தொடர்பில் பேசப்பட்டது. இதன்போது, நல்ல நிலையிலுள்ள பேருந்தை வடமராட்சி கிழக்குக்கான சேவையில் ஈடுபடுத்துமாறு பாராளுமன்ற உறுப்பினர் ஜெ. றஜீவன் தெரிவித்திருந்தார். இருப்பினும், பருத்தித்துறை சாலை முகாமையாளர் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

எனவே, சிரமமின்றி பயணிக்கக் கூடிய நல்ல தரமான ஒரு பேருந்தை சேவையில் ஈடுபடுத்துமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-05)

# சட்டவிரோத கட்டடங்களை அகற்றும் பணி ஆரம்பமானது

திருகோணமலை, ஒக். 05

கிண்ணியா பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பல பகுதிகளில் சட்டவிரோத காணிகளையும் கட்டடங்களையும் அகற்றி, அரச உடைமையாக்கும் பணி நேற்று முன்தினம் ஆரம்பமானது.

கிண்ணியா கச்சக்கொடு தீவு பகுதியில் சட்டவிரோதமாக பெறப்பட்ட காணிகள் மற்றும் கட்டடங்கள் 1979 ஆம் ஆண்டு காணி சுவீகரிப்பு சட்டத்தின் கீழ் கிண்ணியா பிரதேச செயலாளரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு, சட்டவிரோத கட்டடங்கள் இயந்திரம் மூலம் இடித்து அழிக்கப்பட்டு அரசுடைமை ஆக்கப்பட்டன.

சட்டவிரோத கட்டடங்களை வைத்திருந்தவர்கள் இதன்போது வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இருந்த போதும் நீதிமன்ற தீர்ப்பின்படி பொலிஸாரின் உதவியுடன் கட்டடங்கள் அகற்றப்பட்டன.(எ)

# கடும் காற்றுடன் மழை யாழில் 14 பேர் பாதிப்பு



யாழ்ப்பாணம், ஒக். 05

யாழ்ப்பாணத்தில் காற்றுடன் கூடிய மழை காரணமாக மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 14 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என். சூரியராஜா தெரிவித்தார்.

வேலணை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஜே- 28 கிராம உத்தியோகத்தர் பிரிவில் காற்றுடன் கூடிய மழை காரணமாக இரண்டு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று, சங்கானை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஜே- 169 கிராம உத்தியோகத்தர் பிரிவில் வீடு ஒன்று பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் நால்வர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறினார்.

(எ-05)

# சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட பீடி இலைகளுடன் நால்வர் கைது!



வவுனியா, ஒக். 05

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட பீடி இலைகளுடன் நால்வர், செட்டிக்குளம் பொலிஸாரால், வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

செட்டிக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, மாங்குளம் பகுதியில் செட்டிக்குளம் பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவுக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட 25 கிலோ கிராம் பீடி இலைகள் கொண்ட 40 பொதிகள் கண்டு பிடிக்கப்பட்டன.

சந்தேக நபர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்கள் 21, 28, 40 மற்றும் 43 வயதுடைய மன்னார் பகுதியைச் சேர்ந்தவர்கள் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை செட்டிக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(எ)

# அதிக விலைக்கு அரிசி விற்பனை வர்த்தகர்கள் இருவருக்கு அபராதம்

கொழும்பு, ஒக். 05

கீரிசம்பா அரிசியை அதிக விலைக்கு விற்பனை செய்ததாக, குற்றஞ்சாட்டப்பட்ட இரண்டு வர்த்தகர்களுக்கு தலா ஓர் இலட்சம் ரூபாய் அபராதம் விதித்து, களுத்துறை மற்றும் பாணந்துறை நீதிவான் நீதிமன்றங்கள் உத்தரவிட்டுள்ளன.

இதேநேரம், ஹொரணை - பொருவடந்த பகுதியில் கீரிசம்பா அரிசி இருப்புகளை மறைத்ததற்காக, வர்த்தகர் ஒருவருக்கு ஹொரணை நீதிவான் 20,000 ரூபாய் அபராதம் விதித்து உத்தரவிட்டுள்ளார்.

# மின்சார கட்டணம் 6.8 சதவீதம் உயர்வு

## 15 ஆம் திகதிக்குள் அறிவிப்பு வரும்

கொழும்பு, ஒக். 05

மின்சாரக் கட்டணத்தை 6.8 சதவீதத்தால் உயர்த்துவது தொடர்பாக இலங்கை மின்சார சபையால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவு குறித்து, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முடிவு இந்த மாதம் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக வெளியிடப்படும் என்று குறித்த ஆணைக்குழுவின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

மின்சாரக் கட்டணங்களைத் திருத்துவதற்கான பொது ஆலோசனை செயல்முறை தற்போது நடைபெற்று வருகிறது.

இந்த மாதம் 8 ஆம் திகதி மேல் மாகாண ஆலோசனையின் இறுதி அமர்வு நடைபெற்ற பின்னர், கட்டணங்களைத் திருத்துவது குறித்த இறுதி முடிவு எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார்.(எ)

# பலத்த மின்னல் தாக்கம் ஏற்படும்

கொழும்பு, ஒக். 05

வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா மாகாணங்களிலும் குருநாகல் மற்றும் மாத்தளை மாவட்டங்களிலும் இடியுடன் கூடிய மழை மற்றும் பலத்த மின்னல் தாக்கம் ஏற்பட அதிக வாய்ப்புள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் போது, அந்தப் பகுதிகளில் தற்காலிகமாக பலத்த காற்று வீசக்கூடும்.

மின்னல் அபாயத்தைக் குறைக்க, தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளது.(எ)

# "கடன் பொறிக்குள் அரசு சிக்கியுள்ளது"

கொழும்பு,ஒக். 05

அதிகாரத்துக்கு வரும் எந்த அரசாங்கமும் கடன் தவணைகளை மீளச் செலுத்த முடியாமல் ஒருசில வருடங்களில் வீழ்ச்சியடையும் வகையில் ரணில் விக்கிரமசிங்க வைத்துச்சென்ற பொறிக்குள் தற்போதைய அரசாங்கம் சிக்கிக்கொண்டுள்ளது என்று முன்னிலை சோசலிச கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜயகொட தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரணில் விக்கிரமசிங்க நேரம் பார்த்து வெடிக்கும் குண்டுகளை புதைத்து விட்டுச்சென்றுள்ளதாக நாங்கள் ஆரம்பத்திலேயே தெரிவித்திருந்தோம். சில குண்டுகள் 2025 இறுதிப் பகுதியில் வெடிக்கும் வகையிலும் இன்னும் சில குண்டுகள் 2028இல் வெடிக்கும் வகையில் புதைத்துள்ளார்.

அதுமாத்திரமல்ல, எங்களுக்கு கடன் செலுத்த முடியாமல் நாங்கள் நெருக்கடிக்குள்ளாகினாலும், வாக்குறுதியளித்த கடன் உரிமையாளர்களுக்கு கட்டாயமாக கடன் தவணைகளை செலுத்த வேண்டும் எனவும் நாணய நிதியம் தெரிவித்துள்ளது. அதனால் கடன் செலுத்துவதற்கும் வட்டி செலுத்துவதற்கும் எங்களுக்கு கடன் பெறவேண்டி ஏற்படுகிறது. அதற்காக மக்களின் சொத்துக்கள், வளங்களை விற்பனை செய்தாவது பணம் தேட வேண்டிவரும்.

அதனால் அதிகாரத்துக்கு வரும் எந்த அரசாங்கமும் ஒரு சில வருடங்களில் வீழ்ச்சியடையும் வகையில், சர்வதேச நாணய நிதியம், ரணில் விக்கிரமசிங்க, ராஜபக்ஷ்வினர் இணைந்து பொறி ஒன்றை வைத்திருந்தனர். அந்த பொறிக்குள் இந்த அரசாங்கம் அழகான முறையில் தற்போது மாட்டிக்கொண்டுள்ளது - என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருளுக்கு எதிரான நடவடிக்கை வரவேற்கத்தக்கது

## எஸ். பி. திஸநாயக்க தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 05
போதைப்பொருள் வர்த்த கர்கள் அரசியல்வாதிகளுக்கு உதவி செய்தார்கள். அரசியல் வாதிகள் போதைப்பொருள் வர்த்தகர்களுக்கு உதவி செய் தார்கள். போதைப்பொருளுக்கு எதிராக அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகள் வரவேற்கத்தக் கது. போதைப்பொருள் தொடர்பான வழக்கை விரை வாக நிறைவு செய்து, அவர்க ளுக்கு கடுமையான தண்டனை வழங்க வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் எஸ். பி. திஸநாயக்க தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப் பிட்டார். அவர் மேலும் தெரி வித்ததாவது,
ஜனாதிபதி அநுரகுமார திஸ நாயக்க மற்றும் அவர் தலைமை யிலான அரசாங்கத்துக்கு மக்கள் மத்தியில் நல்லதொரு வரவேற்புள்ளது. ஜனாதிபதி சீனாவுடன் இணக்கமாக செயல்படுவது சிறந்தது. சீனா வின் கம்யூனிச கொள்கைக்கு அமைவாக அடிப்படை நிர் வாக கட்டமைப்பில் மாற்றங் களை ஏற்படுத்த வேண்டும்.
அரசாங்கம் சிறந்த முறை யில் செயல்பட்டுக் கொண்டி ருக்கின்ற நிலையில் எதிர்க்கட் சிகள் பல்வேறுபட்ட குற்றச் சாட்டுக்களை அரசாங்கத்துக்கு எதிராக முன்வைப்பதை அவ தானிக்க முடிகிறது. குறுகிய அரசியல் கொள்கையுடன் அனைத்து விடயங்களையும் விமர்சிக்க முடியாது.
எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஏன் ஒன்றிணைய வேண்டும். அவ்வாறு ஒன்றிணைந்து எதனை சாதிக்கப் போகிறார்கள் என்பது தெரியவில்லை. அவ் வாறு ஒன்றிணைந்தவுடன் அடுத்த கட்ட நடவடிக்கைகள் என்னவென்பது குறித்து எந்த வித திட்டமும் கிடையாது.- என்றார். (எ)

# சிறுவர்களுக்கு தண்டனை: சட்டமாக இயற்றப்படவில்லை

## நீதி அமைச்சர் ஹர்ஷன விளக்கம்



கொழும்பு, ஒக். 05
சிறுவர்களுக்கு எதிரான உடல் ரீதியான தண்டனை குறித்து முன்மொழியப்பட்ட திருத்தம் சட்டமாக இன்னும் இயற்றப்படவில்லை என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக் கார தெரிவித்தார்.
அறிக்கையொன்றை வெளி யிட்டு அவர் இது தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ளார்.
கடந்த செப்ரெம்பர் 24ஆம் திகதி தண்டனைச் சட்டக் கோவை திருத்தம் மீதான இரண்டாம் வாசிப்பு விவாதம் பாராளுமன்றத்தில் நடைபெற் றாலும் அது ஒரு விவாதமே தவிர, சட்டமாக நிறைவேற் றப்படவில்லை என்று அமைச் சர் குறிப்பிட்டுள்ளார்.
மேலும், அத்தகைய ஒரு திருத்தம் நடைமுறைக்கு வர வேண்டுமானால் குற்றவியல் நடைமுறைச் சட்டத்திலும் அதற்குரிய மாற்றம் செய்யப் பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அந்த மாற்றம் இன்னும் செய்யப் படாததால் இந்த திருத்தம் நிலுவையில் உள்ளது.
சட்ட திருத்தங்கள் கொண்டுவரக்கூடிய பாராளு மன்றத்தின் குழு நிலையின் போது குறித்த மாற்றங்கள் இன்னமும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படலாம்.
உடல் ரீதியான தண்டனை குறித்த திருத்தம் விவாத நிலை யில் உள்ளது என்றும் அது சட் டமாக நிறைவேற்றப்பட வில்லை என்றும் நீதி அமைச்சர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (எ)

# மகிந்தவின் குண்டுதுளைக்காத வாகனமும் கையளிக்கப்பட்டது

கொழும்பு, ஒக். 05
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப் புக்காக வழங்கப்பட்ட குண்டு துளைக்காத வாகனமும் திருப்பி கையளிக்கப்பட்டுள்ளது.
மகிந்த ராஜபக்ஷவின் ஊட கப் பேச்சாளர் மற்றும் சட்டத் தரணி மனோஜ் கமகே, வெளி யிட்ட விசேட அறிக்கையில் குறித்த வாகனம் நேற்று முன் தினம் திருப்பி கையளிக்கப்பட் டதாக தெரிவித்துள்ளார்.
ஜனாதிபதிகளின் உரிமைகள் (நீக்குதல்) சட்டம் நடை முறைக்கு வந்த பின், செப்ரெம் பர் 24ஆம் திகதியன்று ஜனா திபதி செயலாளர், மகிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் அனைத்து உத்தியோகபூர்வ வாகனங்க ளையும் திருப்பி கையளிக்கு மாறு அறிவித்ததாக மனோஜ் கமகே கூறினார்.
அத்துடன், மகிந்த ராஜ பக்ஷவின் பாதுகாப்புக்காக வழங்கப்பட்ட பாதுகாப்பு அதி காரியின் வாகனமும் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.
இந்தச் சூழ்நிலை காரண மாக, மகிந்த ராஜபக்ஷவின் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என மனோஜ் கமகே எச்சரித் துள்ளார்.
அடுத்த வாரம் பொலிஸ்மா அதிபர், பாதுகாப்பு செயலாளர் மற்றும் பாதுகாப்பு பிரதானி களை சந்தித்து, மகிந்த ராஜ பக்ஷவின் பாதுகாப்புக்கு தேவையான வாகனங்களை பெறுவதற்கான கோரிக்கையை முன்வைப்போம் என்றும் அவர் தெரிவித்தார். (எ)

# தெஹிவளையில் துப்பாக்கிச் சூடு ஒருவர் கைது!

கொழும்பு, ஒக். 05
தெஹிவளை ரயில் நிலையத் துக்கு அருகில் துப்பாக்கிச் சூடு நடத்தி ஒருவரை கொலை செய்ய முயன்ற சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் நேற்று ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
கடந்த ஜூலை மாதம் 18 ஆம் திகதி அன்று, தெஹிவளை ரயில் நிலையத்துக்கு அருகில் மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு அடையாளம் தெரி யாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் படுகாயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட் டார்.
கல்கிஸ்ஸ குற்றப் புலனாய் வுப் பிரிவின் விசாரணையின் பின், துப்பாக்கிச் சூட்டுக்கு வந்த மோட்டார் சைக்கிள் சாரதி கைதுசெய்யப்பட்டுள் ளார்.
சந்தேக நபரிடமிருந்து 50 கிராம் ஐஸ் போதைப்பொருள், ஐந்து வாள்கள் மற்றும் ஒரு கத்தி ஆகியவை மீட்கப்பட் டுள்ளன. அவர், கல்கிஸ்ஸ சீவலி வீதிப் பகுதியில் வசிக்கும் 34 வயதுடையவர் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரி வித்துள்ளது. (எ)

# வைக்கோலுக்கு தீ வைத்த விவசாயி உயிரிழப்பு!

பொலநறுவை, ஒக். 05
ஹிங்குரக்கொடை வரா ஹேன பகுதியில் விவசாயி ஒரு வர் நேற்று முன்தினம் மதியம் தனது வயலில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி உயிரிழந்தார்.
இவ்வாறு, உயிரிழந்த நபர் ஹிங்குரக்கொடை போகஸ் சந்தி பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.
அவர், வரும் போகத்துக் காக நெல் வயலைத் தயார் செய்யும் நோக்கில் அறுவடை செய்த பின்னர் மீதமுள்ள வைக் கோலுக்கு தீ வைத்தார்.
இந்த நிலையில், வெப்ப மான வானிலை மற்றும் கடும் காற்று வீசியதால் தீ பரவி, அவர் அதில் சிக்கினார்.
அப்பகுதியில் வசிப்பவர் ஒருவர், அவரை தீயில் சிக்கிய நிலையில் கண்டு, மற்றவர்க ளுக்கு தகவல் தெரிவித்தாலும், அவர் ஏற்கனவே பலத்த காயங் களுக்குள்ளாகி உயிரிழந்தார்.
உயிரிழந்தவரின் சடலம், பிரேதப் பரிசோதனைக்காக பொலநறுவை பொது மருத் துவமனைக்கு கொண்டு செல் லப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் தொடர்பில் ஹிங்குரக்கொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (எ)

# கெஹெல்பத்தர பத்மேவின் தாய் நீதிமன்றில் மனு தாக்கல்

கொழும்பு, ஒக். 05
தற்போது பொலிஸ் தடுப் புக் காவலில் வைக்கப்பட்டுள்ள பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த "கெஹெல்பத்தர பத்மே" எனப்படும் தாயார் மேன் முறையீட்டு நீதிமன்றில் ரிட் மனு தாக்கல் செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.
ரிட் மனுவில் குறிப்பிடப் பட்டுள்ளதாவது, கெஹெல் பத்தர பத்மேவை பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்திருப் பது சட்டவிரோதமானதாகும். பொலிஸ் தடுப்புக் காவலில் இருக்கும் போது கெஹெல்பத் தர பத்மேவை குற்றப் புல னாய்வுத் திணைக்களத்தில் இருந்து வேறு இடங்களுக்கு கொண்டு செல்ல முடியாது என உத்தரவிடுமாறு இந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.
இதனைக் கருத்தில் கொண்ட நீதிவான் இந்த ரிட் மனு எதிர் வரும் 23 ஆம் திகதி விசார ணைக்கு உட்படுத்தப்படும் என உத்தரவிட்டுள்ளார்.
இந்தோனேஷியாவில் குற் றப் புலனாய்வு திணைக்கள அதி காரிகள் மற்றும் இந்தோனே ஷியா பொலிஸாரால் 7 நாட்க ளாக மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவ டிக்கையின் போது "கெஹெல் பத்தர பத்மே", "கொமாண்டோ சலிந்த" மற்றும் "பாணந்துறை நிலங்க" உள்ளிட்ட 6 பேர் அடங்கிய பாதாள உலகக் கும்பல் ஒகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி கைது செய்யப்பட்டது.
இவ்வாறு கைது செய்யப் பட்ட பாதாள உலகக் கும்ப லில் இருந்த "பக்கோ சமனின்" மனைவி ஒகஸ்ட் 29 ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத் துக்கு அனுப்பி வைக்கப்பட்ட நிலையில் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட் டதையடுத்து தற்போது விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.
இதனையடுத்து "கெஹெல் பத்தர பத்மே" உள்ளிட்ட ஐந்து பேர் கொண்ட பாதாள உலகக் கும்பல் ஒகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டதையடுத்து அவர்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விசார ணைக்குட்படுத்தப்பட்டு வரு கின்றமை குறிப்பிடத்தக்கது.

# வடிகானிலிருந்து சிசு ஒன்று மீட்பு

மாத்தளை, ஒக். 05
மாத்தளை, பிடகந்த தோட் டத்தில் உள்ள பழைய தேயி லைத் தொழிற்சாலைக்கு அருகி லுள்ள வடிகானில் புதிதாகப் பிறந்த சிசு ஒன்று வீசப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட் டுள்ளது.
கந்தேனுவர பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படை யில் சிசு மீட்கப்பட்டது.
சிசு, மாத்தளை பொது மருத் துவமனையில் ஒப்படைக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது.
சிசுவின் பெற்றோர்கள் அல் லது பாதுகாவலர்கள் குறித்து இதுவரை எந்தத் தகவலும் வெளியாகவில்லை.
கந்தேனுவர பொலிஸார் மேலதிக விசாரணைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வரு கின்றனர். (எ)

# போதைப்பொருள் குறித்து தகவல் வழங்க புதிய தொலைபேசி இலக்கம் அறிமுகம்

கொழும்பு, ஒக். 05
நாட்டின் பல பகுதிகளிலும் ஹெரோயின், ஐஸ், கொக்கைன் மற்றும் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்களின் பர வல் குறித்து பொலிஸாருக்கு நேரடி தகவல்களை வழங்குவ தற்காக புதிய தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளதாக பொலிஸ் தலை மையகம் தெரிவித்துள்ளது.
ஒவ்வொரு மாகாணங்களுக் கும் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர்களின் தொலைபேசி இலக்கங்கள் முன்னதாக ஊடகங்களுக்கு வெளியிடப்பட்டன.
சிரேஷ்ட பொலிஸ்மா அதி பர்களின் கீழ் உள்ள மாவட்ட பொலிஸ்மா அதிபர்கள் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் கண்காணிப் பாளர்களின் தொலைபேசி இலக் கங்களும் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளன.
அவற்றுக்கு தொடர்பை ஏற்படுத்தி, போதைப்பொருள் தொடர்பான தகவல்களை பொதுமக்கள் வழங்கலாம் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரி வித்துள்ளது.
போதைப்பொருள் அச்சுறுத் தலை ஒழிப்பதில் பொதுமக் களின் ஆதரவு பெரிதும் பாராட்டப்படுவதாகவும் பொதுமக்களால் வழங்கப்படும் தகவல்களின் இரகசியத்தன் மையை பாதுகாக்க இலங்கை பொலிஸ் பாடுபடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
05.10.2025 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், புரட்டாதி 19

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# யாரிடம் விவரங்கள் உண்டு

ஐ.நா மனித உரிமை பேரவை அமர்வுகள் இடம்பெறும் போது தமிழர்களுக்கான நீதி பற்றி பேசுவதும், விவாதிப்பதும் ஒரு வழக்கமான நிகழ்வு. கோவில் திருவிழாக் காலத்தில் பஜனைகள், சொற்பொழிவுகள் இடம்பெறுவது போன்று, சில சொற்பொழிவாளர்கள் நீதி பற்றியும், ஐ.நா பற்றியும் பேசுவதும் வழக்காமானது. இன்று உலகெங்கும் பலஸ்தீனத்திற்கு ஆதரவாக பெரும்திரளான மக்கள் குரலெழுப்புகின்றனர். அது இஸ்ரேலின் நகர்வுகளை தடுத்து நிறுத்தவில்லை - அதற்கு காரணங்கள் இருக்கின்றன.

ஏனெனில், யூதர்களின் செல்வாக்கும் அவர்களுக்கான பாதுகாப்பு அரணாக அமெரிக்கா இருப்பதும் சாதாரண விடயமல்ல. ஆனால், ஐரோப்பா முழுவதும் பலஸ்தீனத்திற்கு ஆதரவான பொது மக்கள் குரலுண்டு. அவ்வாறான குரலில் சிறிதளவாவது ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக இருக்கின்றதா? ஏன் அவ்வாறில்லை?

கடந்த பதினாறு வருடங்களாக ஏராளமான நீதிச் சொற்பொழிவுகளை நிகழ்த்திய போதிலும் கூட, ஏன் ஈழத் தமிழ் மக்களின் பக்கமாக உலகளாவிய அனுதாபம் ஏற்படவில்லை. யுத்தத்தின் இறுதி கட்டத்தில் பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் யுத்த வலயத்திற்குள் அகப்பட்டுக் கிடந்த சந்தர்ப்பத்தில் கூட அவ்வாறான குரல்கள் வெளிவரவில்லையே ஏன்?

இதையெல்லாம் ஒரு புறம் வைத்தாலும் கூட, யுத்தம் முடிவுற்று பதினாறு ஆண்டுகள் கடந்துவிட்ட பின்னரும் கூட, இன்றுவரையில் இறுதி யுத்தத்தின்போது கொல்லப்பட்டவர்கள், காணாமலாக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் என்னும் விவரங்கள் யாரிடமாவது இருக்கின்றதா? இப்போதும் தகவல்களை சேகரிக்கப் போவதாக கூறப்படுகின்றது என்றால், இதுவரையில் இந்த விடயங்கள் தொடர்பில் பேசிவந்த அரசியல் தரப்புக்கள், சிவில் சமூகத் தரப்புக்கள் என்ன செய்து கொண்டிந்தன?

இன்றைய உலக அரசியல் சூழலில், நீதிக்கான உலகளாவிய பொறிமுறை என்பது மிகவும் பலவீனமான நிலையில் இருக்கின்றது. இதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. அவ்வாறான கரணங்கள் எவற்றின் மீதும் பாதிக்கப்பட்ட மக்கள் செல்வாக்குச் செலுத்தவும் முடியாது. ஆனால், நிலைமைகளை புரிந்து கொண்டு செயல்படுவது அவசியமானது.

நீதிக்கான குரலை உயர்த்திப் பிடிக்க முற்பட்டால் ஆகக் குறைந்தது அதற்கான முயற்சிகளை நேர்த்தியாக முன்னெடுக்க வேண்டும். முறையான ஆவணப்படுத்தல் இருக்க வேண்டும். முடிந்தவரையில் உள்ளக அரசியல் மட்டத்தில் கருத்தொருமிப்பு இருக்க வேண்டும். இன்று இராஜதந்திர சமூகமே நீங்கள் ஒற்றுமையாக வரவேண்டும் என்று கூறும் நிலையிருக்கின்றது என்றால், தமிழர் அரசியல் சமூகம் எந்தளவிற்கு பலவீனமாக இருக்கின்றது என்பதை புரிந்து கொள்ள முடியுமல்லவா!

இன்றைய உலக அரசியல் பரப்பில் பாதிக்கப்பட்டிருக்கின்றோம் என்னும் ஒப்பாரிகள் ஒரு போதும் நீதியை நிலைநாட்டப் பயன்படப் போவதில்லை. பலம்பெருந்திய நாடுகளின் ஆடு களத்தில் பாதிக்கப்பட்டவர்களின் குரலுக்கு எவ்வித பெறுமதியும் இல்லை. பாதிக்கப்பட்டவர்கள் தங்களின் பலம் எங்கு திரண்டிருக்கின்றது என்பதை புரிந்து கொண்டு செயல்பட்டால் மட்டும்தான், பாதிக்கப்பட்டவர்களின் சத்தம் மற்றவர்களின் காதுகளில் விழும். அதற்கேற்றவாறு செயல்பட வேண்டும். அவ்வாறில்லாது விட்டால், திருவிழாக் காலத்தில், கோவில்களில் நிகழும் சொற்பொழிவுகள் போன்றுதான், தமிழரின் நீதிக்கான கதை சொல்லலும் முடிவுறும். கடந்த பதினாறு வருடங்களாக தமிழர் தரப்புக்கள் தங்களின் பலம் எங்கு திரண்டிருக்கின்றது என்பதை புரிந்து கொண்டு செயல்பட்டனரா - செயல்படவில்லையாயின் ஏன் செயல்படவில்லை என்பது தொடர்பில் தங்களை தாங்களே திரும்பிப்பார்க்க வேண்டும்.

# காரைநகர் விக்காவிலில் நீர்ப்பாவனையாளர் வட்டம்

யாழ்ப்பாணம் ஒக். 04

யாழ்ப்பாணம் - காரைநகர் கிராமத்தின் விக்காவில் சிவகாமி அம்மன் சனசமூக நிலைய மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 'நீரைக் கொண்டாடுவோம்" எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற நிகழ்வில் நீர்ப்பாவனையாளர் வட்டம் உருவாக்கப்பட்டது.

மக்கள் பிரதிநிதிகளும், ஊர் மக்களும் இணைந்து ஒழுங்கு செய்த இந்த விழாவில் ஜே - 48 கிராம அலுவலர் சிதம்பரம்பிள்ளை திருமகள், சமுர்த்தி அலுவலர் செந்தில்நாதன் தேவமலர், வஸ்பர் செயற்திட்ட ஒருங்கிணைப்பாளரும் ஓய்வுநிலை பேராசிரியருமான ந. சிறிஸ்கந்தராஜா, மூத்த நீரியல் ஆய்வாளர் ரமேஸ் பொன்னம்பலம், உளநல மருத்துவர் சி. சிவதாஸ், பல்லுயிர் இணை நிறுவனர் காரை நிரோஜன் மற்றும் வஸ்பர் செயற் திட்டத்தின் சார்பில் ஆய்வாளர்களும் கலந்து கொண்டனர்.

முழுத் தீவுக்குமான பாதுகாப்பான நீர் வளத்தை உறுதி செய்யும் செயற்பாட்டின் முதற்படியாக விக்காவில் பகுதி நீர்ப்பாவனையாளர் வட்டம் அங்குள்ள சமூக பிரதிநிதிகள் பலர் சேர்ந்து இயக்கவிருக்கும் இச்செயல் திட்டம் ஒழுங்கமைக்கப்பட்டு தொடங்கப்பட்டது.

இந்நிகழ்வில் கடந்த ஐந்து ஆண்டுகளாக காரைநகர் கிராமத்தில் நடைபெற்ற நீர்சார் அளவீடுகள் ஆய்வுகளின் பெறுபேறுகளைத் தொடர்ந்து, அடுத்த சில ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட உள்ள நீர் சார்ந்த தரவுகளை திரட்டும் பணிகளைப் பற்றியும் அதற்கு இசைவான வகையில் மக்கள் மயப்படுத்தப்பட்ட நீர் ஆளுகைக்குரிய மேலும் கட்டமைப்புகளை உருவாக்குவது பற்றியும் பேசப்பட்டது.

தொடர்ந்து ஊர்மக்களின் முழுமையான பங்களிப்பில் உருவான "நீர் வளம் பேணுவோம்" நாடகமும், சித்தாகாஸ் நடன நிறுவ னத்தின் இயக்குநரான இராசையா தனராஜின் பரத நாட்டிய ஆற்றுகையும், சிறார் நடன நிகழ்வும், நீர் சார்ந்த பேச்சும் இடம்பெற்றது. (அ-02)

# பயிற்றப்பட்ட ஆசிரியர் தராதரப்பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு கோப்பாய் கலாசாலையில்!

யாழ்ப்பாணம், ஒக். 05

45 ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்றப்பட்ட ஆசிரியர் தராதரப்பத்திர சான்றிதழ் வழங்கும் விழா நேற்று முன் தினம் காலை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் சிறப்புற இடம்பெற்றது.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இசுறுபாய கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்விக்கான பணிப்பாளர் திருமதி ஶ்ரீமா திசாநாயக்க கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக தேசிய கல்வி நிறுவகத்தின் நிறுவன அபிவிருத்திக்கான பணிப்பாளர் டபிள்யு.ஜீ.எஸ். குமார, நூலகத்திற்கான பணிப்பாளர் , சரத் நந்தகுமார, கொட்டகலை ஆசிரியர் கலாசாலையின் அதிபர் சு.பிரசாந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவர்களுடன் கம்பஹா ஆசிரிய மத்திய நிலைய விரிவுரையாளர்கள் எம்.ஏ.எம்.ரிப்தி, எம் டபிள்யு.எம் ரப்சி ஆகியோரும், கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்வி நிர்வாகப்பிரிவு உத்தியோகத்தர்களான அனந்த சந்திரகுமார, டிலினி சத்துரிகா, சேர்மிளா தமயந்தி, உதார சஞ்சய ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் ஆரம்பத்தில் கலாசாலையில் அமைந்துள்ள சிவன் ஆலயத்தில் விசேட பூசை இடம்பெற்றது. தொடர்ந்து ராஜீத் குழுவினரின் மங்கல நாதஸ்வர இசையுடன் குடை, ஆலவட்டங்கள் முதலிய மங்கல பொருட்கள் சகிதம் வரவேற்பு ஊர்வலம் இடம்பெற்றது.

தேசியக்கொடி, கலாசாலைக்கொடி என்பன ஏற்றப்பட்டமையைத் தொடர்ந்து சரஸ்வதி சிலைக்கான வழிபாடு முன்னெடுக்கப்பட்டது.

அடுத்து மங்கல விளக்கேற்றல் இடம் பெற்றது. அதனைத் தொடர்ந்து



இறைவணக்கம் இசைக்கப்பட்டது.

கலாசாலையின் பிரதி அதிபர் க.செந்தில் குமரன் வரவேற்புரை ஆற்றினார். கலாசாலை அதிபர் தலைமையுரை ஆற்றினார் தொடர்ந்து பிரதம விருந்தினர் கொஞ்சும் தமிழில் தனது உரையை ஆற்றி சபையோரை மகிழ்வித்தார்.


தொடந்து கலாசாலையின் 102 ஆவது கல்லூரி நாளை அடையாளப்படுத்தும் வகையில் கேக் வெட்டப்பட்டது. பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஆசிரியர் கல்விக்கான பணிப்பாளர் கேக்கை வெட்டினார்.

தொடந்து விருந்தினர்களுக்கான கௌரவம் இடம்பெற்றது. கலாசாலை முகாமைத்துவ குழுவினர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்க அதிபர் நினைவுச்சின்னங்களை வழங்கி கௌரவித்தார்.

அதனை அடுத்து 45 ஆசிரியர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. அவர்களுக்கான பதக்கங்கள் அணிவிக்கப்பட்டு சான்றிதழ் பிரதிகள் கையளிக்கப்பட் டன.

சான்றிதழ் வழங்குவோருக்கான பெயர்ப் பட்டியலை பிரதிஅதிபர் த.கோபாலகிருஷ்ணனும் மாணவர் மன்றக் காப்பாளர் திருமதி சிவலோசனி சுரேந்திரனும் முன்னிலைப்படுத்தினார். (அ-05)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறமொழி கலப்பின்றி பேசுவோம்!


இரா. கற்பகம்

இன்று பிறமொழிக் கலப்பில்லாமல் தமிழில் பேசுவதும் எழுதுவதும் அரிதாகவும் கடினமாகவும் ஆகிவிட்டன. இருநூற்றி நாற்பத்தியேழு எழுத்துகள் ஒன்றோடொன்று சேரும்போது வார்த்தைகளுக்குப் பஞ்சம் ஏற்பட வாய்ப்பில்லையே! பிறகு ஏன் நாம் தனித் தமிழை விடுத்துப் பிறமொழிக் கலப்புடனேயே பேசுகிறோம்?, எழுதுகிறோம்?, அப்படியே தமிழில் பேசினாலும், எழுதினாலும் அதில் பிழைகள்?

ஒருவரைச் சந்தித்தால் முகமன் கூற, தமிழில் 'வணக்கம்' என்ற அழகிய வார்த்தை இருக்கிறது. ஆனால், நாம் 'குட்மோர்னிங்' என்றுதான் பெரும்பாலும் கூறுகிறோம். ஒருவரிடம் விடை பெறும்போது 'போய் வருகிறேன்' என்று சொல்வதும், அவர் 'போய் வாருங்கள்' என்று சொல்வதும் வெறும் வார்த்தைப் பிரயோகம் அன்று. 'மீண்டும் உங்களைச் சந்திக்க வருகிறேன்' என்று விருந்தினர் கூறுவதாகவும், 'மீண்டும் எங்கள் வீட்டுக்கு வாருங்கள்' என்று உபசரிப்பவர் கூறுவதாகவும் அமைந்து, தமிழரின் விருந்தோம்பல் பண்பாட்டினைப் பிரதிபலிக்கிறது. நாமோ இந்த நல்ல வார்த்தைகளை விடுத்து 'குட்-பை', 'டாட்டா' என்று கூறுகிறோம்.

பஸ், பஸ் ஸ்டாண்ட், ட்ரெய்ன், ஸ்டேஷன், ஸ்கூல் , ஹொஸ்பிட்டல் என்பன போன்ற நம்மைச் சுற்றியுள்ள எல்லாப் பொருள்களையும் குறிக்க ஆங்கிலச் சொற்களுக்கு இணையாக, பேருந்து, பேருந்து நிறுத்தம், புகைவண்டி அல்லது (பேச்சுத் தமிழில்) ரயில், ரயிலடி, பள்ளிக்கூடம், கல்லூரி போன்ற தமிழ்ச் சொற்கள் இருந்தும் நாம் அவற்றைப் பயன்படுத்தத் தயங்குகிறோம். வீட்டிலுள்ள அறைகளுக்கும் இதே நிலைதான். கூடம், படுக்கையறை, சமையலறை, மாடிப்படி எல்லாம் மறந்து போய், ஹால், பெட்ரூம், கிச்சன், ஸ்டோர் என்றுதான் குறிப்பிடுகிறோம்.

வீட்டிலோ வெளியிலோ பெரியவர்களை 'ஐயா' என்றும் 'அம்மா' என்றும் அழைக்கிறோமா? இல்லை! சேர் என்றும் மேடம் என்றும் தான் அழைக்கிறோம். அதிலும் இந்த 'மேடம்' என்னும் வார்த்தை இருக்கிறதே, அது இன்று படும் பாடு! பெண்களில், படித்தவர்கள், படிக்காதவர்கள், பணியில் இருப்பவர்கள், பணியில் இல்லாதவர்கள், மரியாதைக்குரியவர்கள், அல்லாதவர்கள், பணக்காரர்கள், ஏழைகள் எல்லோருக்குமே 'மேடம்' என்ற ஒரே சொல்தான்! உறவு முறைகளைக் குறிக்கும் சொற்கள் - அம்மா, அப்பா, அண்ணன், தம்பி, அக்கா, தங்கை, சித்தி, சித்தப்பா, பெரிம்மா, பெரியப்பா, மாமா, மாமி, அத்தை, என்றெல்லாம் வார்த்தைகள் இருக்கின்றன. அதிலும் மாமாவின் மனைவி மாமி, அப்பாவின் சகோதரி அத்தை என்று உறவுகளைத் தெளிவாகக் குறிக்கின்றன. ஆனால் மம்மி, டாடி, ப்ரோ, சிஸ்டர், ஆண்ட்டி, அங்கிள் என்று நாம் ஏன் அழைக்க வேண்டும்?



பூங்கா, பொருட்காட்சி, நூலகம், அருங்காட்சியகம், அடுமனை, திரையரங்கம் போன்ற வார்த்தைகளைத் தவிர்த்து பார்க், எக்ஸிபிஷன், லைப்ரரி, மியூஸியம், பேக்கரி, சினிமா தியேட்டர் என்றுதான் குறிப்பிடுகிறோம். இந்த வார்த்தைகளெல்லாம் சிறிது சிறிதாக மறக்கப்பட்டு வருகின்றன. பனிக்கூழ்- ஐஸ்க்ரீம் கரிக்கோல்- பென்சில், அழிப்பான்-ரப்பர், எழுதுகோல்-பேனா என்று நாம் அன்றாடம் பயன்படுத்தும் பொருள்களுக்கெல்லாம் அழகிய தமிழ்ப் பெயர்கள் உள்ளன் நாம்தான் அவற்றைக் கூறத் தயங்குகிறோம்.

நம் மொழியில் பல்லாயிரம் வார்த்தைகள் இருக்க, நாம் பிறமொழி வார்த்தைகளை, குறிப்பாக ஆங்கில வார்த்தைகளைப் பயன்படுத்தக் காரணம் அறியாமை அன்று. 'ஆங்கிலத்தில் பேசுவது பெருமை, தமிழில் பேசுவது கேவலம்' என்ற மனப்போக்கே காரணம்! இப்படிப் பேசிப் பேசி, தமிழ் வார்த்தைகளே மறந்துபோய் ஆங்கில வார்த்தைகளையே பயன்படுத்தும் நிலைக்கு நாம் வந்து விட்டோம். மாணவர்களுக்கு ஆங்கில வார்த்தைகளுக்குத் தமிழில் அர்த்தம் சொல்லிக் கொடுத்த நிலை மாறி, இன்று தமிழ் வார்த்தைகளுக்கு ஆங்கிலத்தில் பொருள் சொல்லி விளக்க வேண்டியுள்ளது!

பிற இனத்தவர்கள் தங்கள் தாய்மொழியில் பேசுவதைக் கௌரவக் குறைவாக அவர்கள் கருதுவதில்லை. தமிழர்களாகிய நாம்தான் தாய்மொழியில் பேசுவதைக் கேவலமாகக் கருதி ஆங்கிலத்தில் பேசுகிறோம்.

தமிழ்த் திரைப்படங்களை எடுத்துக் கொள்வோம். தமிழில் பெயர் வைத்தால் வரிச் சலுகை என்றெல்லாம் அரசு அறிவித்தும்கூட, பல திரைப்படங்கள் ஆங்கிலப் பெயர்களோடு வருகின்றன. அவற்றுக்கு நல்ல தமிழ்ப் பெயர்களைச் சூட்ட இயலாதா? தமிழில் வார்த்தைப் பஞ்சமா அல்லது தமிழ்ப் பற்றுக்குப் பஞ்சமா?

'ஆ' என்ற உயிரெழுத்துக்கு, கீழே சுழி இருக்க வேண்டும். ஆனால், எந்த எழுத்துருவிலும் சுழி இல்லை என்பதால், அடிப்படை எழுத்தையே நாம் எல்லோரும் தவறாகத்தான் எழுதிக் கொண்டிருக்கிறோம். (இங்கும் அந்தத் தவறை நீங்கள் பார்க்கலாம்!) வல்லினம் மிகும், மிகா இடங்கள், ஒருமை, பன்மை, லகர, ழகர, ளகர வேறுபாடுகள்... இவற்றையெல்லாம் யாரும் பொருட்படுத்துவதில்லை.

நாளிதழ்களில் வெளியாகும் செய்திகளில் எத்தனை பிழைகள்- 'யானைகள் சாலையைக் கடந்தது' (கடந்தன என்பதே சரி) 'சென்னையில் கனமழை' (ஹெவி ரெய்ன் என்பதன் நேரடி மொழிபெயர்ப்பு தவறானது. பெருமழை என்பதே சரி) 'சித்தப்பாவை கொலை செய்த மகன் கைது' (இங்கு வல்லினம் மிகுந்து 'சித்தப்பாவைக் கொலை செய்த' என்று இருக்க வேண்டும்) 'மாணவர்கள் தேர்ச்சிப் பெற்றனர்' (இங்கு வல்லினம் மிகாது 'ப்' என்ற மெய்யெழுத்து வரக்கூடாது).

(14ஆம் பக்கம் பார்க்க)

## இந்தவார ராசிபலன் 05.10.2025 - 11.10.2025

ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம் - புரட்டாதி 19
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : சதுர்த்தசி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் புண்ணியத் தல யாத்திரைகள் ஏற்படும். பொருளாதார உயர்வினால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். பண வருவாய் அதிகரிக்கும். அரசு வகையில் அதிக அளவு நன்மைகளைப் பெறுவீர்கள். புதிய முதலீட்டுத் திட்டங்கள் மூலம் பணத்தைச் சேமிக்க முற்படுவீர்கள். வியாபாரிகளுக்கு எதிர்பார்த்தபடி வங்கிக் கடன்கள் சிரமமின்றிக் கிடைக்கும். தேர்வு முடிவுகள் பெற்றோர்களுக்கு மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் தனவரவு அதிகரித்து. அந்தஸ்தும் உயரும். மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரும். கேளிக்கை மற்றும் ஆடம்பர செலவுகள் அதிகமாவதின் காரணமாகப் பணமுடை ஏற்பட வாய்ப்பு உண்டு. நேர்மையும் கடின உழைப்பும் மட்டும் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றங்களைத் தரும். நண்பர்கள் அனுசரணையாக இருந்த போதிலும், அவர்களிடம் பேசும்போது எச்சரிக்கையுடன் பேசுங்கள். போட்டியாளர்களை காட்டிலும் அரிய சாதனைகள் புரிவார்கள்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். தாய் மாமனுக்கும் நன்மை ஏற்படும். தொலைதூரப் பயணங்களின் நன்மை ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். வாக்கால் நல்ல வருமானம் உண்டு. உறவுகளைச் சந்திப்பதால் மனமகிழ்ச்சி ஏற்படும். படுக்கை அறை சுகங்கள் மற்றும் நல்ல, ருசியான உணவு ஆகிய வையும் கிடைக்கும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் வீட்டில் சுபமங்கள காரியங்கள் காரணமாக தாராளமான பணச் செலவுகள் ஏற்படும் சுற்றமும், நட்பும் சூழ சுபகாரியப் பேச்சுகள் நடைபெறும். இனிய தகவல்கள் இல்லம் தேடி வரும். நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும். வீட்டு வாடகை வசூல் திருப்திகரமாக இருக்கும். வீட்டுக்குத் தேவையான நவீன உபகரணங்களை வாங்கி மகிழ்வீர்கள். வரவுக்கு மிஞ்சிய செலவுகள் ஏற்படும். எச்சரிக்கையுடன் செயல்பட்டு எதிரிகளின் திட்டங்களை முறியடிப்பீர்கள்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் உங்களுக்கு தெய்வ சிந்தனைகள் மூலம் மனதில் அமைதி நிலவும். ஆடை, ஆபரணங்கள், நல்ல உணவு, எதிர்பாராத தனவரவு ஆகியவை ஏற்படும். குடும்பத்திற்காக உங்கள் சந்தோஷங்களை தியாகம் செய்வீர்கள். அன்புக்கு இனியவர்களால் உங்கள் கண்ணீர் துளிகள் துடைக்கப்படும். கௌரவப் பட்டங்கள், பதவிகள் தேடிவரும். உயர் அதிகாரிகள் ஆதரவால் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் சுபகாரிய செலவுகள் ஏற்படும். புதிய முயற்சிகள் மூலம் பண வருமானம் அதிகரிக்கும். அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். நல்ல பல கருத்துக்களை கேட்பதின் மூலம் உங்களுக்கு ஞான தன்மை அதிகரிக்கும். பக்தி மார்க்கத்தில் செல்ல மனைவியின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும். புதிய கொள்முதல் மூலம் தொழிலில் அதிகமான வருவாய் பெருக்கம் ஏற்படும். தூர தேசங்களில் இருந்து எதிர்பார்த்த நல்ல செய்திகள் வரும் வாடிக்கையாளரிடம் நட்புப் பாராட்டும் வியாபாரிகளுக்கு அதிக லாபம் கிடைக்கும். வெற்றி பெறும் நாள்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் உங்களுக்கு இனிய வாரம். மனைவி மூலம் மட்டற்ற மகிழ்ச்சி நிலவும். வாக்கால் வருமானம் பெருகும். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு. விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்கிக் குவிப்பீர்கள். சுகமும் ஆடை ஆபரண சேர்க்கை, புத்திர பாக்கியம் மற்றும் எதிர்பாராத பண வரவுகள் ஆகியவை ஏற்படும். புதிய தொழில் முயற்சிகள் அரசு உதவியுடன் வெற்றி பெரும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் சுபகாரிய நிகழ்ச்சிகள், புத்திர பாக்கியம் ஆகியவற்றால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். மகான்களின் ஆசியும், புதிய தொடர்புகள் நன்மைகளும் ஏற்படும். போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். திடீர்ப் பயணங்கள் மூலம் ஆதாயங்கள் ஏற்படும். புதிய கடன்கள் வாங்கிப் பழைய கடன்களை அடைத்து விடுவார்கள். புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றி பெறும் காலம் கனிந்து வரும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் உடன்பிறப்புகளிடம் இருந்து நீங்கள் எதிர்பார்க்கும் பணவுதவி கள் கிடைக்கும். புதிய வீடு, பூமி வாங்கக் கூடிய சந்தர்ப்பங்கள் உருவாகலாம். வாகனங்களில் செல்லும் போது கவனமாக செல்லவும். எல்லா வசதிகளும் இன்பமும் ஏற்படும் என எதிர்பார்க்க முடியாது. ஏதாவது மனக்குறை இருந்து கொண்டே இருக்கும். தலைவலி போன்ற சிறு சிறு உபாதைகள் ஏற்படலாம். நல்ல உயர்ந்த மனிதர்களின், பண்பு மிக்கவர்களின் நட்பு ஏற்படும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் செயல்திறன் அதிகரிக்கும். வாகன வசதிகள் மேம்படும். அந்தஸ்து உயரும். புதுத்தெம்பு, உற்சாகமும் கூடும். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் பூரண சுகம் கிடைக்கும். சிலருக்கு, நண்பர்களும் பகைவர்களாக மாறும் காலமாதலால் நண்பர்களிடம் தடித்த வார்த்தைகளை பயன்படுத்தாமல் இருப்பது நல்லது. புதிய பெண்கள் தொடர்பு ஏற்படும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் சுக சௌகரியங்கள் அதிகரிக்கும்.. சுபசெய்திகளால் மனம் மகிழும். பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். சுபகாரிய நிகழ்ச்சிகள் மூலம் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணிபத்தால் தன லாபம் அதிகரிக்கும். வீட்டில் அமைதியும், நிம்மதியும் நிலவும். மனைவியின் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். வீண் செலவுகளை குறைத்து சேமித்து வைப்பது நல்லது.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். நல்ல பண்பாளர்களின் நட்பும், அன்பும் கிடைக்கும். மனதில் தெய்வ பக்தி மேலிடும். மனதில் நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். நல் ஆரோக்கியம் ஏற்படும். அழகான, எழில் நிறைந்த வீடு கிடைக்கும். தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. சிலருக்கு குடும்ப வாழ்க்கையில் குழப்பம் வரலாம். கடன் கொடுத்தவர்கள் கண்டிப்புடன் நடந்து கொள்வர். தொழிலில் ஏற்படும் இலாபம் மூலம் பண வருவாய் அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமைத்துவ ஆற்றலுக்கான முதல் பரீட்சையில் தோல்வி கண்ட விஜய்



வீரகத்தி தனபாலசிங்கம்

இந்தியாவில் கோவில் திருவிழாக்கள், மத ஒன்றுகூடல்கள், விளையாட்டுப் போட்டிகள் மற்றும் ரயில் நிலையங்களில் சன நெரிசலும் உயிரிழப்புகளும் ஒன்றும் புதியவையல்ல. அவை பெரும்பாலும் அடிக்கடி நிகழ்கின்ற அனர்த்தங்கள் என்று கூறலாம் விளையாட்டுப் சில திரைப்பட வெளியீட்டு நிகழ்வுகளிலும் கூட நெரிசலில் மக்கள் மரணமடைந்திருக்கிறார்கள்.

ஆனால், அரசியல் பொதுக்கூட்டங்களில் மிகவும் அரிதாகவே நெரிசல் மரணங்கள் ஏற்பட்டதாகவும் தமிழ்நாட்டில் கரூரில் நடிகர் ஜோசப் விஜய் சந்திரசேகரின் தமிழக வெற்றிக்கழகத்தின் பிரசாரக் கூட்டத்தில் செப்டெம்பர் 27 சனிக்கிழமை இரவு பெண்கள், குழந்தைகள், உட்பட 41 பேர் பலியான சம்பவமே அரசியல் பொதுக்கூட்டம் ஒன்றில் பெரும் எண்ணிக்கையில் மக்கள் மரணமடைந்த முதல் சம்பவம் என்று கூறப்படுகிறது.

இந்தியாவில் முதன் முதலாக ஒரு மாநிலத்தின் முதலமைச்சராக ஆட்சிக்கு வந்த சினிமா நடிகர் என்று வரலாறு படைத்த எம்.ஜி. இராமச்சந்திரனுக்காக மக்கள் மணிக்கணக்காக அல்ல, நாட்கணக்காக இரவுபகலாக காத்திருந்த காலம் ஒன்று இருந்தது. அப்போது கடந்த வாரம் விஜயின் கூட்டத்தில் இடம்பெற்றதைப் போன்ற எந்தவொரு அனர்த்தமும் ஏற்பட்டதில்லை என்று சுட்டிக்காட்டும் இந்திய ஊடகங்கள் எம்.ஜி.ஆரின் கட்சி அமைப்புரீதியாக வலிமையாக இருந்ததும் கிராமங்கள் வரையில் அரசியல் அனுபவமுடைய கட்சித் தலைவர்களும் தொண்டர்களும் இருந்ததுமே அதற்கு காரணம் என்று கூறியிருக்கின்றன.


விஜயின் தமிழக வெற்றிக்கழகம் அவரது சினிமாச் செல்வாக்கில் மாத்திரம் நம்பிக்கை வைத்து தொடங்கப்பட்ட கட்சி என்றும் அவருக்கு எந்த அரசியல் சிந்தனையோ அல்லது கோட்பாடோ கிடையாது என்றும் மற்றைய அரசியல் கட்சிகள் செய்துவந்த விமர்சனத்தை கரூர் சம்பவம் நிரூபித்திருக்கிறது என்றும் ஊடகங்கள் மாத்திரமல்ல, பல அரசியல் அவதானிகளும் கூறுகிறார்கள். பெருமளவில் மக்கள் கலந்துகொள்ளும் அரசியல் கூட்டங்களை பாதுகாப்பான முறையில் ஒழுங்குபடுத்தக்கூடிய அனுபவமும் ஆற்றலும் விஜயின் கட்சியினரிடம் இல்லாததையும் தனது இரசிகர்களை கட்டுப்பாடான கட்சித் தொண்டர்களாக மாற்றுவதில் அவர் அக்கறை காண்பிக்காததையுமே மக்கள் பலியானதற்கு பிரதான காரணம் என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது.

தமிழ்நாடு சட்டசபை தேர்தலுக்கு இன்னமும் ஏழு மாதங்கள் இருக்கும் நிலையில் தமிழக வெற்றிக் கழகத்தின் மகாநாடுகளிலும் விஜயின் பிரசாரக் கூட்டங்களிலும் ஆயிரக்கணக்கில் மக்கள் பங்கேற்றுவந்தது மற்றைய கட்சிகளுக்கு தடுமாற்றத்தை ஏற்படுத்தியது. அவரைப் பார்ப்பதற்காக திரளும் மக்கள் கூட்டம் தேர்தலில் வாக்குகளாக மாறப்போவதில்லை என்று வெளிப்படையாகவே அரசியல்வாதிகள் கூறிவந்தார்கள்.

கூட்டணி அமைப்பதற்கு சில மாதங்களுக்கு முன்னர் விஜய் விடுத்த அழைப்பை எந்த அரசியல் கட்சியுமே பொருட்படுத்தவில்லை. அதனால், அவர் தனது பிரசாரக் கூட்டங்களுக்கு பெருமளவில் மக்களை அணிதிரட்டி தனது செல்வாக்கை நிரூபிப்பதில் தீவிர கவனத்தைச் செலுத்தினார் என்று தெரிகிறது. ஆயிரக் கணக்கில் மக்கள் கூடும் வரை பிரசாரக் கூட்ட அரங்குகளுக்கு வருவதை தாமதிக்கும் ஒரு யுக்தியை அவர் கடைப்பிடித்தார் என்பது வெளிப்படையானது.

அனர்த்தத்தில் முடிந்துபோன கரூர் கூட்டத்துக்கு முன்னதாக அவரின் சில பிரசாரக் கூட்டங்களில் நினைத்துப் பார்க்க முடியாதளவு மக்கள் திரண்டதால் சனநெரிசல் ஏற்பட்டு குழப்பநிலை ஏற்பட்டதற்கு பின்னரும் கூட அத்தகைய ஆபத்தான நிலைவரம் மீண்டும் தோன்றுவதை தடுப்பதற்கு தமிழக வெற்றிக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் உகந்த முன்னேற்பாடுகளைச் செய்வதில் கவனம் செலுத்தவில்லை என்றும் குற்றச்சாட்டப்படுகிறது.

எல்லாவற்றுக்கும் மேலாக, கரூரில் அனர்த்தம் நிகழ்ந்த மறுகணமே விஜய் தனது பிரசார வாகனத்தில் இருந்து



இறங்கி தனது தனிப்பட்ட விமானத்தில் சென்னைக்கு திருப்பி விட்டார். இறந்தவர்களின் குடும்பத்தவர்களைச் சந்தித்து அவரோ அல்லது அவரது கட்சி முக்கியஸ்தர்களோ ஆறுதல் கூறவில்லை என்பது மாத்திரமல்ல காயமடைந்தவர்களை வைத்தியசாலைகளுக்கு சென்று பார்வையிடவுமில்லை.

நான்கு மணித்தியாலங்களுக்கு பிறகு சமூக ஊடகத்தில் தனது அனுதாபத்தை தெரிவித்த விஜயின் செயல் அவர் இன்னமும் ஒரு சினிமா நடிகராக இருக்கிறாரே தவிர மக்களின் நலன்களில் அக்கறைகொண்ட அரசியல் தலைவராக தன்னை மாற்றிக் கொள்ளவில்லை என்பதை வெளிக்காட்டியது. முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், அவரது அமைச்சர்கள் மற்றைய கட்சிகளின் தலைவர்கள் உடனடியாகவே வைத்தியசாலைகளுக்கு சென்று காயமடைந்தவர்களை பார்வையிட்ட அதேவேளை, விஜய் தனது பிரசாரங்களை இரு வாரங்களுக்கு ஒத்திவைப்பதாக அறிவித்தாரே தவிர, பாதிக்கப்பட்ட மக்களைச் சந்திக்கவில்லை. மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 10 இலட்சம் ரூபா இழப்பீட்டை முதலமைச்சர் அறிவித்த பிறகு 20 இலட்சம் ரூபா இழப்பீட்டு அறிவிப்பு விஜயிடமிருந்து வந்தது.

கரூரில் அவரைப் பார்ப்பதற்காக பகல் பூராவும் உணவோ தண்ணீரோ இன்றி சுட்டெரிக்கும் வெயிலில் காத்திருந்த மக்களுக்கு நேர்ந்த அனர்த்தத்துக்கு பின்னர் விஜய் நடந்து கொண்ட முறை அவரது அரசியல் தலைமைத்துவ ஆற்றல் எதிர்நோக்கிய முதல் பரீட்சையிலேயே அவர் தோல்வி கண்டுவிட்டார் என்பதை நிரூபித்திருக்கிறது. தன்னில் தவறு இருப்பதாக அவர் இன்னமும் வெளிப்படையாக ஒத்துக் கொள்ளவில்லை. மக்களிடம் மன்னிப்பும் கேட்கவில்லை. தன்னைப் பார்க்க வந்த மக்கள் வீதிகளில் மயங்கி வீழ்ந்து கொண்டிருந்த வேளையில், சினிமா படப்பிடிப்பு ஒன்றை இடையில் நிறுத்திவிட்டு வீடு திரும்புபவர் போல அவர் நடந்து கொண்டமை பாரதூரமான நிலைவரங்களை கையாளுவதிலும் முதிர்ச்சியான தீர்மானங்களை எடுப்பதிலும் அவரின் அனுபவமின்மையை வெளிக்காட்டியது.

விவேகமும் மக்களின் நலன்களில் அக்கறையும் கொண்ட ஓர் அரசியல்வாதி விஜய் நடந்துகொண்ட விதத்துக்கு முற்றிலும் மாறாகவே நிச்சயமாக நடந்து கொண்டிருப்பார். அனர்த்தம் நிகழ்ந்த இடத்தில் குழப்ப நிலையை கட்டுப்படுத்துவதற்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கும் தனது கட்சி உறுப்பினர்களுடன் சேர்ந்து விஜய் முயற்சி செய்திருக்க வேண்டும்.

சம்பவத்துக்கு பிறகு புத்திசாலிகளாக பேசுவது சுலபம். அரசியல் பிரசாரக் கூட்டங்களில் கலந்துகொள்ளும் மக்கள் பாதிக்கப்படாத வகையில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடுகள் குறித்து தற்போது அரசியல்வாதிகளும் ஊடகங்களும் அறிவுரை கூறிவருகிறார்கள்.

கரூரில் இடம்பெற்றதைப் போன்று பொது நிகழ்வுகளில் சனநெரிசல் ஏற்படாதிருப்பதை உறுதிசெய்வதற்கு விதிமுறைகளை வகுக்க அரசியல் கட்சிகளுடனும் பொது அமைப்புக்களுடனும் கலந்தாலோசனை நடத்தவிருப்பதாக அறிவித்திருக்கும் முதலமைச்சர் ஸ்ராலின் கரூர் அனர்த்தம் குறித்து விசாரணை செய்வதற்கு ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி ஒருவரைக் கொண்ட தனிநபர் ஆணையம் ஒன்றை நியமித்திருக்கிறார். அந்த ஆணையம் கையளிக்கும் அறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் அறிவித்திருக்கிறார்.

ஏற்கெனவே ஐந்து மாவட்டங்களில் தனது கட்சி பிரசாரக் கூட்டங்களை நடத்தியபோது நிகழாத அசம்பாவிதங்கள் கரூரில் மாத்திரம் எவ்வாறு நேர்ந்தது என்று கேள்வி எழுப்பியிருக்கும் விஜய் சதி ஒன்று இடம்பெற்றிருக்கிறது என்பது போன்று சந்தேகத்தைக் கிளப்புகிறார். விஜயின் கட்சி தங்களுக்கு ஒரு பெரிய சவாலாக அமையாமல் இருப்பதை உறுதிசெய்வதற்கு ஆளும் திராவிட முன்னேற்றக் கழகமும் ஏனைய கட்சிகளும் கரூர் அனர்த்தத்தை தங்களால் இயன்ற அளவுக்கு பயன்படுத்துவார்கள் என்பதில் சந்தேகமில்லை. தனக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடியை விஜய் எவ்வாறு கையாளப் போகிறார் என்பதிலும் அவரது அரசியல் எதிரிகள் அனர்த்தத்தை எவ்வாறு தங்களது அரசியல் அனுகூலத்துக்காக பயன்படுத்தப் போகிறார்கள் என்பதிலுமே அவரின் எதிர்கால வாய்ப்புக்கள் தங்கியிருக்கின்றன.

## குழப்பகரமான அரசியல் நிலைப்பாடு

நெருக்கடியான சூழ்நிலைகளை கையாளுவதில் விஜயின் அனுபவமின்மையும் பொறுப்புணர்வின்மையும் ஒருபுறமிருக்க, அவர் தமிழக வெற்றிக் கழகத்தை தொடங்கிய நாட்களில் (2024 பெப்ரவரி) இருந்து தனது அரசியல் கொள்கையை பொறுத்தவரையிலும் கூட குழப்பகரமான கருத்துக்களையே கூறிவருகிறார்.

மத்தியில் பாரதிய ஜனதாவும் மாநிலத்தில் திராவிட முன்னேற்றக் கழகமும் தனது அரசியல் எதிரிகள் என்று கூறிய அவர் தனது கோட்பாட்டு வழிகாட்டிகளில் ஒருவராக பெரியார் ஈ.வெ. இராமசாமியை குறிப்பிட்டார். அம்பேத்காரின் கொள்கைகளையும் புகழ்ந்து பேசும் விஜய் திராவிட முன்னேற்றக்கழகத்தின் நீண்டகால நேசக்கட்சியான காங்கிரஸிடமிருந்து தூரவிலகியிருந்தாலும், காமராஜரின் இலட்சியங்களை பின்பற்றுவதாக உறுதியளித்தார்.

2025 ஆகஸ்ட் 21 ஆம் திகதி மதுரையில் நடைபெற்ற தமிழக வெற்றிக்கழகத்தின் மகாநாட்டு அரங்கை முன்னாள் முதலமைச்சர்களான அண்ணாத்துரையினதும் எம்.ஜி.ஆரினதும் பிரமாண்டமான 'கட் அவுட்கள்' அலங்கரித்தன. திராவிட கட்சிகள் பாதைமாறிப் போய்விட்டதால் தமிழ்நாட்டுக்கு புதியதொரு பாதையை காட்டப் போவதாக அவர் கூறுகிறார்.

காங்கிரஸ் கட்சியை தோற்கடித்து அண்ணாத்துரை தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகம் 1967 ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்ததையும் கருணாநிதி தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகத்தை தோற்கடித்து எம்ஜி.ஆர். 1977 ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்ததையும் உதாரணங்களாக சுட்டிக்காட்டும் விஜய் அதேபோன்று 2026 சட்டசபை தேர்தலிலும் வரலாறு திரும்பப் போகிறது என்று பேசுகிறார்.

நீண்டகால அரசியல் போராட்டங்கள் மற்றும் அனுபவங்களுக்கு பிறகு முதலமைச்சர்களாக பதவிக்குவந்து அண்ணாத்துரையும் எம்.ஜி. ஆரும் படைத்த சாதனையை தன்னாலும் நிகழ்த்திக்காட்ட முடியும் என்று ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் அரசியலில் பிரவேசித்த விஜய் கூறுவது மிகவும் நகைப்புக்கிடமானதாக இருக்கிறது. வெறுமனே அரசியல் சுலோகங்கள் வரலாற்றைத் திருப்பி எழுதுவதில்லை. தனது கட்சியிடம் தெளிவான அரசியல் நிகழ்ச்சி நிரலோ அல்லது மாற்றுத்திட்டமோ இல்லாமல் இன்னும் ஏழு மாதங்களில் முதலமைச்சராக வருவதற்கு அவர் கனவு காண்கிறார்.

தமிழ்நாட்டு மக்கள் சினிமா நட்சத்திரங்கள் மீது கொண்டிருக்கும் வெறித்தனமான பக்தியின் விளைவாக மாநில அரசியலில் ஆழமாக வேரூன்றிவிட்ட ஆரோக்கியமற்ற ஒரு கலாசாரத்தையும் கரூர் அனர்த்தம் மீண்டும் அம்பலப்படுத்தியிருக்கிறது.

பொருளாதாரத்திலும் கல்வி மற்றும் சமூகநீதியிலும் பாரிய முன்னேற்றங்களை கண்டிருப்பதாக பெருமை பேசுகின்ற ஒரு மாநிலத்தில் சினிமா கவர்ச்சி தொடர்ந்தும் அரசியலைத் தீர்மானிக்கின்ற போக்கு துரதிராஷ்டவசமானது. எவரும் அரசியலில் பிரவேசிக்கலாம். ஆனால், தமிழ்நாட்டில் மாத்திரமே திரைப்படங்களில் மக்களைப் பாதுகாப்பவர்களாகவும் நீதிக்காக உயிரைக் கொடுத்துப் போராடுபவர்களாகவும் வேடங்களில் நடிப்பவர்கள் அரசியலில் பிரவேசிப்பதற்கும் முதலமைச்சராக வருவதற்கும் தங்களுக்கு உரிமையும் அருகதையும் இருப்பதாக நினைக்கிறார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு அபிவிருத்தியும் பேச்சுவார்த்தையும் ஒருங்கிசைந்து செல்லவேண்டியது அவசியம்



கலாநிதி ஜெகான் பெரேரா

வடக்கில் புதிய உத்வேகம் ஒன்றைக் காணக்கூடியதாக இருக்கிறது. எச்சரிக்கையுடன் நம்பிக்கையுணர்வைக் கொண்டிருப்பதற்கு காரணம் இருப்பதாக வடக்கைச் சேர்ந்த அரசாங்க அதிகாரிகள் உறுதிப்படுத்தினார்கள். போரின் முடிவுக்கு பின்னரான காலப்பகுதியில் முன்னர் எந்தவொரு கட்டத்திலும் காணமுடியாமல் இருந்த பெருமளவு அபிவிருத்தி நடவடிக்கைகளை தற்போது காணக்கூடியதாக இருக்கிறது. கடந்த ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க யாழ்ப்பாண மாவட்டத்தில் சுமார் 27, 000 வாக்குகளைப் பெற்றார். ஆனால், இன்று அவர் மீண்டும் போட்டியிடுவாரேயானால், 200,000 வாக்குகளைப் பெறக்கூடும்.

இது ஒருவரின் அபிப்பிராயமாக இருக்கலாம், ஆனால் இது சகல சமூகங்களையும் அரவணைத்துச் செல்லும் அரசாங்கத்தின் போக்கு மற்றும் நீண்டகாலமாக மறுக்கப்பட்ட சேவைகள் நடைமுறையில் கிடைத்து வருவது தொடர்பில் யாழ்ப்பாண மக்களிடமிருந்து வருகின்ற நேர்மறையான ஒரு பிரதிபலிப்பின் வெளிப்பாடேயாகும். சகலரையும் சமத்துவமாக நடத்துவது மற்றும் அரசியல் கருவியாக இனப்பிளவை பயன்படுத்தும் போக்கை நிராகரிப்பதை பற்றி பேசும் ஜனாதிபதியின் கொள்கைகளின் விளைவாக ஜனாதிபதியில் நம்பிக்கை அதிகரித்து வருவதன் ஒரு பிரதிபலிப்பாகவும் இது அமைகிறது.

மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்தின் அபிவிருத்தி தாமதித்து என்றாலும் முன்னெடுக்கப்பட்டிருக்கும் ஒரு சரியான நடவடிக்கையாகவும் அரசாங்கத்தின் வாக்குறுதிகளின் பிரகாரம் வசதி குறைந்தவர்களுக்கு பயன்தரும் ஒரு அபிவிருத்தியாகவும் பரவலாக நோக்கப்படுகிறது. இராணுவ ஆக்கிரமிப்பின் விளைவாக பல வருடங்களாக இடம்பெயர்ந்து வாழ்ந்த மீனவ சமூகத்தவர்கள் தங்களது வாழ்வாதாரங்களை மீண்டும் தேடிக் கொள்வதற்காக சொந்த இடங்களுக்கு திரும்பி வரக்கூடியதாக இருக்கிறது. யாழ்ப்பாணத்தில் கடவுச்சீட்டு அலுவலகம் திறக்கப்பட்டமையும் அதேபோன்ற தாக்கத்தைக் கொண்டிருக்கிறது. முன்னர் வழமையான ஒரு கடவுச்சீட்டு விண்ணப்பத்தைக் கையளிப்பது என்றால் கூட கொழும்புக்கு வரவேண்டியிருந்தது. கொழும்பில் தங்குவதற்கும் வேறு தேவைகளுக்கும் கூடுதல் பணத்தைச் செலவிட வேண்டியிருந்தது.

தற்போது வெளிநாடுகளில் வாழும் தங்களது பிள்ளைகளை பார்க்கச் செல்லும் பெற்றோர்களும் வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புக்காக செல்லவிரும்புவோரும் விசா பெறவிரும்பும் மாணவர்களும் தங்களுக்கு தேவையான சேவைகளை உள்ளூரிலேயே நிறைவு செய்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது. இது வடக்கை தொலைவில் உள்ள ஒரு வேறுபட்ட இடமாக அல்ல, நாட்டின் நிருவாக வாழ்வின் ஒரு பகுதியாக அரசாங்கம் பார்க்கிறது என்ற அங்கீகாரத்தின் சமிக்கையாகும்.


ஆனால், சம்பாதிக்கப்பட்ட நல்லெண்ணம் நிரந்தரமானதல்ல. அதை இடையறாத செயற்பாடுகள் மற்றும் பேச்சுவார்த்தை மூலமாக தொடர்ந்து பேண வேண்டும். மண்டைதீவில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் ஒன்றை அமைப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் கலந்தாலோசனை தொடர்பிலான பிரச்சினையை முன்னரங்கத்துக்கு கொண்டுவருகிறது. கிரிக்கெட் வேறுபாடுகளுக்கு அப்பால் சமூகங்களை ஐக்கியப்படுத்துகிறது. சர்வதேச விளையாட்டை வடக்கிற்கு கொண்டு வருவது உண்மையில் அடையாளபூர்வமான ஒரு பெறுமதியைக் கொண்டிருக்கிறது.

மண்டைதீவு பாலம் ஒன்றினால் யாழ்ப்பாணத்துடன் இணைக்கப்படுகிறது. குடாநாட்டில் இருக்கும் ஹோட்டல்கள் விருந்தினர்களை வரவேற்கத் தயாராக இருக்கின்றன ஆனால், மண்டைதீவை தெரிவு செய்தமை விவாதத்துக்குரியது. ஆழமற்ற கடலையும் சதுப்புநிலத் தாவரங்களையும் கொண்ட அந்த சிறிய தீவு சுற்றுச்சூழல் பாதுகாப்பைப் பொறுத்தவரை விசேட கவனம் தேவைப்படுகின்ற எளிதில் பாதிக்கப்படக்கூடிய ஒரு பகுதியாகும். சர்வதேச கிரிக்கெட் மைதானம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான திட்டம் குறித்து எந்தளவுக்கு அங்கு வாழும் சமூகத்தவர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டது என்ற கேள்வி எழுகிறது.

முன்கூட்டியே கலந்தாலோசனை இல்லாமல் அபிவிருத்தியை முன்னெடுப்பது சமூகங்களை அரவணைக்கும் ஒரு செயற்பாடாக அல்ல, ஒரு திணிப்பாக நோக்கப்படக்கூடிய ஆபத்து இருக்கிறது. ஒரு திட்டத்தினால் பெரிதும் பாதிக்கப்படக்கூடிய மக்கள் அடிக்கல் நாட்டப்பட்ட பிறகு மாத்திரமே அதை தெரிந்து கொள்ளக்கூடாது என்பதே இங்கு ஒரு படிப்பினையாக இருக்க வேண்டும். கச்சதீவில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான யோசனையை சுற்றியும் இத்தகையதொரு திரிசங்கு நிலை காணப்படுகிறது.

யாழ்ப்பாண கத்தோலிக்க ஆயர் ஏற்கெனவே தனது ஆட்சேபனையை வெளிப்படுத்தியிருக்கிறார். கச்சதீவு புனித யாத்திரைக்கும் பிரார்த்தனைக்கும் உரிய தலமே தவிர, வர்த்தகச் சுற்றுலாவுக்கு உரிய இடமல்ல என்று அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார். மதத்தலைவர்கள், மீனவர்கள் அல்லது உள்ளூர் நிருவாக அதிகாரிகள் விசனத்தை வெளிப்படுத்தி அதை நிராகரிக்கும்போது ஜனநாயகத் தீர்மானங்களை மேற்கொள்ளும் செயன்முறைகள் மீதான பொதுமக்களின் நம்பிக்கை பலவீனமடைகிறது. அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு முன்னதாக கலந்தாலோசனை இடம்பெற வேண்டுமே தவிர, மறுதலையாக அல்ல.

காற்றாலை மின் உற்பத்தி திட்டம் தொடர்பாக மன்னாரில் அண்மையில் இடம்பெற்ற போராட்டம் இன்னொரு எச்சரிக்கையாகும். நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்காக இயந்திரங்கள் கொண்டு செல்லப்படுவதை தடுப்பதற்காக வீதியில் அமைதியான முறையில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட மதகுருமார் மற்றும் பெண்கள் உட்பட போராட்டக்காரர்களை பொலிசார்



**அரசாங்கம் தீர்மானங்களை எடுப்பதில் நாட்டம் காட்டுமேயானால், தீர்மானங்கள் திணிக்கப்படுகின்றன என்ற உணர்வு வளரும் என்பதுடன் செய்யப்படுகின்ற மாற்றம் நிலைபேறானதாக இருப்பதற்கான வாய்ப்புகளும் குறையக்கூடிய சாத்தியம் இருக்கிறது.**

பலவந்தமாக அப்புறப்படுத்துவதை காண்பிக்கும் வீடியோக்கள் ஒன்லைனில் பார்க்கக்கூடியதாக இருக்கிறது. மக்கள் எதிர்ப்பார்களேயானால் எந்தவொரு திட்டமும் முன்னெடுக்கப்படமாட்டாது என்று ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின்போது மன்னார் மக்களுக்கு உறுதியளித்திருந்தார் என்பதால் நிலைவரம் மேலும் சர்ச்சைக்கு உரியதாகிறது.

அமைதிவழியில் போராட்டத்தை நடத்தியவர்களுக்கு எதிராக படைபலத்தை பிரயோகிப்பது நிர்மாணத்தில் ஏற்படக்கூடிய தாமதத்தை விடவும் பெருமளவுக்கு மக்களின் நம்பிக்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தும். போராட்டக்காரர்கள் பதாதைகளை ஏந்திய வண்ணம் வீதியில் அமர்ந்திருந்தார்கள். பேச்சுவார்த்தை மூலமாக பிரச்னைக்கு தீர்வைக் காணக்கூடியதாக இருந்தபோதிலும், பொலிஸ் நடவடிக்கை மூலமாக அவர்கள் கலைக்கப்பட்டார்கள். அவர்களை அப்புறப்படுத்துமாறு பிறப்பிக்கப்பட்ட உத்தரவு வீதியில் தடைகளை அகற்றியிருக்கக்கூடும், ஆனால், அது புதிதாக தோன்றிய நம்பிக்கைக்கான பரப்பையும் அகற்றி விட்டது.

புதுப்பிக்கத்தக்க சக்தி ஆற்றலை விரிவுபடுத்துவதற்கான தேசிய அவசரத் தேவை குறித்து எந்த தகராறும் கிடையாது. முதலீட்டாளர்களை வெளி நாட்டு நிறுவனமான அதானி குழுமத்தில் இருந்து உள்நாட்டு குழுமமாக மாற்றியதனால் அடிப்படையான அக்கறை தீர்த்து வைக்கப்படவில்லை. சுற்றுச்சூழலுக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்களும் அதே மாதிரியே நிலைத்திருக்கின்றன.

வேறு சந்தர்ப்பங்களில் உத்தேச திட்டங்களை ஆட்சேபிப்பவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு அரசாங்கம் விருப்பத்தை வெளிக்காட்டியது. உத்தேச சீர்திருத்தங்களை எதிர்த்து வேலை நிறுத்தத்தில் இறங்கிய தபால் ஊழியர்களும் வேலைநிறுத்தம் செய்யப்போவதாக அங்சுறுத்திய மின்சாரசபை ஊழியர்களும் தோற்றுவித்த சவால்கள் அண்மைய இரு உதாரணங்களாகும். பரஸ்பர இணக்கப்பாட்டின் மூலமாக முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்தி ஜனநாயக ரீதியானது. ஆனால், படைபலம் பிரயோகிக்கப்படும் போது அது ஆதிக்கமாக மாறிவிடுகிறது.

வடக்கில் மக்களின் நம்பிக்கையில் தொடர்ந்தும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற தீர்க்கப்படாத பல மனக்குறைகள் இருக்கின்றன. இராணுவத்தினர் வசம் இன்னமும் இருக்கும் தனியார் காணிகள் விடுவிக்கப்படாமல் இருப்பது அவற்றில் ஒன்று. தேசிய பாதுகாப்புக்கு பாதிப்பு இல்லாமல் பலாலி - யாழ்ப்பாணம் வீதியில் ஒரு பக்கத்தை மக்களின் பாவனைக்கு திறந்து விடமுடியும் என்று அந்த பகுதியில் பணியாற்றும் அரசாங்க அதிகாரிகள் சுட்டிக்காட்டுகிறார்கள். காணி உரிமைகளை மக்களிடம் மீண்டும் கொடுப்பது சந்தேக யுகம் முடிவுக்கு வருகின்றது என்ற வலிமையான சமிக்கையை கொடுப்பதாக இருக்கும்.

வரலாற்று அல்லது தொல்லியல் காரணங்களின் அடிப்படையில் மதத் தரப்பினரால் காணிகள் தொடர்ந்தும் ஆக்கிரமிக்கப்படுவது இன்னொரு பிரச்சினையாகும். காணி உடைமையை தீர்மானிப்பதற்கு வெளிப்படையானதும் பக்கச்சார்பற்றதுமான செயன்முறை ஒன்று கடைப்பிடிக்கப்படாத பட்சத்தில் காணித்தகராறு இன அல்லது மதத் தகராறாக மாறக்கூடிய ஆபத்து இருக்கிறது. இந்த பதற்றங்களை கருத்தில் எடுக்காமல் அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்க முடியாது. இந்த பிரச்சினை சரியான முறையில் கையாளப்பட வேண்டியது அவசியமாகும்.

போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீடு வழங்குதல் நிறைவேற்றப்படாத இன்னொரு உறுதிமொழியாகும். அண்மையில் எல்ல பகுதியில் பஸ் விபத்து இடம்பெற்றபோது உயிரிழந்தவர்களின் குடும்பக்களுக்கு இழப்பீடு வழங்க தலா பத்து இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், இதற்கு மாறாக போரின்போது சொந்தங்களை இழந்த குடும்பங்களுக்கு இடைக்காலக் கொடுப்பனவாக மாதாந்தம் ஆறாயிரம் ரூபா வழங்கப்படுகிறது.

இத்தகைய பாரபட்சம் அல்லது ஏற்றத்தாழ்வு சிலரின் உயிர்கள் மற்றையவர்களின் உயிர்களை விடவும் கூடுதல் பெறுமதி கொண்டவை என்ற எண்ணத்தை வளர்க்கிறது. நல்லிணக்கம் என்பது வெறுமனே ஒரு சுலோகமாக இல்லாமல் பயனுறுதியுடையதாக இருக்க வேண்டுமானால், இழப்பீடு வழங்கும் கொள்கை நேர்மையானதாகவும் நிலையான தன்மை கொண்டதாகவும் இருக்க வேண்டும். இனம் அல்லது மத வேறுபாடுகளுக்கு அப்பால் சகல மக்களின் நலன்களிலும் அக்கறை கொண்டிருப்பதாக அரசாங்கம் நிரூபிக்க வேண்டியது அவசியம்.

வடக்கைச் சேர்ந்த அரசாங்க அதிகாரிகளுடன் பேசியபோது அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுவதில் ஆர்வமும் விருப்பமும் இருக்கிறது என்பதை தெளிவாகப் புரிந்துகொள்ளக் கூடியதாக இருந்தது. வடக்கிலும் கிழக்கிலும் உயர்மட்ட நிருவாக பதவிகளுக்கு பெருமளவுக்கு தமிழர்களையும் முஸ்லிம்களையும் நியமிப்பது பிராந்தியத்தைப் பாதிக்கும் தீர்மானங்கள் சம்பந்தப்பட்ட சமூகங்களின் நலன்களை மனதிற்கொண்டு உள்ளுணர்வுடனும் அனுதாபத்துடனும் எடுக்கப்படுவதை உறுதி செய்வதற்கான ஒரு வழியாக அமையும். ஒருவர் நல்லது என்று நம்புகின்ற விடயம் மற்றவர்களுக்கு நல்லதாக அமையும் என்ற எண்ணத்துடன் செயற்படுவது முறையானதல்ல

இத்தகைய பின்புலத்தில், மக்கள் தங்களது எதிர்காலத்துக்கு தாங்களே பொறுப்பானவர்கள் என்று உணருவதற்கு அதிகாரப்பரவலாக்கம் அவசியமாகிறது. பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டுக்கும் அதிகமான ஆசனங்கள் பலத்தைக் கொண்டிருக்கும் தற்போதைய அரசாங்கம் எதிர்க்கட்சிகளுடனும் சிவில் சமூகத்துடனும் கலந்தாலோசித்து முறைமையை மாற்றுவதற்கான வாய்ப்பைக் கொண்டிருக்கிறது. எதிர்கட்சிகளினதும் சிவில் சமூகத்தினதும் கருத்துகளை அரசாங்கம் கேட்டறிவதும் தீர்மானங்களை மேற்கொள்வதும் அவசியமாகும்.

ஆனால், அதை விடுத்து தன்னெண்ணத்தில் அரசாங்கம் தீர்மானங்களை எடுப்பதில் நாட்டம் காட்டுமேயானால், தீர்மானங்கள் திணிக்கப்படுகின்றன என்ற உணர்வு வளரும் என்பதுடன் செய்யப்படுகின்ற மாற்றம் நிலைபேறானதாக இருப்பதற்கான வாய்ப்புகளும் குறையக்கூடிய சாத்தியம் இருக்கிறது. நம்பிக்கை, கலந்தாலோசனை, மற்றவர்களின் கருத்துக்களையும் கருத்தில் எடுத்தல் ஆகியவை முன்னேற்றத்தில் இருந்து பிரிக்க முடியாதவை. முன்னேற்றம் என்பது சகல தரப்பினரையும் அரவணைப்பதாகவும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதாகவும் வெளிப்படையானதாகவும் இருக்கும்போது மாத்திரமே வலிமையானதாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனங்காட்டான்

# 13ஆம் திருத்தம் - மாகாண தேர்தல்: இலங்கையிடம் இந்திய அரசு நேரடியாக வலியுறுத்த முடியாதா?



அநுர குமர தலைமையிலுள்ள தேசிய சக்தி ஆட்சி ஒருவாறு ஒரு வருடத்தை முடித்துவிட்டது. அனுபவம் இல்லாதவர்களின் ஆட்சி என்ற கருத்தில் இவர்களை எல் போட் என்று நையாண்டி செய்த முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கைது செய்து நோயாளியாக்கியது(?) இந்த ஆட்சியின் மகத்தான சாதனையாக பார்க்கப்படுகிறது.

இந்த செயற்பாட்டினூடாக முன்னாள் ஜனாதிபதிகள், பிரதமர்கள், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்று பலருக்கு அச்ச ஊசி ஏற்றப்பட்டுள்ளது. தேசிய மக்கள் சக்தியை வீழ்த்த வேண்டுமென்றால் எதிர்க்கட்சிகள் ஏதாவதொரு அடிப்படையில் இணைய வேண்டுமென்ற குரல் கேட்கிறது. ஆனால், அது சாத்தியமாகக் காணப்படவில்லை.

நாமல் ராஜபக்சவை எப்பாடுபட்டாவது நாட்டின் தலைவராக்கி விடவேண்டுமென்ற துடிப்பில் தந்தை மகிந்த தமது நோயையும் பொருட்படுத்தாது செயல்படுகிறார். ஆனால், அநுர அசாங்கமோ றக்பி வீரர் வாசிம் தாஜுதீன் கொலை விசாரணையை மீள எடுத்து துழாவத் தொடங்கியுள்ளது. இவ்விசாரணை தொடர்பாக நாமல் ராஜபக்ச பதற்றமடையத் தேவையில்லையென்று பிரதி அமைச்சர் மகிந்த ஜெயசிங்க தெரிவித்துள்ளதானது, அடுத்து என்ன நடைபெறப்போகிறது என்பதை சூசகமாகக் காட்டுகிறது.

ரணிலின் ஐக்கிய தேசிய கட்சியும், சஜித்தின் ஐக்கிய மக்கள் சக்தியும் இணைவதற்கான எந்த அம்சமும் இல்லை. ரணிலின் மீதான சஜித்தின் நம்பிக்கையீனமே இதன் அடிப்படை. தமது தலைமைப் பதவியை விட்டுக்கொடுத்து இரு கட்சி இணைப்புக்கு பச்சைக்கொடி காட்ட ரணிலும் தயாரில்லை. இன்னொரு தடவை ஜனாதிபதியாகலாம் என்ற கனவுலகில் ரணில் சஞ்சரிப்பதுபோல தெரிகிறது.

தெற்கின் அரசியல் இவ்வாறு உறுதியில்லாது நகர்ந்து கொண்டிருந்தாலும், மாகாண சபை தேர்தல் விடயத்தில் தமிழர் தரப்பினரும் அதே பாதையில் - ஆனால் வேறு வாகனத்தில் பயணிக்கின்றனர். இரு தரப்பினருக்கும் இப்போதுள்ள ஒரே கோரிக்கை மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டுமென்பது. ஆனால், அடிப்படையில் வெவ்வேறு காரணங்கள்.

மாகாண சபை தேர்தல் முடிவுகளூடாக அநுர அரசின் செல்வாக்கின்மையை உலகுக்கு காட்டலாம் என்று தெற்கின் அரசியலாளர்கள் கருதுகின்றனர். தோல்விக்குப் பயந்து மாகாண சபை தேர்தல்களை நடத்த அரசு பின்னடிக்கிறது என்றும் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

ஆனால், தமிழர் தரப்பில் தேர்தலை கோருவதற்கான காரணம் அதுவல்ல. உள்ளாட்சித் தேர்தலில் தமிழரசுக் கட்சிக்கு ஒரு பாடம் கற்பித்ததுபோல மாகாண சபை தேர்தலிலும் கற்பிக்கலாமென்று எதிரணியினர் கருதுகின்றனர். ஆனால், முதலமைச்சர் பதவியில் கண் வைத்திருக்கும் தமிழரசின் சுமந்திரன் இத்தேர்தலூடாக மீண்டும் அரசியலில் எழுந்துவிட்டால் தமிழரசின் தலைமைப் பதவியையும் இலகுவாகக் கைப்பற்றி விடலாமென நம்புகிறார்.

**அரசியலமைப்பை முழுமையாக நிறைவேற்றுங்கள் என்று கூறும்போது அதற்குள் 13ம் திருத்தமும் அடங்கியுள்ளது என்பது இலங்கை அரசுக்கு புரியுமென்று இந்தியா சொல்வதால், அதனை அநுர குமரவின் தேசிய மக்கள் சக்தி அரசு புரிந்து செயல்படுத்துமென்பதற்கு என்ன உத்தரவாதம்?**




வடக்கிலும் கிழக்கிலும் தமிழரசுக் கட்சிக்கு எட்டு எம்.பிக்கள் உள்ளனர். அநுர குமர அணிக்குணம் இவ்விரு மாகாணங்களிலும் எட்டு எம்.பிக்கள் உள்ளனர். மாகாண அரசு தேர்தல் நடைபெற்றால் எந்த அணி வடக்கு கிழக்கில் ஆட்சியைக் கைப்பற்றும் என்று சொல்லக்கூடியதாக அரசியல் காலநிலை இன்றில்லை. தமிழர் தரப்பு கேட்கும் அரசியல் தீர்வா, அநுர குமர தரப்பினர் முன்வைக்கும் பொருளாதார மீட்சியா வாக்குகளை திரட்சியாக்கும் என்பதற்கு இளைய தலைமுறையினரே தீர்மானிப்பார்கள். எனினும், மாகாண சபை தேர்தலை இழுத்தடிக்கக் கூடாது என்பதே பொதுவாக அனைத்துத் தரப்பினரதும் கோரிக்கை.

1987 யூலை 29ம் திகதி ஜே.ஆரும் ராஜிவும் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் பிரசவம் 13ம் திருத்தம். 1987ம் ஆண்டு நவம்பர் மாதம் 14ம் திகதி இலங்கையின் அரசியலமைப்பில் இது இணைக்கப்பட்டது. இதன் வழியாக உருவாக்கப்பட்டது மாகாண சபைகள் முறைமை. அடுத்துவரும் நாட்களில் இது முப்பத்தெட்டு ஆண்டுகளை பூர்த்தி செய்கிறது. இக்காலத்தில் வடமாகாண சபைக்கு ஒரு முறை மட்டுமே தேர்தல் நடத்தப்பட்டது. மிகுதிக்காலம் முழுவதும் அரசாங்கம் நியமிக்கும் ஆளுனர் ஆட்சியே.

அத்தியாவசியமான காணி, காவற்துறை அதிகாரங்கள் இன்றுவரை மாகாண சபைகளுக்கு இல்லை. ஆனாலும் மாகாண சபை இயங்க வேண்டுமென்பதில் மக்களைவிட அரசியல்வாதிகளுக்கே அக்கறை கூட. இலங்கைத் தமிழர்களுக்காக செய்யப்பட்ட ஒப்பந்தத்தில் இலங்கைத் தமிழர்களுக்காக ஒப்பமிட்ட ராஜிவ் காந்தி இதனையிட்டு பெருமிதம் கொண்டார். இந்த ஒப்பந்தம் தொடர்பாக தமிழக மெரினா கடற்கரையிலும், சுதுமலை அம்மன் கோவில் முன்றலிலும் தெரிவிக்கப்பட்ட இரண்டு கருத்துகள் வரலாற்றுப் பிரசித்தமானவை.

தமிழகத்தில் வாழ்பவர்களின் உரிமைகளிலும் பார்க்க கூடுதலான உரிமைகளை இலங்கைத் தமிழர்களுக்கு பெற்றுக்கொடுத்துவிட்டு உங்கள் முன்னால் நின்று உரையாற்றுகிறேன் என ராஜிவ் காந்தி மெரினா கடற்கரையில் உரையாற்றும்போது கூறினார். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வதானது தமிழ் மக்களின் பாதுகாப்பை இந்தியாவிடம் கையளிப்பதானது என்ற சாரப்பட விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் சுதுமலை கூட்டத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

ஜே.ஆர். - ராஜிவ் ஒப்பந்தம் எவ்வகையிலும் நிறைவேற்றப்படவில்லை என்பதை ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து திலீபன் தியாக மரணமடைந்ததும், இந்தியப் படைகளை அன்றைய இலங்கை ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச நாட்டைவிட்டு வெளியேற்றியதும் நின்று நிரூபித்து வருகின்றன.

அரைகுறை அதிகாரங்களுடன் உருவான மாகாண சபையால் எதுவும் நேர்த்தியாக செய்ய முடியாது போனது. வடமாகாண சபை முதலமைச்சராகவிருந்த சி.வி.விக்னேஸ்வரன் 2016 பெப்ரவரியில் இந்திய அரசிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தார். 13ம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த இந்தியா நேரடியாக தலையிட வேண்டுமென்பது இவரது கோரிக்கை. இந்தியாவே இலங்கையுடன் ஒப்பந்தம் செய்ததால் இந்தியாவுக்கு நேரடியாக தலையிடும் உரிமை இருக்கிறது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமிருக்க முடியாது.

தமிழ் தேசிய கட்சிகளும், தமிழ் அரசியல் பிரமுகர்களும் இந்தியத் தரப்புடன் நடத்தும் ஒவ்வொரு சந்திப்பிலும் 13ம் திருத்தத்தையும், மாகாண சபைத் தேர்தலையும் நடைமுறைப்படுத்த இலங்கை அரசிடம் இந்தியா வலியுறுத்த வேண்டும் என்றே கேட்டு வருகின்றனர். ஒரு தடவை தம்மை சந்தித்த தமிழ் கட்சிகளிடம், இப்போது இருக்கின்ற அதிகாரங்களை முழுமையாக பயன்படுத்துங்கள் என்று கூறிச் சென்றார் இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர்.

மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறுமா? அப்படியானால் எப்போது? புதிய எல்லை நிர்ணய செயல்முறைக்குப் பின்னர் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டுமானால் அதற்கு ஒரு வருடமாவது செல்லும் என்று தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரட்நாயக்க தெரிவித்துள்ளார். இவரது கூற்றே நம்பக்கூடியது. ஆனால், இலங்கையின் பிரதமர் மற்றும் அமைச்சர்கள் அடுத்த ஆண்டில் (2026) மாகாண சபைத் தேர்தல்கள் இடம்பெறுமென்று ஒவ்வொரு மேடையிலும் உறுதி கூறி வருகின்றனர். ஜனாதிபதி அநுர குமர கூட அப்படித்தான் சொல்கிறார். எவரும் தேர்தல் இடம்பெறாது என்று இதுவரை தெரிவிக்கவில்லை.

கொழும்பிலுள்ள இந்திய அரசின் தூதுவர் சந்தோஷ் ஜா அண்மையில், அரசியல் தீர்வு விடயத்தில்கூட தமிழ் அரசியல் கட்சிகள் ஒருமித்த நிலைப்பாட்டில் ஒன்றிணைந்து வரவில்லையென குறைப்பட்டுள்ளதை செய்திகள் தெரிவிக்கின்றன. தூதுவர் சொல்வதில் உண்மையுண்டு. தமிழ் கட்சிகள் தங்களுக்குள் பிளவுகளை வளர்த்து வருகின்றனவே தவிர இணைந்து செயற்படக்கூடியதாக தங்களை மாற்றவில்லை. அதற்கான சாத்தியமும் இருப்பதாகத் தெரியவில்லை.

இதனை இந்தியா தனது அனுபவத்தால் நன்றாகவே அறிந்திருக்கிறது. இலங்கை - இந்திய ஒப்பந்தம் செய்யப்பட்டபோதுகூட ஒருமித்த நிலைப்பாட்டில் இவர்கள் இருக்கவில்லை. ஆனாலும் அன்றைய இந்தியப் பிரதமர் இலங்கை ஜனாதிபதியோடு தாம் விரும்பியவாறு இந்த ஒப்பந்தத்தை செய்திருந்தார்.

மீண்டும் மீண்டும் தமிழர் தரப்பின் ஒற்றுமை இன்மையை சுட்டிக்காட்டி, அதையே தங்களுக்கான வாய்ப்பாக எடுத்து இந்தியா இலங்கையை வலியுறுத்தாது அதன் போக்கில் விடுவது நியாயமா? இலங்கை கேட்கும் உதவிகள் அனைத்தையும் இந்தியா தாராளமாக வழங்கி வருவதாக சொல்பவர்களால் 13ம் திருத்தத்தையும் மாகாண சபைத் தேர்தலையும் தாமதமின்றி நடத்துமாறு ஏன் வலியுறுத்த முடியாது.

அரசியலமைப்பை முழுமையாக நிறைவேற்றுங்கள் என்று கூறும்போது அதற்குள் 13ம் திருத்தமும் அடங்கியுள்ளது என்பது இலங்கை அரசுக்கு புரியுமென்று இந்தியா சொல்வதால், அதனை அநுர குமரவின் தேசிய மக்கள் சக்தி அரசு புரிந்து ஏற்று செயற்படுத்துமென்பதற்கு என்ன உத்தரவாதம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# வழி தவறிப் போகின்றனவா வடக்கு உள்ளூராட்சி மன்றங்கள்?

கந்தையா அருந்தவபாலன்

பெரும் இழுபறிகளுக்குப் பின் இவ்வாண்டு நடைபெற்ற தேர்தலின் மூலம் உள்ளூராட்சி மன்றங்களுக்கான சபைகள் அமைக்கப்பட்டு நான்கு மாதங்கள் கடந்துவிட்டன. இக்காலப்பகுதியில் அச்சபைகளின் ஆக்கபூர்வமான பணிகள் தொடர்பான செய்திகளிலும் பார்க்க அதிகளவான செய்திகள் அவற்றின் சபை உறுப்பினர்களுக்கிடையிலான பிணக்குகள் பற்றியதாக இருப்பதைக் காணமுடிகிறது. அதேபோல சில சபைகள் மக்களுக்கான தமது பணிகளுக்கு முன்னுரிமை அளிப்பதற்குப்பதிலாக வேறு சில காரியங்களில் கவனஞ் செலுத்த விழைவதையும் காணமுடிகிறது. வெவ்வேறு கட்சி உறுப்பினர்களுக்கிடையில் மட்டுமன்றி சொந்தக்கட்சி உறுப்பினர்களுக்கிடையில் முரண்பாடுகள், தவிசாளர் உப தவிசாளர் முரண்பாடுகள், உறுப்பினர் வெளிநடப்புகள், கிழித்தெறிதல், தகாத வார்த்தைப் பிரயோகங்கள், செயலாளர் மற்றும் பணியாளர்களுடனான முரண்பாடுகள் என சபை நடவடிக்கைகள் நேரலையில் மக்களுக்குக் காட்சி தந்துகொண்டிருக்கின்றன. அதேவேளை சபைகளின் மேம்பாடு மற்றும் எதிர்காலத்திட்டங்கள் தொடர்பாகக் கலந்துரையாடவேண்டிய கட்சித் தலைவர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் அதைவிடுத்து உறுப்பினர்களுக்கிடையில் ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்காக கூடவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையும் தோன்றியுள்ளது. அனுர அரசாங்கத்தின் ஓராண்டு ஆட்சியை விமர்சிக்கும் தமிழ்க்கட்சித்தலைவர்கள் தமது கட்சி உறுப்பினர்களால் வழிநடத்தப்படும் இச்சபைகளின் கடந்த நான்கு மாத ஆட்சிநிர்வாகத்தை சுயவிமர்சனம் செய்வது அவசியமாகும்.

உள்ளூராட்சி மன்றங்கள் நாட்டின் ஜனநாயக ஆட்சி நிர்வாகத்துக்கான அடிமட்ட கட்டமைப்பு என்றாலும் இங்கு பாராளுமன்றத்திலிருப்பதைப்போல ஆளுங்கட்சி எதிர்க்கட்சி என்ற வேறுபாடு இல்லை. வெவ்வேறு கட்சிகளிலிருந்தும் சுயேட்சைகளாகவும் உறுப்பினர்கள் சபைக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தாலும் அனைவரும் சார்ந்த குழுவே சபையாகும். இந்தக்குழுவுக்கு ஒரு தலைவர். அவர் தவிசாளராகவோ மேயராகவோ இருந்து அதற்குரிய பணிகளைச் செய்வார் அந்தளவே. இதன்காரணமாகவே மன்றங்களின் ஆட்சி நிர்வாகத்தைச் செய்வதற்கு அனைத்துத் தரப்பு உறுப்பினர்களையும் கொண்ட குழுக்கள் அமைக்கப்படுகின்றன. இதனை உறுப்பினர்கள் மட்டுமல்ல அவர்கள் அனைவருக்கும் தலைமை வகிக்கும் தலைவர்களான தவிசாளர்களும் புரிந்து கொள்ளவேண்டும். இதனைப் புரிந்து கொள்ளாத தவிசாளர்கள் தான் "நான் செய்வேன். அதனை நீங்கள் கேட்கமுடியாது" என்று சவால் விடுகின்றனர். தவிசாளர் என்ற தலைமைப்பதவி மற்றவர்கள் மீது அதிகாரம் செலுத்துவதற்கானதல்ல. மற்றவர்களையும் அரவணைத்து மக்கள் பணியாற்றுவதற்கானது என்பதைத் தவிசாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும். தவிசாளர் என்பவர் சபை உறுப்பினர்களுக்கு மட்டுமல்ல ஒரு நிறுவனம் என்ற வகையில் அந்நிறுவனத்துக்கும் அது சார்ந்த மக்களுக்கும் தலைவராவார். பழைமையான தலைமைத்தவ சிந்தனைகளிலிருந்து விடுபட்டு நவீன தலைமைத்துவப் பண்புகளையும் உத்திகளையும் வளர்த்துக் கொள்வது அவசியம்.

உள்ளூராட்சிச் சபைகள் அரசியல் செய்யும் களமல்ல என்பதை உறுப்பினர்கள் மட்டுமன்றி அவர்களின் கட்சித்தலைவர்களும் புரிந்து கொள்வது அவசியமாகும். உறுப்பினர்களின் அரசியல் களம் என்பது அவர்களின் சபையின் ஆளுகைப் பிரதேசமும் அங்கு வாழும் மக்களுமே. அம்மக்களுக்கான பணியே அவர்களின் உண்மையான அரசியல் பணியாகும்.

அந்த மக்களின் தேவைகளையும் பிரச்னைகளையும் அறிந்து சபையூடாகவும் வேறு வழிகளிலும் தீர்த்துவைப்பதன் மூலம் உறுப்பினர்கள் தாம்விரும்பும் மக்கள் ஆதரவை தக்க வைத்திருக்க முடியும். அந்த ஆதரவு தனிப்பட்ட உறுப்பினர்க்கானதாக மட்டுமன்றி அவர்களது கட்சியின் கொள்கைக்கானதாகவும் மாறும். அதைவிடுத்து சபைக்கூட்டங்களிலோ அல்லது வேறு இடங்களிலோ படங்காட்டுவதன் மூலம் மக்களின் ஆதரவு கிடைக்கும் எனக்கருதினால் அது ஏமாற்றமாகவே முடியும். குறுங்காலத்தில் வெற்றியைத் தந்தாலும் நீண்டகாலத்தில் மக்களின் வெறுப்பையே அது ஏற்படுத்தும். இதற்கு சமகால முன்னுதாரணங்கள் நிறையவே உள்ளன. கட்சித் தலைவர்களும் சபை நடவடிக்கைகளில் தமது தவிசாளர் அல்லது உறுப்பினர்கள் மூலம் எதிர்மறையாகத் தலையிடுவதைத் தவிரப்பது அவசியமாகும். உள்ளூராட்சி மன்றங்களில் ஏற்படும் பல குழப்பங்களுக்கு அரசியல் கடசிகளின் தலைமைகள் காரணமாக இருப்பது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதற்குப்பதிலாக உறுப்பினர்களைச் சரியாக வழிப்படுத்துவது கட்சித் தலைமைகளின் கடமையாகும். உறுப்பினர் விடும் தவறுகள் உறுப்பினரை மட்டுமன்றிக் கட்சியையும் அது பாதிக்கும்.

தவிசாளர் தெரிவின்போது எதிரெதிர் துருவங்களாக இருந்த கட்சிகளும் அதன் உறுப்பினர்களும் ஒன்று சேர முடியுமானால் சபைக்கூட்டங்களிலும் ஏனைய நடவடிக்கைகளின் போதும் ஏன் ஒருவர்க்கொருவர் மல்லுக்கட்டுகிறார்கள் என்று புரியவில்லை. இதற்கு மேலாக சபைகளின் உறுப்பினர்கள் பலர் முகநூல் போன்ற சமூக ஊடகங்களில் தமது சபை நடவடிக்கைகளையும் நபர்களையும் விமர்சிப்பதைக் காணுகிறோம். சபையொன்றின் ஆளுகைப் பிரதேசத்தில் குறையொன்று காணப்படுமானால் உறுப்பினர் ஒருவர் அல்லது கட்சியின் முக்கிய பதவியிலிருக்கும் ஒருவர் அதைப் படம்பிடித்து சமூக ஊடகத்தில் பதிவேற்றி அதன்கீழ் குறித்த சபையையும் தவிசாளரையும் சிலவேளைகளில் அவரின் கட்சியையும் இழுவுபடுத்துவதைக் காணமுடிகிறது. இதற்காகவா மக்கள் குறித்த உறுப்பினர்களைத் தெரிவு செய்தார்கள்? இல்லையே.

அக்குறைகளைத் தவிசாளரின் அல்லது செயலாளரின் கவனத்துக்குக் கொண்டு சென்று தீர்வு காண்பதற்காகத்தான் தங்களை மக்கள் தெரிவு செய்துள்ளார்கள் என்று இப்படியானவர்கள் எப்போது உணரப்போகிறார்கள்? வேறு சில உறுப்பினர்கள் தமது சபைதொடர்பாக ஏதாவதொரு குறையைச் சுட்டிக்காட்டி" இதோ பார் அடுத்த கூட்டத்தில் நான் திருவிழாக் காட்டுகிறேன்" என்று முகநூலில் சவால்விடுவதையும் காணமுடிகிறது. இன்னுஞ் சிலர் சபை நடவடிக்கைகள் நேரலையில் செல்வதால் தாங்களும் ஏதாவது கதைக்கவேண்டுமென்று கதைக்க வெளிக்கிட்டு அதைப்பார்க்கும் மக்களின் வெறுப்பைச் சம்பாதிப்பதையும் காணமுடிகிறது.


இன்னுஞ் சில உறுப்பினர்கள் சபையின் தற்போதைய ஆட்சியாளரை மட்டந்தட்ட நினைத்து முன்னர் தங்களது ஆட்சி இதைவிடச் சிறப்பானது என்று பதிவிட்டு அவர்களின் கடந்த கால ஊழல்களை மீண்டும் ஒருமுறை பொதுவெளியில் பட்டியலிடச் செய்து மூக்குடைபடுகிறார்கள். அதேபோல உறுப்பினர்கள் மட்டுமன்றி தவிசாளர்களும்கூட சபையின் பணிகளைச் செய்வதைப் படத்துடன் பதிவிட்டு அதைப் பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள். அதில் பெருமைப்பட என்னவுண்டு ? வழமையான பணிகளைவிட ஏதாவது புத்தாக்கமாக செய்து அதில் பெருமைப்படுவதில் நியாயமுண்டு. மக்களும் அதை வரவேற்பார்கள். வீதிக்கு முன் விளக்குப் பூட்டுவது வழமையான பணிதானே. இதில் இன்னும் நகைச்சுவையான விடயம் சில உறுப்பினர்கள் தாங்களே ஏணியில் ஏறி மின்குமிழ் பூட்டுவதாக படங்காட்டுவது. இப்படியான உறுப்பினர்களுக்கு தங்கள் கடமையும் தெரியவில்லை. சபையின் பணியாளர்களை வேலைவாங்கவும் தெரியவில்லை என்றுதானே நினைக்கத் தோன்றும்.

அண்மையில் இரண்டு உள்ளூராட்சி சபைகள் சிலைகள் வைக்கும் தீர்மானத்தை அறிவித்தபோது "தாய் கிண்ணிப் பிச்சை எடுக்க மகன் கும்பகோணத்தில் கோதானம் செய்கிறான்" என்ற பழமொழிதான் பலருக்கு ஞாபகம் வந்திருக்கும். சிலைகள் வைப்பது தவறல்ல. ஆனால் யாருக்கு, யாரால், எங்கே,எப்போது, எதற்காக சிலை வைப்பது என்ற தெளிவு இல்லாமலிருப்பதுதான் தவறு. அவற்றுக்கு மேலாக சபை வழமையாகச் செய்ய வேண்டிய பணிகள் ஆயிரமாய் தேங்கிக் கிடக்க அதைவிடுத்து சிலைகளுக்கு என்ன அவசரம்? என்ன அவசியம்? குன்றும் குழியுமான, முள்ளும் புதருமான, கும்மிருட்டான வீதிகள், பார்க்குமிடமெல்லாம் குப்பைகளும் கழிவுகளும், பொருத்தமான வடிகாலின்மையாலும் பொருத்தமற்ற கட்டிடங்களாலும் மழைபெய்தால் வெள்ளமும் சக்திகளும், அங்காடிகளில் ஆயிரம் ஓட்டைகள், சிறுவர்களுக்கு சீரான மகிழ்களம் இல்லை, இளைஞர்களுக்கு வசதி வாய்ப்பான விளையாட்டுத் திடல்கள் இல்லை, இறுதிக்கடமைகளுக்கான மயானங்கள் சீராக இல்லை... இப்படி அடிப்படைத்தேவைகளுக்கு அன்றாடம் மக்கள் ஏங்கும்போது சிலைகளுக்கு என்ன அவசரம் என்பதை அனைவரும் ஒருகணம் சிந்திக்க வேண்டும். பெரியார் ஒருவருக்கு மதிப்பளிப்பதற்கு சிலைதான் வைக்கவேண்டுமென்றில்லை. அவர் பெயரில் சிறந்ததொரு சிறுவர் மகிழ் களத்தை அமைத்தால் ஒரு கல்லில் இருமாங்காய்கள் விழும். பெரியார்களுக்கு சிலைவைப்பதைவிட அவர் கொள்கைகளையும் வாழ்க்கை முறைகளையும் பின்பற்றுவது அவர்களுக்கு நாம் செய்யும் பெரிய கௌரவம். சபைகளின் வாகனங்களையும் சொத்துக்களையும் தனிப்பட்ட தேவைகளுக்குப் பயன்படுத்தாதிருப்பதுடன் மக்களின்

(14ஆம் பக்கம் பாரக்க)



**மக்களின் பங்களிப்புடன் நிறைவேற்றக்கூடிய பணிகள் தொடர்பான முன்னெடுப்புகள் அதி பயனைத் தரும். எடுத்துக்காட்டாக ஒரு வட்டாரத்தில் உள்ள வீதிகளை அவ்வட்டாரத்திலுள்ள சனசமூக நிலையங்கள்,விளையாட்டுக் கழகங்கள், பொதுமக்கள் ஆகியோருடன் சபையின் பணியாளர்களும் இணைந்து மாதத்தில் இருதடவைகள் சுத்தம் செய்தாலே பல வீதிகள் அழகாகும் என்பதுடன் மக்களுக்கும் தமது வீதிகளை அழகாக வைத்திருக்க வேண்டும் என்ற உணர்வு வரும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவம் வாத்தியார்?



நிலாந்தன்

மொனராகலவில் உள்ள முன்னணிப் பாடசாலை ஒன்றில், 11ஆம் வகுப்பு மாணவன் ஒரு வன் பாடசாலைக்கு கைபேசியைக் கொண்டு வந்திருக்கிறான். அதைக் கண்டித்த ஆசிரியரை மாணவன் தாக்கியுள்ளான். தாக்குதலுக்கு உள்ளாகிய ஆசிரியர் சிறிய காயங்களோடு மொனராகல ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இது இம்மாதம் முதலாம் திகதி இடம்பெற்றது.


இன்று ஐந்தாம் திகதி, சர்வதேச ஆசிரியர் தினம். நாளை இலங்கையில் ஆசிரியர் தினம்.

2016ஆம் ஆண்டு கல்வி அமைச்சினால் வெளியிடப் பட்ட 2016-12 ஆம் இலக்க புதிய திருத்தப்பட்ட சுற்று நிருபமானது ஆசிரியர்கள் பிள்ளைகளை உடல் ரீதியாகத் தண்டிப்பதைத் தண்டனைக்குரிய குற்றம் என்று கூறுகின்றது. இச்சுற்று நிருபம் அமுலுக்கு வந்தபின் பாடசாலைகளில் சரீரத் தண்டனைகள் பெருமளவுக்கு நிறுத்தப்பட்டு விட்டன. ஆனாலும் சில பாடசாலைகளில் அந்தச் சுற்று நிருபம் பின்பற்றப்படுவதில்லை என்று மனித உரிமைகள் அலுவலகத்தைச் சேர்ந்தவர்கள் கூறுகிறார் கள். இப்பொழுது தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் தண்டனைச் சட்டகோவை (திருத்த) சட்ட மூலம் ஒன்றைக் குறித்து விவாதித்து வருகிறது.

இவ்வாறு ஆசிரியர்களின் கை கட்டப்பட்டதன் விளைவாகத்தான் பிள்ளைகள் தறி கெட்டுப் போய்விட்டன என்றும் பிள்ளைகள் ஆசிரியரைத் தாக்கும் ஒரு நிலை உருவாகிவிட்டது என்றும் கல்வித் துறையைச் சேர்ந்தவர்களும் உட்பட சமூகத்தின் ஒரு பகுதியினர் குற்றம் சாட்டி வருகிறார்கள். பிள்ளைகளில் கை வைக்காமல் பிள்ளைகளின் மனத்தைக் காயபடுத்தாமல் பிள்ளைகளைச் செதுக்குவது கடினமான ஒரு தவம்.

ஒரு காலம் அடித்துப் படிப்பிக்கும் ஆசிரியர்தான் மதிப்போடு பார்க்கப்பட்டார். "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது", "அடியாத மாடு படியாது" என்றெல்லாம் பழமொழிகளைச் சொல்லி அதை நியாயப்படுத்தினார்கள். ஆனால் இப்பொழுது அடித்து வளர்த்த பிள்ளையை விடவும் அடிக்காமல் வளர்க்கப்படும் பிள்ளை அதிகமாகச் சாதிக்கின்றது என்று புள்ளி விவரங்கள் காட்டப்படுகின்றன.

ஒரு ஆசிரியர் எப்படிப்பட்ட முன்னுதாரணமாக இருக்க வேண்டும் என்பதற்கு ஒரு கதை கூறப்படுவதுண்டு. ஒரு மாணவன் சாப்பிடும் பொழுது எப்பொழுதும் அன்னத்தைச் சிந்தி வந்தான். அவனுடைய தகப்பனார் அவனுடைய வகுப்புக்கு பொறுப்பான ஆசிரியரிடம் சென்று அதுதொடர்பாக முறைப்பாடு செய்திருக்கிறார். முறைப்பாடு செய்த பின் ஒவ்வொரு கிழமையும் மகனின் நடவடிக்கையில் மாற்றம் தெரிகிறதா என்று அவதானித்திருக்கிறார். கிட்டத்தட்ட ஒரு மாத காலம் வரையிலும் எந்த மாற்றமும் இல்லை. ஆசிரியர் தனது வேண்டுகோளை



ஏற்று மகனுக்குப் புத்திமதி சொல்லவில்லை என்று நினைத்த தந்தை மகனை இனித் திருத்த முடியாது என்று சலித்துக் கொண்டார். ஆனால் கிட்டத்தட்ட மூன்றுமாதங்களின் பின் பையன் திடீரென்று ஒரு நாள் சோறு சிந்துவதை நிறுத்திவிட்டான். சோற்றுத் தட்டை வாய்க்குக் கிட்ட வைத்து, ஒவ்வொரு கவளமாகக் கவனமாக எடுத்துச் சாப்பிட்டிருக்கிறான். தகப்பனுக்கு அதிசயம். என்னடா நடந்தது?

“
மாதா, பிதா, குரு தெய்வம் என்கிறோம். ஆனால் ஆசிரியர்களில் பெரும்பாலானவர்கள் ஏன் தங்கள் பிள்ளைகள் ஆசிரியர்களாக வருவதை விரும்புவதில்லை? கடந்த நூற்றாண்டில் கவிஞர் நீலாவாணன் எழுதினார் “பாவம் வாத்தியார்” என்று. இப்பொழுதும் செயற்கை நுண்ணறிவின் காலத்திலும் அதுதான் நிலைமையா?
”

என்று கேட்டிருக்கிறார். எப்படிச் சாப்பிட வேண்டும் என்று சேர் சொல்லித் தந்தவர் என்று மகன் சொல்லியிருக்கிறான். தகப்பன் உடனே கிளம்பி ஆசிரியரிடம் போயிருக்கிறார். உங்களுக்கு நான் சொல்லி மூன்று மாதங்களின் பின்னர்தான் அவனுக்கு இப்பொழுது புத்திமதி சொல்லியிருக்கிறீர்கள். ஏன் இந்த மூன்று மாத கால இடைவெளி? என்று கேட்டிருக்கிறார். ஆசிரியர் சிரிச்சுக் கொண்டு சொன்னாராம், முதலில் நான் அவ்வாறு சோறு சிந்தாமல் சாப்பிடுவதற்கு கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. அதை ஓர் ஒழுக்கமாக நான் கற்றுக் கொண்டால்தான் அதை மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கும் போது அந்த அறிவுரைக்கு ஒரு சக்தியிருக்கும். நான் வாழாத ஒன்றை, நான் முன்னுதாரணமாக இல்லாத ஒன்றை என் பிள்ளைக்குச் சொல்லிக் கொடுக்க முடியாது என்று கூறியிருக்கிறார்.

இது எப்படி ஆசிரியர் முன்னுதாரணமாக இருக்கலாம் என்பதற்கான ஒரு கதை. இந்தியத் தமிழில் ஓர் ஆசிரியரிடம் என்ன செய்கிறீர்கள் என்று கேட்டால் அவர் "கற்றுக் கொடுக்கிறேன்" என்று சொல்வார். அதாவது தான் கற்று அதைக் கொடுக்கிறேன் என்று பொருள். அதனால் தான் ஐன்ஸ்டீன் சொன்னார், "கற்ற ஆசிரியர்களிடம் அல்ல கற்றுக் கொண்டிருக்கும் ஆசிரியர்களிடம் உங்கள் பிள்ளைகளை அனுப்புங்கள்" என்று. அதாவது ஒவ்வொரு நாளும் கற்றுத் தன்னை அப்டேட் செய்து கொள்ளும் ஆசிரியரிடம் பிள்ளைகளை விடுங்கள் என்று.

ஒரு காலம் நமது சமூகத்தில் ஆசிரியருக்குப் புனிதமான இடம் இருந்தது. வாத்தியார் என்றால் ஊரில் அது மதிப்புக்குரிய ஒரு முன்னுதாரணம். அமெரிக்க நீதிமன்றங்களில் ஆசிரியர் எழுந்து நிற்கத் தேவையில்லை. ஆனால் நமது நாட்டில், கல்வித் திணைக்களத்தில், பல பாடசாலைகளில் அதிபர்களுடைய அலுவலகத்தில் ஆசிரியர்கள் கதிரையில் இருப்பதில்லை.

ஆசிரியர்களுக்குள்ளும் சாதி வேறுபாடு உண்டு. விஞ்ஞானம், கணிதம் ஆகிய துறைகளைக் கற்பிப்பவர்கள் உயர் ஜாதி. தமிழ், வரலாறு, புவியியல், பொருளியல் போன்ற படங்களைப் படிப்பிப்பவர்கள் அடுத்த சாதி. அதற்கு கீழ் தான் ஏனைய சாதிகள். குறிப்பாக அழகியல் பாடத்தைக் கற்பிப்பவர்கள் இந்தச் சாதி அடுக்கில் கீழ் நிலையில் வைக்கப்படுவார்கள். அதிலும் குறிப்பாக அவர்கள் பெண்களாக இருந்தால் அங்கே பால் அசமத்துவமும் பிரதிபலிப்புகளை ஏற்படுத்தும். தனிப்பட்ட ரீதியில் துணிச்சலும் ஆளுமையும் மிக்க ஆசிரியைகள் இந்த சாதிப் படிநிலைகளை மீறி நிமிர்வதுண்டு.

தனியார் கல்வித்துறையிலும் அழகியல் பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்கள் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் ஆசிரியர்களைவிட மிகக்குறைந்த கட்டணத்தைதான் பெறுகிறார்கள். இதில் குறிப்பிட்ட ஆசிரியர்கள் தங்களுடைய கலைப் பெறுமதியை தாங்களே குறைத்துக் கொள்கிறார்கள்.

போட்டிக் கல்வியின் விளைவாக பாடசாலைகள் அவற்றின் முக்கியத்துவத்தை இழந்து வருகின்றன. தனியார் கல்வி நிறுவனங்கள் செழித்தோங்கிவிட்டன. சில தனியார் கல்வி ஆசிரியர்கள் உயர்தர வகுப்புப் பிள்ளைகள் குறிப்பாக கணித விஞ்ஞானப் பிரிவுப் பிள்ளைகள் பாடசாலைக்குப் போக வேண்டுமா இல்லையா என்பதைத் தீர் மானிக்கும் அளவுக் குச் சக்தி மிக்கவர்க ளாக வளர்ந்து விட் டார்கள். யாழ்ப்பாணத் தில் அதிகம் உழைப்ப வர்கள் வரிசையில் சில முன்னணித் தனியார் கல்வி ஆசிரியர்கள் உண்டு. ஆனால் எல்லா ஆசிரியர்களும் அவ்வாறு உழைப்பதில்லை. ஆசிரியரின் குடும்பச் சூழல் அமைதியாக, நிம்மதியாக இருக்க வேண்டும் என்றால் அவருக்குச் செழிப் பான சம்பளம் வழங்கப்பட வேண்டும். பிள் ளைகளின் உளவிய லைச் செதுக்கும் தொழி லைச் செய்பவர்களின் உளவியல் சமநிலை பாதுகாக்கப்பட வேண்டும்.

ஒருபுறம் பொறுப்பு மிக்க தொழில். பெற்றோருக்குப்பதில் சொல்ல வேண்டும். திணைக்களத்துக்குப் பதில் சொல்ல வேண்டும். முகம் காட்டாத முகநூல் குழுக்களுக் குப் பதில் சொல்ல வேண்டும். முகநூல் குழுக்கள், வாற்ஸ்அப் குழுக்களிடமிருந்து தன்னை மட்டுமல்ல, வீட்டில் உள்ள பெண் புரசுகளையும் பாதுகாக்க வேண்டும். எல்லாவற்றையும் விட முக்கியமாக தனது தொழில்சார் அறத்துக்கு, மனசாட்சிக்குப் பதில் சொல்ல வேண்டும். வேலை நேரம் என்று வரையறுக்கப்பட்டிருந்தாலும் பாடசாலை முடிந்த பின்னரும் மேலதிக வகுப்புகள் நடாத்த வேண்டும். பரிட்சை விடைத்தாள்களை வீட்டுக்குக் காவிக் கொண்டு வர வேண்டும். "வேர்க் அற் ஹோம்" என்பது கொரோனாவுக்கு முன்னரே, ஆதியான காலமிருந்தே ஆசிரியருக்கு விதிக்கப்பட்ட ஒரு வாழ்வு. பள்ளிக்கூட வேலைகள் வீட்டுக்கு வரும். ஆனால் அதற்காக மேலதிக கொடுப்பனவுகள் கிடையாது.

ஒரு சமூகத்தில் எந்தத் தொழிலுக்கு பொறுப்பு அதிகமோ அந்தத் தொழிலுக்குத் தான் ஊதியமும் அதிகம். ஆசிரியர் தொழில் என்பது ஒரு தலைமுறையின் ஆளுமையை, அறிவைச் செதுக்கும் தொழில். ஆனால் இலங்கையில் ஆசிரியருக்கு ஒப்பிட்டுளவில் திருப்தியான சம்பளம் இல்லை. கடைசியாக அமல்படுத்தப்பட்ட சம்பள உயர்வின்படி ஆசிரியர்கள் ஒப்பீட்டளவில் கொஞ்சம் கூடுதலாகச் சம்பளம் பெறுகிறார்கள். ஆனால் இந்தியாவோடு ஒப்பிடுகையில் இது மிகக் குறைவு.

இலங்கைத் தீவு அதன் இலவசக் கல்வியைக் குறித்துப் பெருமைப் படுவதுண்டு. ஆனால் நாட்டில் உள்ள எத்தனை ஆசிரியர்கள் தங்களுடைய பிள்ளைகள் ஆசிரியர்களாக வரவேண்டும் என்று விரும்புகிறார்கள்? ஒரு தலைமுறையைச் செதுக்கும் தொழிலைச் செய்பவர்களில் அதிகமானவர்கள் தங்களுடைய பிள்ளைகளும் அந்தத் தொழிலைச் செய்ய வேண்டும் என்று விரும்பாதது ஏன்? செய்யும் தொழிலே தெய்வம் என்கிறோம். மாதா, பிதா, குரு தெய்வம் என்கிறோம். ஆனால் ஆசிரியர்களில் பெரும்பாலானவர்கள் ஏன் தங்கள் பிள்ளைகள் ஆசிரியர்களாக வருவதை விரும்புவதில்லை? கடந்த நூற்றாண்டில் கவிஞர் நீலாவாணன் எழுதினார் "பாவம் வாத்தியார்" என்று. இப்பொழுதும் செயற்கை நுண்ணறிவின் காலத்திலும் அதுதான் நிலைமையா ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுத்தறிய மறந்த தலைமையும் பாழாய்ப்போன மக்களும்!

- எம். பாண்டியராஜன்

முப்பத்தொன்பது உயிர்கள் பலி கொடுக்கப்பட்டுள்ளன.

கரூரில் கடந்த வாரம் சனிக்கிழமை இரவில் நடைபெற்ற நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகத்தின் பிரசாரக் கூட்டத்தில் நேரிட்ட நெரிசலில் சிக்கி மூச்சுத் திணறியும் மிதிபட்டும் இறந்தவர்கள் இவர்கள் - 13 ஆண்கள், 17 பெண்கள், என்ன கொடுமை, 4 சிறுவர்கள், 5 சிறுமிகள்! சிகிச்சையில் 51 பேர் இருக்கின்றனர்.

விக்கிரவாண்டியிலும் மதுரையிலும் இரண்டு மாநாடுகளைத் த.வெ.க.வினர் நடத்தினார்கள். பகல் நேரம், நீண்ட நேரம் காத்திருக்க நேர்ந்தாலும் சின்னச் சின்ன சம்பவங்கள் நடந்தாலும் மருத்துவ உதவிகள் கிடைத்தன.

வார இறுதி நாள் பிரசாரத்தை விஜய் தொடங்கியது முதலே மிகப் பெரிதாக எதையோ பணயம் வைக்கிறார்களோ என்றே தோன்றிக் கொண்டிருந்தது. கெடுவினையாக அவ்வாறே நடந்தும் விட்டது.

எந்த வகையில் திட்டமிட்டிருந்தாலும் திருச்சியின் முதல் பிரசாரக் கூட்டத்திலேயே நிறைய குழப்பம். கூட்டம் நடந்த இடத்துக்கு வந்து சேர 5 மணி நேரம் தாமதம். திருச்சியைத் தெரிந்த ஒவ்வொருவருக்கும் தெரியும் நடிகர் விஜய் பேசிய மரக்கடை சந்திப்பு எந்த அளவில் இருக்கும் என்பது. வரன்முறையின்றித் தாமதமாகி அரியலூரில் பேசி முடித்தபோது, காலங்கடந்துபோக, பெரம்பலூர் கூட்டம் ரத்து செய்யப்பட்டது - காத்திருந்த அவ்வளவு பேரும் நள்ளிரவில் ஏமாற்றத்துடன் திரும்பினார்கள்.

நாகப்பட்டினத்திலும் திருவாரூரிலும் ஒரே நாளில் பிரசாரக் கூட்டங்கள். எல்லா இடங்களிலும் இருந்த முதன்மையான பிரச்சினை - விஜய்யின் மைக். எங்கேயும் சரியாகக் கேட்கவில்லை. பல கோடி ரூபாய் வாகனத்திலுள்ள ஒலிவாங்கியை - ஒலிபெருக்கியைச் சரி செய்ய முடியவில்லை. ஒரு கையில் மைக்கையும் இன்னொரு கையில் தாள்களையும் பிடித்துக் கொண்டு இவர் தன்னுடைய சிற்றுரையை பார்த்துப் பார்த்து வாசிக்கும் (பேசும்) போது மைக்கிற்கும் வாய்க்கும் இடையிலுள்ள தொலைவு மாறிக்கொண்டே இருப்பதாலேயே ஒலிபெருக்கியில் பேச்சு சரியாகவும் தொடர்ச்சியாகவும் விழுவதில்லை. இதனால் கூட்டத்திற்கு வந்திருக்கிற யாருக்கும் சரியாகக் கேட்பதில்லை. இதனாலேயே தொண்டர்கள் அலைமோதினார்கள். அனுபவம் மிக்க எந்தவோர் அரசியல் கட்சிக் கூட்டத்திலும் கூட்டப் பகுதி முழுவதும் குழாய், பாக்ஸ் ஒலிபெருக்கிகளை முன்னதாகவே வைத்துவிட்டு, ஒரே இணைப்பில் தலைவருடைய பேச்சை அனைவருக்கும் கேட்கும்படி செய்துவிடுவார்கள். இங்கோ பரிதாபம்.

உயிர் குடித்த சனிக்கிழமைப் பயணத்



திட்டத்திலேயே தொடங்கிவிட்டது முதல் கோணல்! உள்ளபடியே, வட சென்னை, திருவள்ளூர் மாவட்டங்களில்தான் விஜய் பிரசாரம் செய்யத் திட்டம். ஆனால், பின்னர் நாமக்கல், சேலம் என மாற்றப்பட்டது. கடந்த வாரம் சனிக்கிழமை திருவாரூரில் விஜய் பேசிய பகுதியிலேயே போட்டிக்காக திமுகவும் கூட்டம் நடத்தியதாகக் கருதிக்கொண்டு, சேலத்தை மாற்றிக் கடந்த வாரம் திமுக விழா நடத்திய கரூரை பிரசாரத்துக்காகத் தேர்ந்தெடுத்ததாகக் கூறப்படுகிறது.

நாமக்கல்லில் காலை 8.45 மணிக்கு விஜய் பிரசாரக் கூட்டம் என்றுதான் சமூக ஊடகத்தில் த.வெ.க. அறிவித்திருந்தது. ஆனால், சென்னையில் விஜய் புறப்பட்டபோதே 8.45 மணி. நாமக்கல்லில் அவர் பேசும்போது பிற்பகல் 2 மணியிருக்கலாம்!

கரூரில் பகல் 12 மணிக்குக் கூட்டம் என்று அறிவிக்கப்பட்டாலும் அனுமதியே பகல் 3 மணி முதல் இரவு 10 மணிக்குதான் பெற்றிருந்திருக்கின்றனர். உச்சிவெய்யிலில் 12 மணிக் கூட்டத்துக்கு 11 மணியிலிருந்தே மக்கள் திரண்டு காத்திருந்தனர். ஆனால், பேசும் இடத்துக்கு விஜய் வந்துசேர்ந்தபோது மாலை 6 மணிக்கு மேலாகிவிட்டது. தொல்லை பிடித்த மைக்கும் உடன் வந்தது. பேச்சில், தான் பேசும் பேச்சு தனக்கே தாமதமாகக் கேட்பதாக நகைச்சுவையாக வேறு சொல்லிக்கொண்டார் விஜய்.

கரூரில் மணிக்கணக்காகக் காத்திருந்த கட்டுக்கடங்காத பெரும் கூட்டம், கடும் நெரிசல். விஜய் சரியாகக்கூட பேசி முடிக்கவில்லை. மின்கம்பங்களில் எல்லாம் ஆள்கள் ஏறியிருந்த நிலையில் மின்சாரமும் நிறுத்தப்பட்டது. தொலைக்காட்சிகளில் நேரலை துண்டிக்கப்பட்டது (கூட்டத்தில் காவல்துறை தடியடி நடத்தியதாகவும் சொல்கிறார்கள், சில காணொலிகள் பகிரப்படுகின்றன. உறுதியாக எதுவும் தெரியவில்லை). சிறிது நேரத்திலேயே நெரிசலில் சிக்கி நால்வர் பலி, 9 பேர் பலி, எண்ணிக்கை உயருகிறது என்று தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே செல்லத் தொடங்கிவிட்டது. நள்ளிரவு 1 மணிவாக்கில் மொத்தம் 39!

உடனடியாக, முழு அரசு எந்திரமும் முடுக்கிவிடப்பட்டது. அடுத்தடுத்துக் கரூரிலேயே இருந்த செந்தில் பாலாஜி, திருச்சியிலிருந்த அன்பில் மகேஸ் என அமைச்சர்கள் விரைந்தனர். முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமைச் செயலகம் வந்தார் நள்ளிரவிலேயே தனி விமானத்தில் திருச்சி விரைந்து கரூருக்கே சென்றுவிட்டார். குடியரசுத் தலைவர் முர்மு, பிரதமர் மோடியில் தொடங்கி தொடர்ச்சியாக இரங்கல் செய்திகள்.

ஆனால், ஓர் அரசியல் கட்சியின் தலைவராக எப்படிச் செயல்பட்டிருக்க வேண்டும் என்பதுகூடத் தெரியாமல், தன்னைப் பார்க்க, தன் பேச்சைக் கேட்க வந்து, நெரிசலில் சிக்கித் தன்னுடைய ரசிகர்கள் (அல்லது தொண்டர்கள்) 39 பேர் செத்துப்போய் சடலங்களாக மருத்துவமனைச் சவக்கிடங்கில் கிடக்கும் போது, அவர்களுடைய உறவுகள் எல்லாரும் மருத்துவமனை வளாகத்தில் கத்திக் கதறிக் கொண்டிருக்கும்போது, அவர்களைச் சென்று பார்க்காமல், அவர்கள் குடும்பங்களுடன் தோள்கொடுத்து நிற்காமல், எந்தவொரு கட்சியின் தலைவராவது ஏற்கெனவே திட்டமிட்டபடி, விமானத்திலேறி சென்னை திரும்பி, சாகவாசமாக 4 மணி நேரத்துக்குப் பிறகு, 'இதயம் நொறுங்கிப் போயிருப்பதாக' இரங்கல் ட்வீட் செய்வார்களா?

அரசியலுக்கு யார் வேண்டுமானாலும் வரலாம், தவறே இல்லை. நடிகராக இருந்து அரசியலுக்கு வருவதிலும் எந்தக் குறையும் இல்லை. திரையிலிருந்து வந்தாலும் இன்றைக்கும் நாடு போற்றும் நல்ல பல மாற்றங்களுக்குச் சொந்தக்காரர் முதல்வராக இருந்த எம்.ஜி.ஆர். வெறுமனே அவர் பெயரைச் சொல்வது மட்டுமே போதாது. புதிதாகக் கட்சி தொடங்கியிருப்பவர், இளைய தலைமுறையைச் சேர்ந்தவர், ஏதோ செய்ய நினைக்கிறார் என்பதாலேயே பெருமளவில் விஜய்க்கு எதிரான விமர்சனங்கள் குறைவாகவே இருந்தன. இவர் 'தீவிரமான' பிரசாரத்தைத் தொடங்கி வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசியபோதுகூட தலைவர்கள் யாரும் கடுமையாக விமர்சிக்கவில்லை. ஆனால், இப்படியொரு விபரீதம் நேரிடும்போது, இத்தனை உயிர்களைப் பலி கொடுக்க நேரிடும் போது...

இவருக்கெல்லாம் யார் யோசனை சொல்கிறார்கள்? அல்லது யாருடைய யோசனைகளைக் கேட்டு இவர் செயல்படுகிறார்? என்னதான் நினைக்கிறார்? அரசியலுக்கு வருவது தப்பு அல்ல. வந்ததும் அதற்கான அளவில் தகுதிப்படுத்திக் கொள்ளவும் வேண்டும்தானே. பெருந்துயரமான இந்தத் தருணத்தில் விமர்சனம் வேண்டாம் என்றாலும் இப்போது சொல்லாமல் வேறெப் போதுதான் இவற்றைச் சொல்வது?

நெரிசலில் பலிகள் நேர்ந்ததே இல்லை என்று சொல்ல முடியாது. ஆனால், அரசியல் கட்சியொன்றின் கூட்டத்தில் நேரிட்ட நெரிசலில் சிக்கி இத்தனை பேர் உயிரிழந்திருப்பது நாட்டிலேயே இதுதான் முதல் முறை.

திரைப்படங்களில் தேர்ந்த வசனகர்த்தாக்களால் எழுதித் தரப்பட்டுப் பேசும் வசனங்கள் மட்டுமே அரசியலாகிவிடுவதில்லை. சிறிது நேரம் அப்படிப்பட்ட வசனங்களை உணர்ச்சிபொங்கப் பேசுவதாலேயே ஒருவர் தலைவராகிவிடவும் முடியாது. இப்போது இத்தனை உயிர்கள் இழக்கப்பட்டிருக்கின்றனவே, யார் பொறுப்பு?

குடும்பங்களைக் காக்க வேண்டிய ஆண்கள், பெண்கள், எவ்வளவோ எதிர்காலக் கனவுகளுடன் வளர்க்கப்பட்ட குழந்தைகள் எல்லாரும் பலி.

கட்சிகளுக்கு, தலைவர்களுக்கு இப்படிப் பெரிய அளவில் கூட்டம் கூடுவது இதுவரையில் காணாத ஒன்றல்ல. இதைவிட பெரிய கூட்டங்கள் திரண்டிருக்கின்றன. நடிகராக இருந்து முதல்வருமான எம்.ஜி.ஆருக்குத் திரளாத கூட்டமா? அண்ணா, எம்ஜிஆர் எல்லாம் மாலையில் கூட்டம் என்று அறிவித்திருந்தாலும் மறுநாள் விடியற்காலையில்தான் திடலுக்கு வந்து சேருவார்கள். விடிய விடியக் கூட்டம் அமைதியாகக் காத்திருக்கும் கேள்விப்பட்டிருக்கிறோம்.

அரசியல் கட்சியாகத் தொண்டர்கள் கட்டுக்கோப்புடன் இருப்பார்கள். தலைவர்கள் ஒரு சொல் சொன்னால் கூட்டமே அமைதியைக் கடைப்பிடிக்கும். விஜய் வீதிக்கு வந்து பிரசாரத்தைத் தொடங்கியதிலிருந்தே கட்டுக்கடங்காத பெருங்கூட்டம். காவல்துறையால் மட்டுமே ஒரு கூட்டத்தைக் கட்டுப்படுத்திவிட இயலாது. முடியவும் முடியாது. அப்படியென்றால், ஒவ்வொரு கூட்டத்திலும் ஆளுக்கொரு போலீஸ்காரரைத்தான் காவலுக்கு நிறுத்த வேண்டியிருக்கும். சாத்தியமுமில்லை. கட்சியிடமும் கட்சியின் தலைவரிடமும்தான் அந்தச் செல்வாக்கு இருக்க வேண்டும்.

ஆனால், செல்லும் இடங்களில் கட்டுக்கடங்காமல் திரளும் ஒன்று மறியாத ஆர்வம் கொண்ட ரசிகர்கள் - தொண்டர்கள் கூட்டத்தைக் கட்டுக்குள் கொண்டுவருவதற்குப் பதிலாக, ஒழுங்குபடுத்துவதற்குப் பதிலாக அந்தக் கூட்டத்தையே தன்னுடைய செல்வாக்கு என மேலும் ஊக்குவித்தால் இப்படியெல்லாம்தான் நேரிடும். விஜய்யின் கூட்டத்துக்கான அனுமதி தொடர்பாக, காவல்துறை மீதும் அரசு மீதும் நிறைய குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்படுகின்றன. எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் கூட்டங்களை நடத்திக்கொண்டுதானே இருக்கிறார்கள்?

விஜய் கூட்டங்களுக்கு எவ்வித பாரபட்சமுமின்றி அனுமதி வழங்க வேண்டும் எனக் கோரி த.வெ.க. தொடர்ந்த வழக்கில், தலைவராக இருக்கும் நீங்கள்தான் கூட்டத்தைக் கட்டுப்படுத்த வேண்டும்: உயரமான இடங்களில் ஏறிநின்று ஏதேனும் அசம்பாவிதம் நேரிட்டால் யார் பொறுப்பேற்பது? தொண்டர்களைக் கட்சித் தொண்டர்கள் ஒழுங்குபடுத்த வேண்டாமா? என்று கடந்த வாரத்தில்தான் சென்னை உயர் நீதிமன்றம் கேட்டிருந்தது.

விஜய் பிரசார விஷயத்தில் காவல்துறையும்கூட இன்னமும் கறாராக நடந்துகொண்டிருக்கலாம். இவ்வளவு பெரிய கூட்டம் திரளும்போது, ஊருக்கு வெளியே ஏதேனும் பெரிய திடலில் கூட்டம் நடத்திக்கொள்ள அனுமதிக்க வேண்டியதுதானே? எதற்காக நகருக்குள்ளே நடத்தி எல்லாருக்கும் இடைஞ்சல் ஏற்படுத்த வேண்டும்? கூட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் போய்விடும் என்றால் அனுமதியை மறுத்திருக்க வேண்டியதுதானே?

இந்த மக்களும்தான் கொஞ்சமேனும் யோசிக்க வேண்டாமா? தலைவர், எந்தப்

(14ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் ஏற்கும் காசா போர் நிறுத்தம்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா



## ஹமாஸ் நிராகரிக்கும் இருபது அம்ச திட்டம்:



காசாவிலிருந்து இஸ்ரேலிய இராணுவம் படிப்படியாக வெளியேறும் இருபது அம்ச போர் நிறுத்த திட்டம் ஹமாசால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போரை முடிவுக்குக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்ட இருபது அம்ச அமைதி திட்டத்தை அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவித்துள்ளார். இதை ஏற்பதாக இஸ்ரேல் கூறியுள்ள நிலையில், ஹமாஸ் முதலில் மவுனம் காத்தது. தற்போது நிராகரித்ததாக செய்திகள் வெளியாகியுள்ளன.

காசாவில் உள்ள ஹமாஸின் இராணுவப் பிரிவின் தலைவர் புதிய போர்நிறுத்தத் திட்டத்திற்கு உடன்படவில்லை என்று தெரிவித்துள்ளார். ஹமாஸை அழித்து முடிவுக்குக் கொண்டு வருவதற்காக இந்த திட்டம் வடிவமைக்கப்பட்டதாக இராணுவப் பிரிவின் தலைவர் இஸ் அல்-தின் அல்-ஹதாத் தெரிவித்துள்ளார். ஹமாஸ் அமைப்பு இதை ஏற்றுக்கொண்டாலும் இல்லாவிட்டாலும், அவர் தொடர்ந்து போராடத் தீர்மானித்துள்ளார்.

போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் இந்த திட்டம் இஸ்ரேலால் ஏற்கனவே ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஹமாஸ் நிராயுதபாணியாக்கப்பட வேண்டும், மேலும் காசாவை நிர்வகிப்பதில் எதிர்காலப் பங்கு எதுவும் இல்லை என்று கூறுகிறது.


கட்டாரில் உள்ள ஹமாஸின் சில அரசியல் தலைமைகள் மாற்றங்களுடன் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது.

ஆனால் ஹமாஸ் அமைப்பால் பிடிக்கப்பட்ட பணயக்கைதிகள் மீது அவர்களுக்கு கட்டுப்பாடு இல்லாததால் அவர்களின் செல்வாக்கு மட்டுப்படுத்தப்பட்டதாகக் கருதப்படுகிறது.

இன்னமும் 48 பணயக்கைதிகள் இருப்பதாக நம்பப்படுகிறது. அவர்களில் 20 பேர் மட்டுமே உயிருடன் இருப்பதாகக் கருதப்படுகிறது.

ஹமாஸில் உள்ள சிலருக்கு மற்றொரு தடையாக இருப்பது என்னவென்றால், போர்நிறுத்தத்தின் முதல் 72 மணி நேரத்திற்குள் அனைத்து பணயக் கைதிகளையும் ஒப்படைக்க வேண்டும் என்று இந்த திட்டம் கோருகிறது. இது அவர்களின் ஒரே பேரம் பேசும் திறனை அழிக்கிறது.

இஸ்ரேல் விதிமுறைகளுக்குக் கட்டுப்படும் என்று ட்ரம்ப் உத்தரவாதம் அளித்தாலும், பணயக்கைதிகளை ஏற்றுக்கொண்டவுடன் இஸ்ரேல் தனது இராணுவ நடவடிக்கைகளை மீண்டும் தொடங்காது என்ற நம்பிக்கை ஹமாஸ் அமைப்புக்கு இல்லை. குறிப்பாக கடந்த மாதம் அமெரிக்காவின் எதிர்ப்பை மீறி கட்டாரில் ஹமாஸ் தலைமையை வான்வழித் தாக்குதலில் படுகொலை செய்ய முயன்ற பிறகு நம்பிக்கையை இழந்து விட்டனர்.



பாலஸ்தீனத்தின் காசாவை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஹமாஸ் அமைப்பு மீது கடந்த 2023 அக்டோபர் 7இல் இஸ்ரேல் துவங்கிய போர், இரண்டு ஆண்டுகளை எட்டியுள்ளது. இந்தப் போரில் பாலஸ்தீன தரப்பில், 66,000 பேர் கொல்லப்பட்டு உள்ளதாகவும், மனிதாபிமான உதவிகள் கிடைக்காமல் தவிப்பதாகவும் கூறப்படுகிறது.

### அரபு நாடுகள் ஆதரவு:

காசா போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கு சர்வதேச நாடுகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. அதன் ஒரு கட்டமாக, பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிப்பதாக பல நாடுகள் கூறியுள்ளன.

ஆமெரிக்காவின் யோசனையை பல அரபு நாடுகள் வரவேற்றதுடன், இஸ்ரேல் - ஹமாஸ் போரை முடிவுக்கு கொண்டு வர முன்மொழிந்துள்ள அமைதி திட்டத்துக்கு ஆதரவு அளித்துள்ளன. சவுதி அரேபியா, கட்டார், எகிப்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஜோர்டான், துருக்கி, இந்தோனேஷியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் கூட்டறிக்கை வெளியிட்டு ட்ரம்பின் முயற்சிகளுக்கு வரவேற்பு தெரிவித்துள்ளன.

இந்த ஒப்பந்தத்தை இறுதி செய்வதற்கும், செயல்படுத்தவதற்கும் அமெரிக்கா மற்றும் பிற தரப்பினருடன் இணைந்து செயல்பட தயாராக உள்ளதாக அவை தெரிவித்துள்ளன. இதேவேளை பல உலகத் தலைவர்கள் இந்த திட்டத்தை ஆதரித்து உள்ளனர்.

பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மக்ரான், இத்திட்டத்தின் அடிப்படையில் இஸ்ரேல் உறுதியுடன் ஈடுபடும் என்று நான் எதிர்பார்க்கிறேன். அனைத்து பிணைக் கைதிகளையும் உடனடியாக விடுவித்து, இந்த அமைதி திட்டத்தை பின்பற்றுவதைத் தவிர ஹமாசுக்கு வேறு வழியில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

மேலும் இத்தாலி அதிபர் ஜார்ஜியா மெலோனி, இந்த அமைதித் திட்டம், ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தும். இது மோதலை நிரந்தரமாக நிறுத்துவதற்கும், அனைத்து பிணைக் கைதிகளையும் உடனடியாக விடுவிப்பதற்கும், பொதுமக்களுக்கு முழுமையான மற்றும் பாதுகாப்பான மனிதாபிமான அணுகலை அனுமதிப்பதற்கும் வழிவகுக்கும் என நம்புவதாக தெரிவித்துள்ளார்.

### 20 அம்ச அமைதித் திட்டம்:

ஆனாலும் காசா மீதான ஹமாஸின் அரசியல் மற்றும் ராணுவ கட்டமைப்பை கலைப்பதே இந்த அமைதி திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். ஹமாஸ் மற்றும் பிற ஆயுதக் குழுக்கள் தங்கள் ஆயுதங்களைக் கைவிட்டு, வெடிபொருள் சுரங்கங்கள் மற்றும் ஆயுத உற்பத்தி நிலையங்



கள் உட்பட ராணுவ கட்டமைப்புகளை கலைக்க வேண்டும் என்பது அமெரிக்காவின் நோக்கமாகும்.

அத்துடன் ஹமாஸ் அமைப்பு, நேரடியாகவோ, மறைமுகமாகவோ அல்லது எந்த வடிவத்திலோ காசா அரசில் எந்த பதவியும் வகிக்க முடியாது. உயிருடன் அல்லது இறந்த அனைத்து இஸ்ரேலிய பிணைக் கைதிகளையும் திருப்பி அனுப்ப வேண்டும். பதிலுக்கு ஆயுள் தண்டனை அனுபவித்த 250 பாலஸ்தீனியர்களையும், மோதல் துவங்கியதில் இருந்து கைது செய்யப்பட்ட அனைத்து பெண்கள் மற்றும் குழந்தைகளையும் சேர்த்து 1,700 காசா மக்களையும், இஸ்ரேல் விடுவிக்கும்.

மேலும் இறந்த இஸ்ரேலிய பிணைக் கைதிகளை திருப்பி தந்தால், போரின் போது கொல்லப்பட்ட பாலஸ்தீனியர்களின் உடல்களை இஸ்ரேல் திருப்பியளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன் அமைதியான வாழ்வுக்கு உறுதியளிக்கும் ஹமாஸ் உறுப்பினர்களுக்கு காசாவில் தொடர்ந்து வாழ்வதற்கு பொது மன்னிப்பு வழங்கப்படும். அங்கிருந்து வெளியேற விரும்புபவர்களுக்கு, அவர்களை ஏற்றுக் கொள்ளும் நாடுகளுக்கு பாதுகாப்பான பயணம் வழங்கப்படும்.

இறுதியாக போர் முடிவுக்கு வந்ததும், ஆரம்பத்தில் அரசியல் சார்பற்ற பாலஸ்தீன குழுவால் காசா நிர்வகிக்கப்படும். இக்குழுவில் தகுதிவாய்ந்த பாலஸ்தீனியர்கள் மற்றும் சர்வதேச நிபுணர்கள் இருப்பர். பொது சேவைகள் மற்றும் நகராட்சி நிர்வாகத்துக்கு இக்குழு பொறுப்பேற்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ட்ரம்ப் தலைமையில் அமைதி குழு:

இந்த அமைதிக்கான இடைக்காலக் குழு, அமைதி வாரியம் என்ற ஒரு புதிய சர்வதேச அமைப்பால் கண்காணிக்கப்படும். இவ்வாரியத்திற்கு அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தலைமை தாங்குவார். பிரிட்டன் முன்னாள் பிரதமர் டோனி பிளேர் போன்ற உலக தலைவர்களும் இதில் இடம் பெறுவர். இவ்வாரியம் காசாவின் புனரமைப்புக்கான நிதி மற்றும் கட்டமைப்புகளை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும்.

தற்போதைய பாலஸ்தீன அதிகார சபை ஒரு சீர்திருத்தத் திட்டத்தை நிறைவு செய்த பின்னரே, காசாவின் கட்டுப்பாட்டை எடுக்க முடியும். ஆனால், இத்திட்டத்தை செயல்படுத்த காலக்கெடு அறிவிக்கப்படவில்லை.

இந்த அமைதி திட்டம் ஆனது ஹமாசை அதிகாரத்தில் இருந்து அகற்றி, அதற்கு பதிலாக சர்வதேச மேற்பார்வையில் ஒரு நிர்வாகத்தை நிறுவி, இறுதியில் கட்டுப்பாட்டை பாலஸ்தீனத்திடம் ஒப்படைக்க முன்மொழிகிறது என்பதே உண்மை ஆகும்.

### சர்வதேச அமைதி படை:

காசா பகுதியில் உடனடி போர்நிறுத்தம் ஏற்பட்டால் இந்த அமைதி திட்டத்தின் கீழ், ஹமாஸ் ஆயுதங்களை களைய வேண்டியிருக்கும், மேலும் அமெரிக்கா அரபு மற்றும் சர்வதேச கூட்டாளர்களுடன் இணைந்து தற்காலிக சர்வதேச படையை நிறுவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

காசாவை நிர்வகிப்பதில் ஹமாஸ் எந்தப் பங்கையும் வகிக்காது என்றும் இந்த திட்டம் கூறுகிறது. அதன் உறுப்பினர்கள் அமைதியான சகவாழ்வுக்கு உறுதியளித்தால் அவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படும். அதே நேரத்தில் அந்த இடத்தை விட்டு வெளியேற விரும்புவோருக்கு வெளிநாடுகளுக்கு பாதுகாப்பான பாதை வழங்கப்படும்.

மேலும் காசாவில் தினசரி சேவைகளை வழங்க பாலஸ்தீன தொழில்நுட்ப வல்லுநர்களின் இடைக்கால அரசாங்கம், சுயாட்சி, இடம்பெயர்ந்த குடியிருப்பாளர்களின் மீள் வருகை மற்றும் காசா மக்கள் அகற்றப்பட மாட்டார்கள் என்ற உறுதி மொழிகளையும் இந்த திட்டம் மூலம் தெரியவருகிறது.

### கட்டாரிடம் மன்னிப்பு கோரிய இஸ்ரேல்:

செப்டம்பர் மாத தொடக்கத்தில் கட்டார் நாட்டின் தலைநகர் டோஹாவில் ஹமாஸ் தலைவர்களை குறிவைத்து நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதலில் பலர் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலுக்கு தற்போது கட்டாரிடம் மன்னிப்பு கோரியுள்ளது இஸ்ரேல் அரசு.

மேலும் இஸ்ரேலிய பிரதமர் மன்னிப்புக் கோரியதை அடுத்து, காசாவில் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான முயற்சிகளைத் தொடரத் தயாராக இருப்பதாக கட்டார் பிரதமர் கூறியுள்ளார்.



ஆனாலும் ஹமாஸ் ஒப்புக்கொண்டால் போர் நிறுத்தம் உடனடியாக அமலுக்கு வரும் என்றும், இல்லையென்றால் இஸ்ரேல் ராணுவ நடிவடிக்கை வாயிலாக ஹமாஸ் அமைப்பை முற்றிலுமாக ஒழிக்க, இஸ்ரேலுக்கு அமெரிக்கா முழுமையான ஆதரவளிக்கும் என கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோவிலில் ஆசிரியர்கள் மீது தாக்குதல் சம்பவங்கள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 05

அம்பாறை மாவட்டம், திருக்கோவில் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர், ஆசிரியர்கள் அண்மைக்காலமாக வெளிநபர்களால் தாக்குதலுக்கு உள்ளாகும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் தீபன் திலீசன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சம்பவங்களைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸ்துறையினரோ, அரசாங்கமோ ஆக்கபூர்வமான தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் இருப்பதன் பின்னணி பாரிய சந்தேகங்களை ஏற்படுத்துகின்றன.

2025. 05. 23ஆம் திகதியன்று திருக்கோவில் கல்வி வலயத்துக்குட்பட்ட ஆலயடிவேம்பு திருநாவுக்கரசு வித்தியாலயத்தின் அதிபர் மற்றும் ஆசிரியரும் வாள்வெட்டு தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர்.

திருக்கோவில் கல்வி வலயத்தால் நடத்தப்பட்ட மேலதிக செயலமர்வுக்கு தொடர்ச்சியாக சமுகமளித்திராத மாணவியொருவரின் வரவை உறுதிப்படுத்துவதற்காக, பாடசாலை அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைய, மாணவர் இடைவிலகலை கட்டுப்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட கட்டாய வரவு குழுவுக்கு பொறுப்பான ஆசிரியர், மாணவியின் வீட்டுக்கு தேடிச்சென்ற போது, குறித்த மாணவியின் மைத்துனரால் உறவினர் ஒருவரால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அத்துடன் சம்பவத்தை அறிந்து அந்த இடத்துக்குச் சென்ற அதிபர் மீதும் குறித்த நபரால் வாள்வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டது. அத்தோடு, அதிபரின் மோட்டார் சைக்கிளும் பாரிய சேதத்துக்கு உள்ளாக்கப்பட்டிருந்தது.

மேலும், 2025.10.01 ஆம் திகதியன்று கல்முனை திருக்கோவில் கல்வி வலயத்துக்குட்பட்ட அக்கரைப்பற்று சிறீ இராமகிருஷ்ண கல்லூரியின் பிரதி அதிபர், முகமூடி அணிந்த இனம் தெரியாத நபர்களால் தாக்கப்பட்டுள்ளார். நவராத்திரி விழாவின் ஓர் அங்கமாக கும்ப ஊர்வலம் சென்ற மாணவிகளை அசௌகரியப்படுத்தும் வகையில் பெண் பிள்ளைகளை நெருங்கி புகைப்படம் மற்றும் வீடியோ எடுக்க சில இளைஞர்கள் முற்பட்டுள்ளனர். குறித்த இளைஞர்கள் தங்களைப் புகைப்படம் எடுப்பதைத் தடுக்குமாறு மாணவிகள் விடுத்த வேண்டுகோளுக்கமைய, புகைப்படம் வீடியோ எடுக்க முயன்ற இளைஞர்களைத் தடுத்திருந்த பிரதி அதிபரின் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பிரதி அதிபரின் வீடுதேடிச் சென்ற முகமூடி அணிந்த இனந்தெரியாத நபர்கள் அவரை இரும்புக் கம்பிகளால் தாக்கியுள்ளனர்.

நாட்டில் குற்றச் செயல்களைத் தடுத்து நிறுத்துவதற்காக டுபாயிலும், இந்தோனேஷியாவிலும் வைத்து பாதாள உலகக் குழுக்களை கைது செய்துள்ளதாக பிரசாரம் செய்துவரும் அரசாங்கம், பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாமல் இருப்பது கவலைக்குரியதாகும்.

அரசாங்கம், தண்டனைச் சட்டக்கோவையைத் திருத்துவதற்கான சட்டமூலத்தை வெளியிட்டுள்ளது. இக்கொள்கை இலங்கையில் காணப்படும் சமூகவியல் பின்னணிகளை கவனத்தில் கொண்டு தயாரிக்கப்பட்டதா? என்ற கேள்வி பலராலும் எழுப்பப்படுகிறது. மாணவர்களுக்கு அதிபர், ஆசிரியர்களால் வழங்கப்படும் உளரீதியான தண்டனைகளுக்கு கூட சிறைத்தண்டனைகளையும் அபராதங்களையும் விதிக்கும் சட்டமூலத் திருத்தங்களை மேற்கொண்டுள்ள அரசாங்கம், பாடசாலை மாணவர்களையும் அதிபர், ஆசிரியர்களையும் பாதுகாக்கத் தவறும் பொலிஸ்துறையினருக்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய புதிய சட்ட மூலங்களை உருவாக்கத் தவறியுள்ளது.

மாணவர்களுக்கு கட்டுப்படுத்த முடியாத சுதந்திரத்தை வழங்கும் சட்டமூலங்களை அரசாங்கம் உருவாக்குவதற்கு முன்னர், கட்டுக்கடங்காத சுதந்திரத்தை மாணவர்களுக்கு வழங்கும் குறித்த சட்டமூலங்களை தமக்கு சாதகமாக பயன்படுத்தி சமூக சீரழிவுகளில் ஈடுபடும் நபர்களால் அதிபர், ஆசிரியர், மாணவர்கள் மற்றும் சமூகம் பாதிக்கப்படும் விடயங்களுக்கும் தீர்வு வழங்க முன்வர வேண்டும்.

திருக்கோவில் கல்வி வலயத்துக்குட்பட்ட பிரதேசங்களில் அதிபர், ஆசிரியர்களுக்கு எதிராக நடைபெற்ற காட்டுமிராண்டி தனமான சம்பவங்களை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாக கண்டிக்கிறது.

குறித்த விடயங்கள் தொடர்பில், அரசாங்கம் குற்றவாளிகளை கைது செய்வதுடன் மட்டும் நின்றுவிடாமல் சமூக சுதந்திரத்துக்கு அச்சுறுத்தலற்ற சூழல் உருவாக்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்துகின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-05)

## வழி தவறிப்...

10ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரிப்பணத்தில் தமது சலுகைகளைப் பெருக்காதிருந்தாலே சைக்கிளில் நீண்ட தூரம் பயணித்து தன்பணி செய்த எளி மையான மனிதர்களுக்கான கௌரவமாக இருக்கும்.

இதேபோல சில சபைகள் தமது இய லுமைக்கு அப்பாற்பட்ட விடயங்களில் வலிந்து மூக்கை நுழைக்க முற்படுவது போலத் தெரிகிறது. அதிகாரம் இருந்தாலும் அது நடைமுறைச் சாத்தியமாகுமா எனச் சிந்திக்கவேண்டும். உதாரணமாக தனியார் கல்வி நிலையங்களின் கல்வி நடவடிக்கை தொடர்பான கட்டுப்பாடு களை விதிக்க முனைதல். இது சமூக அக் கறைக்குரிய ஒரு விடயமென்றாலும் அவற்றை கல்வித்துறை சாரந்தவர்களும் பெற்றோர்களும் கையாள்வதே பொருத் தமாகும். அதைவிடுத்து சபையொன்று அது தொடர்பன தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவதால் மட்டும் எதனையும் சாதித்துவிட முடியாது. இது மேலும் பிரச்சினைகளையும் முரண்பாடுகளையுமே வளர்க்கும். இதற்குப்பதிலாக தனி யார் கல்வி நிலையங்களில் மாணவர்க ளுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதில் கவனஞ்செலுத்த முடியும். இன்று பல தனியார் கல்வி நிலையங்கள் போதுமான மலசலகூட, குடிநீர் வசதி கள் கூட இல்லாமலிருக்கின்றன. தனியார் கல்வி நிலையங்களைக் கட்டுப்படுத்த விரும்பும் எத்தனை சபைகள் தாம் செய்ய வேண்டிய பணிகளில் ஒன்றான அறநெறிப் பாடசாலைகளை நிறுவி ஒழுங்காக நடத்துகின்றன? கனிகளிருக்க ஏன் காய் களைப் பறிக்க முயலவேண்டும்?

உள்ளூராட்சி மன்றங்கள் மக்களுடன் அதிகளவில் இடைவினைகள் கொண்ட ஒரு ஜனநாயகப் பொதுக் கட்டமைப்பு நிறுவனம். இந்நிறுவனத்தின் மக்களுக்கான பல பணிகளை அந்த மக்களின் பங் களிப்புகளுடன் மிகச்சிறப்பாக நிறைவேற் றிக் கொள்ள முடியும். இந்நிறுவனங்க ளுக்கான வருமான மூலங்கள் மட்டுப்பாடானவை. அரசாங்கத்தின் உதவிகளும் அவ்வாறே. ஆனால் மறுபுறத்தில் தேவைகளோ அதிகம். இந்நிலையில் மக்களின் பங்களிப்புடன் நிறைவேற்றக்கூடிய பணிகள் தொடர்பான முன்னெடுப்புகள் அதி பயனைத் தரும். எடுத்துக்காட்டாக ஒரு வட்டாரத்தில் உள்ள வீதிகளை அவ்வட்டாரத்திலுள்ள சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள், பொதுமக்கள் ஆகியோருடன் சபையின் பணியாளர்க ளும் இணைந்து மாதத்தில் இருதடவைகள் சுத்தம் செய்தாலே பல வீதிகள் அழ காகும் என்பதுடன் மக்களுக்கும் தமது வீதிகளை அழகாக வைத்திருக்க வேண் டும் என்ற உணர்வு வரும். இதில் குறித்த வட்டார உறுப்பினர் மட்டுமன்றி அவ் வட்டார உறுப்பினராவதற்கு தேர்தலில் போட்டியிட்டவர்களும் தமக்கிடையிலான முரண்பாடுகளை மறந்து இணைந்து மக்களின் பங்களிப்பை முழுமையாகத் திரட்ட முடியும்.

## பிறமொழி கலப்பின்றி...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு வாரப் பத்திரிகை நடத்திய சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற சிறுகதை ஒன்றில், அதன் கதாபாத்திரத்தின் பெயர் வருமிடங்களில் எல்லாம் பிழையாக இருந்தது. இது அச்சுப் பிழையாக இருக்க வாய்ப்பில்லை. எழுதியவர் பிழையாக எழுதியிருந்தால், அதை திருத்தியிருக்க வேண்டியது அவசியம்.

விழாக்களில் பேசுபவர்கள் எல்லோரும் 'இனிய காலை வணக்கம்' என்றோ 'இனிய மாலை வணக்கம்' என்றோ தான் பேச்சைத் தொடங்குவார்கள். தமிழில் ஒரே 'வணக்கம்' தான். இந்தப் பிழையைப் பல தமிழறிஞர்கள் சுட்டிக் காட்டியும் யாரும் திருத்திக் கொள்வதாக இல்லை.

பள்ளிகளில் ஆசிரியர்களை 'ஐயா' என்றும், ஆசிரியைகளை 'அம்மா' என்றும் விளித்தது போய், 'சோர்' என்றும் 'மிஸ், டீச்சர்' என்றும் கூப்பிட ஆரம்பித்து, பிறகு ஆசிரியைகளை 'மேடம்' என்று அழைத்து, இப்போது அதுவும் குறுகி 'மேம்' என்று வந்து நிற்கிறது.

# ஹற்றனில் நடைபாதைகளில் வியாபாரம் செய்வதற்கு தடை

ஹற்றன், ஒக். 05

நுவரெலியா, ஹற்றன் நகரில் நடைபாதைகளில் வியாபாரம் செய்யத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தீபாவளி பண்டிகைக் காலத்துக்காக ஹற்றன் டிக்கோயா நகர சபையில் வணிக நடவடிக்கைகளுக்காக தற்காலிகமாக ஒதுக்கப்பட்ட 146 நிலத் துண்டுகளை வாடகைக்கு விட்டதன்மூலம் ஹற்றன் டிக்கோயா நகர சபைக்கு 36 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமான வருமானம் கிடைத்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து நகர சபைத் தலைவர் அசோக கருணாரத்ன மேலும் கூறுகையில்,

தீபாவளி பண்டிகை காலத்தில் ஹற்றன் நகரில் நடைபாதைகளில் வர்த்தகம் அனுமதிக்கப்படாத நிலையில், ஹற்றன் நட்சத்திர சதுக்கம் மற்றும் சக்தி மண்டபத்துக்கு அருகிலுள்ள பகுதிகள் வணிக நடவடிக்கைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களத்தின் அறிக்கை அடிப்படையில் இந்த நிலத் துண்டுகளுக்கான டெண்டர்கள் கோரப்பட்டன.

இந்த டெண்டர்கள் மூலம் நிலங்களை பெற்றவர்களிடமிருந்து டெண்டர் தொகைக்கு மேலாக குப்பை வரி மற்றும் வணிக வரி வசூலிக்கப்பட்டுள்ளது.

மேலும், நகர சபையால் வழங்கப்பட்ட அளவுகோல்களின் படி வணிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (எ)

## பகுத்தறிய மறந்த தலைமையும்...

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

புரட்சியை நடத்தி முடித்துவிட்டு வருகிறார்? எந்த நாட்டின் மீது படை யெடுத்து வெற்றி பெற்றுத் திரும்புகிறார்? தங்களுக்காக என்னதான் செய்யப் போகிறார்?

அல்ல, ரசிக்கும் நட்சத்திரம்தான் என்றால், இந்தக் கூட்டத்தைவிட மிக நெருக்கமாகத் தொலைக்காட்சியில் பார்க்க முடியுமே? எதற்காக உயிரைப் பணயம் வைத்து இப்படிப் பெருங் கூட்டமாகத் திரள வேண்டும்? அதுவும் இத்தனை சின்னஞ்சிறுசுகளையும் உடன் அழைத்துக் கொண்டு? எத்தனை பெண் கள்?

இரு மகள்களுடன் இறந்து போய் விட்டார் ஒரு பெண். எத்தனை குடும் பங்கள் ஆதரவற்றதாகிவிட்டன? அரசு தரும் உதவித்தொகைகளைத் தாண்டி இந்தக் குடும்பங்களின் எதிர்காலம் என்னவாக இருக்கப் போகிறது? இந்த இழப்பை, நடிகர் விஜய் உள்பட யாரால், எப்படி ஈடு செய்ய முடியும்? இவர்கள் மணிக்கணக்காகக் காத்திருந்தது மரணத்துக்காகத்தானா?

எந்தக் கேள்விக்கும் பதில் இல்லை. தலைவர் அப்படி. தொண்டர்கள் இப்படி!

மாநிலத்தின் முதல்வரான மு.க. ஸ்டாலின், சென்னையிலிருந்து அதி காலை 3.20 மணிக்கு கரூர் மருத்துவமனைக்குச் சென்று உயிரிழந்தவர்களின் உடல்களுக்கு அஞ்சலி செலுத்துகிறார் சிகிச்சையில் இருப்பவர்களைச் சந்தித்து நலம் விசாரிக்கிறார். அதிகாலை 3.50 மணிக்குச் செய்தியாளர்களையும் சந்தித்துவிட்டார். யாரைப் பற்றியும் எதுவும் சொல்லவில்லை. விஜய் கைது செய்யப் படுவாரா? என்ற வில்லங்கமான ஒரு கேள்விக்கு, விசாரணை கமிஷன் அறிக்கைப்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என முடித்துக்கொண் டார்.

நம்பிக்கை நட்சத்திரமாக மக்கள் நம்பி வந்த கட்சியின் தலைவர் விஜய்யோ விரைந்து சென்னைக்குத் திரும்பிவிட் டார்.

தன்னுடைய கட்சிக்காரர்களுக்கு, தன்னை நம்பிவந்தவர்களுக்கு, சின்னஞ் சிறு குழந்தைகளுக்கு இத்தனை பெரிய துயரம் நிகழ்ந்திருக்கும்போது, உடனடியாக அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதுகூட தெரியாத ஒருவராக இருந்துகொண்டு, என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி உருப்படியான யோசனை எதுவும் தெரியாதவர்களைச் சுற்றிலும்வைத்துக் கொண்டு, எதிர்காலத்தில் என்ன சாதிக்கப் போகிறார் 'ஆளப் போறதாக நினைத்துக்கொண்டிருக்கும் தமிழன்' த.வெ.க. தலைவர் விஜய்?

வந்தோமா, போனோமா என்றிருக்க நிச்சயம் இதுவொன்றும் சினிமா படப்பிடிப்பு கால்ஷீட் அல்ல. அரசியல், வெகுமக்கள், மக்கள் கூட்டம், நாட்டின் எதிர்காலம். எல்லாவற்றுக்கும் மேலாக விலை மதிக்க முடியாத உயிர்கள். ஆனால், இப்போது இந்தக் கொடிய சம்பவத்தின் மூலம் எல்லாருமாகச் சேர்ந்து, 39 பேருடன் சேர்த்துக் கட்சியின் எதிர்காலத்தையும் கேள்விக்குறியாக்கிவிட்டிருக்கிறார்கள்.

திரைப்படங்களில் பேசுகிற வசனங்களையே திருப்பிப் பேசுவதும் சகட்டுமேனிக்கு எல்லாருக்கும் சவால் விட்டுக்கொண்டிருப்பதும் மட்டுமே அரசியலாகிவிடாது. 'தத்துவமில்லாத தலைவர்கள் ரசிகர்களை மட்டும்தான் உருவாக்குவார்கள்' என்று 'விடுதலை' திரைப்படத்தில் வருகிற வாத்தியார் கூறுவார் (இதுவும்கூட யாரோ எழுதிக் கொடுத்த வசனம்தான்!).

விஜய்யின் பெரும் பலமாக இருந்த தும் தானாகச் சேரும் இந்தக் கூட்டம் தான். இந்தக் கூட்டத்தைக் கண்டுதான் எல்லாரும் வியந்தார்கள் பயந்தார்கள். ஆனால், சிறுபிள்ளை வெள்ளாமை வீடு வந்து சேராது என்பார்கள். வெள்ளாமை வருகிறதோ, இல்லையோ, பரவாயில்லை; கூட்டம் கேட்கப் போன மக்கள் மட்டுமாவது பத்திரமாக வீடு வந்து சேர வேண்டும் அல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அநுர...

என்று அவர் கூறுவார். அது உண்மை.

நான் யாழ். மாவட்ட செயலராக இருந்தபோது குறிகாட்டுவான் வீதிப் புனரமைப்பு மற்றும் இறங்குதுறை புனரமைப்புக்கு கடுமையாக முயற்சித்தேன். ஆனால் அது கைகூடவில்லை. இப்போதுதான் சாத்தியமாகியிருக்கின்றது. இது மிகச் சிறப்பான தருணம். இந்த அரசாங்கம் சொல்லில் அல்ல செயலில் நிரூபித்து வருகின்றது. வடக்கு மாகாணத்தில் நிறைய மாற்றங்கள் நிகழ்கின்றன.

பல அமைச்சர்கள் வடக்கு மாகாணம் தொடர்பான விடயங்களை சாதகமாகவே அணுகுகின்றார்கள். அது எமது வடக்கு மக்களுக்கு கிடைத்த வரப்பிரசாதம். இவற்றுக்கு மேலாக, நெடுந்தீவு பிரதேசத்துக்கே உதவி அரசாங்க அதிபராக முதலில் நியமிக்கப்பட்டேன். அந்தப் பிரதேச மக்களின் வலிகள் தெரியும். அந்தப் பிரதேசத்தில் எரிபொருள் நிரப்பு நிலையம் அமைப்பது சிறப்பானது. இவ்வாறான அபிவிருத்திப் பணிகள் தொடர்ந்தும் இந்த அரசாங்கத்தின் காலத்தில் முன்னெடுக்கப்படும் - என்றார். (அ)

### நிர்வாகம்...

தேர்தல் நடத்தப்படாமல் உள்ளது. எனினும், உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிந்த பின்னர், மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என அனைத் துக் கட்சிகளும் வலியு றுத்திவருகின்றன.

ஆளுநர்களின் கீழ்தான் மாகாண சபை செயற்படுகின் றது. ஆனால் அந்த அதிகாரம் மக்கள் பிரதிநிதிகள் வசம் இருக்கவேண்டும். குறிப்பாக நிர்வாகம் ஆளுநர் வசம் இருப்பது வடக்கு, கிழக்கு மாகாண ணங்களில் இது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

மாகாண சபைத் தேர்தல் பற்றி தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் உறுதியளிக்கப்பட்டுள்ளது. அதற்குரிய நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே, சிறியதொரு அரசமைப்பு மறுசீரமைப்பு ஊடாக அத் தேர்தலை நடத்த முடியும். இவ்வருடத்துக்குள் அதனை நடத்துமாறு கோரிக்கை விடுக்கின்றோம் - என்றார். (அ)

### மாகாண...

தற்போதைய தேவை வெளிப்படுத்தப்படுகிறது என்றும் அவர் கூறினார்.

மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பாக கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல்கள் அவசியம் என்று எந்த பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றத்திலோ அல்லது வேறு இடத்திலோ எந்த கேள்வியையும் எழுப்பவில்லை என்றும் அவர் கூறினார். (அ)

### தேசிய....

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கம் ஒன்றரை ஆண்டாக இருந்தும் நாட்டின் பொருளாதாரத்திற்கோ எதிர்காலத்துக்கோ எந்த நன்மையும் செய்யவில்லை.

தேசிய மக்கள் சக்தியினரும் மக்கள் விடுதலை முன்னணியினரும் ஒன்றிணைந்து நாட்டை சேதத்துக்கு உள்ளாக்கினார்கள். வசந்த சமரசிங்க உள்ளிட்ட சில தேசிய மக்கள் சக்தியின் தலைவர்களின் சொத்து விடயம் அறிக்கைகள் மூலம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. அவர்கள் வெளியில் ஏழையாக நடித்தாலும் உண்மையில் செல்வந்தர்களாக உள்ளனர்.

இந்த அரசு மக்களைப் பொய்யால் ஏமாற்றி, ஊழல் மற்றும் மோசடிகளில் ஈடுபட்டு வருவகின்றது. நாட்டின் பொருளாதாரத்தை அழிவடைந்து செல்கின்றது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் திருடர்களை கைது செய்வதற்குப் பதிலாக அவர்களை குற்றமற்றவர்களாக நிரூபித்து விடுவிக்கிறது -என்றார். (அ)

### அமெரிக்காவின்...

இறக்குமதியை எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து நிறுத்துவதாக அறிவித்திருக்கின்றது. வடக்கு காணத்தில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் இந்த நண்டு பதனிடும் கம்பனியால் தமது வாழ்வாதாரத்தை காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

அதைவிட 6000 இற்கும் மேற்பட்ட மீனவக் குடும்பங்கள் வடக்கு மாகாணத்தில் இந்த நண்டு தொழிலை பிரதான தொழிலாக மேற்கொண்டு வருகின்றனர். வடக்கின் மிகப்பெரிய ஏற்றுமதி பொருளாதாரமாக இந்த நண்டு காணப்படுகின்றது.

இந்த பதப்படுத்தப்பட்ட நண்டு சதையானது பிரதான ஏற்றுமதியாக அமெரிக்காவுக்கே சந்தைப்படுத்தப்படுகிறது. அமெரிக்க அரசாங்கமானது இதற்கு தடை விதிப்பதற்கான காரணம் இலங்கை அரசாங்கம் அல்லது கடற்றொழில் சார்ந்த நிறுவனங்கள் அல்லது ஆராய்ச்சி நிறுவனங்கள் சரியாக இலங்கையில் செயல்படவில்லை என்பதுவே ஆகும். இது இன்று வடக்கு மீனவர்களையே பாதித்திருக்கின்றது.

ஐந்து தொழிற்சாலைகளை மூடும் நிலைக்கு அரசாங்கமும் கடற்றொழில் சார் திணைக்களங்களும் தள்ளியுள்ளன

இந்த நீலக்கால் நண்டு தொழிலை வடக்கிலேயே 95 வீதமான கடல் தொழிலாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர். புத்தளத்தில் வெறுமெனே ஐந்து வீதமான தொழிலாளர்களே இந்த தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் தான் இந்த அரசாங்கமும் அரசாங்கத்தில் இருக்கின்ற அதிகாரிகளும் இந்த விடயத்தில் கவனயீனமாக, கரிசனை இல்லாமல் செயல்படுகின்றார்கள்- என்றார். (அ)

### இலங்கையில்...

சர்க்சியன் தலைமையிலான உலக வங்கிக் குழுவுக்கும் பாராளுமன்ற அரசாங்க நிதி பற்றிய குழுக்களுக்கு இடையில் அண்மையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டங்களின்போது இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையின் வளர்ச்சிக்கு பல ஆண்டுகளாக தொடர்ந்து ஆதரவளித்த தற்காக உலக வங்கிக்கு அரசாங்க நிதி பற்றிய குழுத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் தங்கள் நன்றியை இதன்போது தெரிவித்ததாக பாராளுமன்றத் தகவல் தொடர்புத் துறை தெரிவித்துள்ளது.

கூட்டத்தின்போது, எரிசக்தித் துறை சீர்திருத்தங்களுக்கான அவசரத் தேவையை உலக வங்கி அதிகாரிகள் வலியுறுத்தினர்.

பிராந்தியத்தில் உள்ள மற்ற நாடுகளை விட இலங்கை தொடர்ந்து கணிசமாக அதிக எரிசக்தி செலவுகளை எதிர்கொள்கிறது என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டினார்.

துறைமுகங்கள் மற்றும் தளவாடத் துறையின் வளர்ச்சிகள் தேசிய வளர்ச்சிக்கு முக்கியமானவை என்றும் விவாதிக்கப்பட்டது.

பொதுத்துறையை உரிமையாக்குதல் மற்றும் ஒட்டுமொத்த உற்பத்தித்திறனை மேம்படுத்துவதன் அவசியத்தை உலக வங்கி பிரதிநிதிகள் குழு மேலும் அடிக்கோடிட்டுக் காட்டியது.

இலங்கை அதன் சக நாடுகளுடன் ஒப்பிடும்போது ஒப்பீட்டளவில் குறைந்த ஊதிய மட்டங்களைக் கொண்ட மிகப்பெரிய பொதுத்துறை பணியாளர்களில் ஒன்றைப் பராமரிக்கிறது என்பதையும் உலக வங்கிக் குழு சுட்டிக்காட்டியது.

வருவாய் வசூல் மேம்பாடு, வேலை வாய்ப்பு உருவாக்கம், வறுமை ஒழிப்பு, பொருளாதாரத்தில் பெண்களின் பங்களிப்பை அதிகரித்தல் மற்றும் சுற்றுலா, கல்வி, விவசாயம் மற்றும் தொழில்முனைவு போன்ற துறைகளை வலுப்படுத்துதல் உள்ளிட்ட சீர்திருத்தம் மற்றும் வளர்ச்சிக்கான முக்கிய பகுதிகள் குறித்தும் விவாதங்கள் கவனம் செலுத்தின. (அ)

# மகிந்தவின் பாதுகாப்புக்கு கடுமையான அச்சுறுத்தல்!

கொழும்பு, ஒக். 05

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு, அரசாங்கம் வழங்கிய அனைத்து வாகனங்களும் தற்போது திரும்பப் பெறப்பட்டுள்ளதால், அவரது பாதுகாப்பில் கடுமையான பிரச்னை ஏற்பட்டுள்ளதாக மகிந்த ராஜபக்ஷவின் ஊடகப் பேச்சாளர், சட்டத்தரணி மனோஜ் கமகே தெரிவித்துள்ளார்.

அடுத்த வாரம் பொலிஸ் மாஅதிபர் மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு எழுத்து பூர்வமாக அறிவிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட குண்டு துளைக்காத வாகனம் நேற்று முன் தினம் அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டதுடன், அவரது பாதுகாவலர்களுக்கு வழங்கப்பட்ட அனைத்து வாகனங்களும் மீண்டும் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக மனோஜ் கமகே சுட்டிக்காட்டினார்.

இந்தநிலையில், ஆயுதமேந்திய பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தனியார் வாகனங்களில் பயணிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும், அந்த சூழ்நிலையால் மகிந்த ராஜபக்ஷவின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் மகிந்த ராஜபக்ஷவின் தங்காலை கார்ல்டன் இல்லத்துக்கு அதிகளவான மக்கள் வருகை தருவதுடன், பல்வேறு நிகழ்ச்சிகளுக்கும் அழைப்புகள் வருகின்றன. இதனைக் கருத்திற்கொண்டு, முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்பில் அதிக கவனம் செலுத்துவது அவசியமாகும் என மனோஜ் கமகே வலியுறுத்தினார்.

எதிர்காலத்தில் இந்த விவகாரம் குறித்து பாதுகாப்பு அதிகாரிகளுடன் விவாதிக்க எதிர்பார்ப்பதாகவும், அடுத்த வாரம் எழுத்துபூர்வமாக சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அறிவிப்பதாகவும் சட்டத்தரணி மனோஜ் கமகே மேலும் தெரிவித்தார். (அ)

# ஜனாதிபதியின் செலவு அதிகரிக்கப்படவில்லை!

கொழும்பு, ஒக். 05

2025 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2026 ஆம் ஆண்டிற்கான ஜனாதிபதியின் செலவினம் மூன்று மடங்கு அதிகரித்துள்ளதாகக் கூறும் ஊடக அறிக்கைகளை பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் அனில் ஜெயந்த நிராகரித்துள்ளார்,

செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

2.9 பில்லியன் ரூபாயில் தொடங்கிய 2025ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டு சட்டமூலத்தில், பாதீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள முழு செலவீனங்களும் சேர்க்கப்படவில்லை என பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

தூய்மையான இலங்கை திட்டத்திற்காக தனித்தனியாக ரூ. 5.05 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், புதுமை மற்றும் வணிகமயமாக்கல் தொடர்பான ஆராய்ச்சிக்காக கூடுதலாக ரூ. 1 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

"எனவே, 2025 ஆம் ஆண்டின் ஜனாதிபதி செலவினங்களுக்கான துல்லியமான ஒதுக்கீடு ரூ. 9 பில்லியனாக இருக்கும்.

ஊடக அறிக்கைகளின் படி, 2026ஆம் ஆண்டு ஒதுக்கீட்டு சட்டமூலத்தின் செலவினத்தை ரூ. 11.6 பில்லியனாக ஒப்பிடுகின்றன. இதில் ஏற்கனவே தூய்மையான இலங்கை திட்டம் மற்றும் ஆராய்ச்சிக் கான ஒதுக்கீடுகளும் அடங்கும்," என்று அவர் தெளிவுபடுத்தினார்.

சில ஊடகங்கள் செய்த ஒப்பீடு தொழில்நுட்ப ரீதியாக குறைபாடுடையது என்று மேலும் வலியுறுத்திய அமைச்சர், இந்தத் தவறு கருமமாக போலியான தகவல்கள் உருவாக்கப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார். (அ)

### அஸ்வெசும...

வறுமையைக் குறைப்பதற்குத் தவறிவிட்டதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒரு சமூகப் பாதுகாப்பு திட்டமானது, வறுமை ஒழிப்பு, முதலீடு, சேமிப்பு, உற்பத்தி மற்றும் ஏற்றுமதியை உறுதி செய்ய வேண்டும் எனவும் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். (அ)

### தேசிய...

உறுப்பினர்கள் பருத்தித்துறை நகரசபை, வல்வெட்டித்துறை நகர சபை உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

### குறிகாட்டுவான்...

பாராளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், எஸ்.சிறிபவானந்த ராஜா, ஜெ.றஜீவன், யாழ்.மாவட்ட செயலர் ம.பிரதீபன், வேலணை மற்றும் நெடுந்தீவு பிரதேச செயலர்கள், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர், வடக்கு மாகாணப் பணிப்பாளர், மாவட்ட பொறியியலாளர்கள், வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர், வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்கு வரத்து அதிகார சபையின் தலைவர், நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் எனப்பலரும் கலந்து கொண்டனர்

மிக நீண்ட காலமாக தீவக மக்கள் துறைமுகம் புனரமைக்கப்படாததால் பல்வேறு அசௌகரிகங்களை எதிர் நோக்கி வந்தனர். தற்போது துறைமுகம் புனரமைப்பதற்கான அடிக்கல் நேற்று நாட்டப்பட்டுள்ளதால் கடல் கடந்த தீவுகளான நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு போன்ற தீவகப் பகுதிகளுக்கு செல்லும் கடல் பயணிகள் மற்றும் உல்லாச பயணிகளுக்கு இலகுவாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது

அத்தோடு நேற்றைய நிகழ்வில் நெடுந்தீவு பகுதிக்கான நீண்ட காலப் பிரச்னையாக காணப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கான ஒப்பந்தமும் நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துடன் பொற்றொலிய கூட்டுத்தாபனத்தால் அமைச்சர்கள் முன்னிலையில் செய்து கொள்ளப்பட்டது.

நீண்ட காலமாக தீவக மீனவர்களின் கடல் உணவுகளை சந்தைப்படுத்துவதற்காக புங்குடுதீவு, குறிகட்டுவான் கரைக்கு கொண்டு வந்து அதனை வாகனங்களில் ஏற்றுவதற்கு மீனவர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்கினர். இவ்விடயத்தை மீனவர்கள் தெரியப்படுத்தியதற்கு இனங்க மீனவர்களுடைய இப்பட குகளை கரைக்கு சேர்த்து கடலுணவுகளை கரைக்கு கொண்டு வந்து ஏற்றுவதற்கு உரிய இடங்களை தெரிவு செய்து அதனை எதிர்காலத்தில் அமைப்பதற்கான களஆய்விலும் அமைச்சர்கள் நேற்று ஈடுபட்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# புதிய அரசியலமைப்பு அரசால் விரைவில் கொண்டுவரப்படும்!

## கடற்றொழில் அமைச்சர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஒக். 05



புதிய அரசியலமைப்பு ஒன்று விரைவில் கொண்டு வரப்படும் என கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் சங்கானையில் நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகவியலாளர் ஒருவர் "புதிய அரசியல மைப்பு சட்டம் தொடர்பாக உங்களது அரசாங்கத்தின் கொள்கை பிரகடனத்தில் கூறப்பட்டுள்ளது. இது குறித்து அரசாங்கத்தின் தற்போதைய நிலைப்பாடு என்ன எனக் கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புதிய அரசியலமைப்பு சட்டம் எமது கொள்கைப் பிரகடனத்தில் இருக்கின்ற ஒரு விடயம். நாங்கள் ஆட்சிக்கு வந்து ஒருவருடம்தான் நிறைவடைந்துள்ளது.

ஒரு வருடத்துக்கு முன்னர் இந்த நாடு எந்த நிலையில் இருந்தது என்பதை தெரிந்துகொள்ளவேண்டும். இது மக்களுக்கு தெரியும். ஆனால் அரசியல்வாதிகள் தெரிந்தும் தெரியாதது போல நடிப்பார்கள்.

அந்த வகையில் புதிய அரசியலமைப்பு சட்டம் இந்த நாட்டு மக்களுடைய சகல பிரச்னைகளையும் தீர்க்கும் வகையில், நீண்டு நிலைக்கக்கூடிய ஒரு சட்டமாக விரைவில் கொண்டுவரப்படும் - என்றார். (அ-05)

# எதனையும் மறைக்கும் தேவை எமக்கு இல்லை!

## கூறுகிறார் நாமல் ராஜபக்ஷ

கொழும்பு, ஒக். 05



எங்களுக்கு எதனையும் மறைக்க வேண்டிய தேவை இல்லை. நீதிமன்றத்துக்குச் செல்வதற்கும் தயாராகவே உள்ளோம் என பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அவர்களுடைய சட்டத்தை நாங்கள் அறிவோம். நல்லாட்சி காலத்தில்தான் சட்டத்தை வளைத்தார்கள் என்று நினைத்தோம். ஆனால் இந்த அரசு இன்னும் அதிகமாக வளைத்துக் கொண்டிருக்கிறது போலத் தெரிகிறது.

எங்களுக்கு மறைக்க ஒன்றுமில்லை. நீதிமன்றத்துக்கு அழைத்தால் செல்வோம். பொலிஸாரோ , நிதிக்குற்றவியல் விசாரணைப்பிரிவோ , குற்றப்புலனாய்வுப் பிரிவோ எங்கென்றாலும் செல்வோம்.

ஆனால் இன்று பலர் இலங்கையிலேயே இல்லை. மத்திய வங்கி மோசடியை விசாரிக்க வந்த அரசு, இப்போது அவர்களை மீண்டும் அழைத்துவர ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுக்கிறது.அந்த நிலைக்கு வந்துவிட்டார்கள். எங்களுக்கு மறைக்க ஒன்றுமில்லை. நியாயமான விசாரணைக்கு எப்போதும் தயாராக இருக்கிறோம்.

அரசின் ஊடகப் பேச்சாளர் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் போனால், 15 வருட பழைய விடயங்களை எடுத்துக்கொள்கிறார். அவருக்கு நினைவூட்ட விரும்புகிறேன், நீங்கள் தான் இப்போது அரசு. அதை லால் காந்த மாத்திரம் புரிந்து கொண்டார்.

நீதிமன்றத்தில் சொல்லவேண்டிய விடயங்களை பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஊடகத்தில் சொல்கிறார். ஏதேனும் சம்பவம் நடந்தால், அதில் நியாயமான விசாரணை நடத்தப்படவேண்டும். ஆனால் இன்று பொலிஸும் அரசும் சேர்ந்து போலிச் சாட்சிகளை உருவாக்குகிறார்கள் - என்றார். (அ)

# நிறைவேற்று அதிகார முறை இப்போது நீக்கப்படக்கூடாது!

## விஜயதாஸ ராஜபக்ஷ வலியுறுத்து

கொழும்பு, ஒக். 05

**"நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை தற்போது நீக்கப்படக் கூடாது." - என்று முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.**

கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

"நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை தற்போது நீக்க வேண்டாம் என அரசிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன். ஏனெனில் இந்நாட்டில் ஜனாதிபதியொருவர் இருக்க வேண்டும். அவ்வாறு இல்லையேல் நாட்டின் இருப்பு ஆட்டம் காணக்கூடும்.

எனினும், ஏதேனும் ஒரு நாளில் இரண்டுக்கு மேற்பட்ட வலுவான கட்சிகள் இந்நாட்டில் உதயமானால் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கம் பற்றி பரிசீலித்து பார்க்கலாம்."- எனவும் விஜயதாச ராஜபக்ஷ குறிப்பிட்டார். (அ)



# பாதாள உலக ஆட்சியை நாம் முடிவுக்கு கொண்டுவருவோம்!

## போதைப்பொருள் வியாபாரிகளுக்கு ஜனாதிபதி அநுர கடும் எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 05

பாதாள உலக ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் எனவும் அந்த நோக்கத்திற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் இருந்து ஒருபோதும் பின்வாங்காப் போவதில்லை எனவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஆயுதங்களைக் கொண்டு மக்களைச் சுட்டுக் கொல்லக்கூடிய மனநிலை கொண்ட இளைஞர்கள் என ஒரு சமூகம் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அந்த சமூகத்தை சீர்படுத்த, பாதாள ஆட்சி முடிவுக்கு வர வேண்டும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அதற்காக, ஒரு அரசாங்கமாக நாம் நமது பங்கை மிகவும் வலுவாக நிறைவேற்றுகிறோம்.

ஒரு அரசாங்கத்துக்கு, குறிப்பாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கு, வரம்புகள் இல்லை என்றாலும், எங்களுக்கு வரம்புகள் உள்ளன.

எனவே, அவற்றில் சில நடைமுறை வரம்புகளையும், சில சட்ட வரம்புகளையும் கொண்டுள்ளன என்பதை நிரூபிக்க முயற்சிக்கிறோம்.

எனவே, ஒரு அரசாங்கம் என்பது வரம்புகள் இல்லாமல் தாங்கள் விரும்பியதைச் செய்யக்கூடிய இடமல்ல.

மேலும், இலட்சக்கணக்கான இளைஞர்களின் உயிரைப் பறிக்கும் போதைப்பொருள் பேரழிவை முடிவுக்குக் கொண்டுவர ஒரு பாரிய தேசிய செயற்பாட்டை நாம் கட்டியெழுப்ப வேண்டும்.

எனவே, அதற்கு அடிமையானவர்களையும், அதை விற்பனை செய்பவர்களையும் அதை விட்டுவிடுமாறு நாங்கள் அறிவுறுத்துகிறோம் - என்றார். (அ)

# வெளிநாட்டு பணவனுப்பல் அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 05

வெளிநாட்டு பணவனுப்பல் தற்போது அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கைக்கு, ஒகஸ்ட் மாதத்தில் வெளிநாட்டு தொழிலாளர்களிடமிருந்து அனுப்பப்பட்ட பணம் 681 மில்லியன் டொலர்களாக பதிவாகியுள்ளது, இது 17.9 சதவீத வளர்ச்சி என குறிப்பிடப்பட்டுள் ளது.

கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதத்தில் வெளிநாட்டு தொழிலாளர்களிடமிருந்து பெறப்பட்ட பணத்தின் மொத்த பெறுமதி 577 மில்லியன் டொலர்கள் எனவும் இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (அ)

# மாகாணசபை தேர்தலை விரைவில் நடத்துங்கள்!

## மனோ கணேசனும் வலியுறுத்து

கொழும்பு, ஒக். 05

மாகாணசபைத் தேர்தலை விரைவில் நடத்துவதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டாக வேண்டும். தேர்தல் முறைமை தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் அன்று என்னுடன் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இடம்பிடித்திருந்தார். பழைய முறைமையின் கீழ் தேர்தலை நடத்துவதற்கு அன்று அவர் இணக்கம் வெளியிட்டிருந்தார்.

எனவே, மாகாணசபைத் தேர்தலை பழைய முறைமையில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

தேர்தல் முறைமைதான் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு தடையாக உள்ளது. இதனை இலகுவில் சரி செய்யலாம். பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள தனிநபர் பிரேரணையை, அரசாங்கம் ஏற்று அதனை நிறைவேற்றி இதற்கு வழிசமைக்கவேண்டும் - என்றார். (அ)

# செப்ரெம்பரில் மட்டும் 10,221 சிற்றூந்துகள் பதிவு

கொழும்பு,ஒக். 05

கடந்த செப்ரெம்பர் மாதத்தில் மட்டும் 10,221 சிற்றூந்துகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த ஆண்டு ஒரு மாதத்தில் அதிக எண்ணிக்கையிலான சிற்றூந்துகள் முதல் தடவையாக பதிவு செய்யப்பட்டுள்ளதாக ஆணையாளர் நாயகம் கமல் அமரசிங்க தெரிவித்தார்.

இதேபோல், செப்ரெம்பரில் மட்டும் 32,845 உந்துருளிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த ஆண்டு ஜனவரி முதல் செப்ரெம்பர் 30 வரை 37,115 சிற்றூந்துகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மேலும் 160,590 உந்துருளிகள் புதிதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# அதிக வேகத்தில் பயணித்த லொறி மோதி மாணவன் பலி

கம்பஹா, ஒக். 05

கம்பஹா - மினுவாங்கொடை வீதியில் வீதியவத்த சந்தியில் இடம்பெற்ற விபத்தில் பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்ததாக கம்பஹா பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்றுச் சனிக்கிழமை காலை இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதிக வேகத்தில் பயணித்த லொறி ஒன்று வீதியில் பயணித்துக்கொண்டிருந்த பாடசாலை மாணவன் மீது மோதி பின்னர் கார் மற்றும் ஓட்டோ மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த பாடசாலை மாணவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக கம்பஹா பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் உயிரிழந்தவர் 15 வயதுடைய பாடசாலை மாணவனாவார்.

விபத்தையடுத்து லொறியின் சாரதி அங்கிருந்து தப்பிச் சென்ற நிலையில் கம்பஹா பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கம்பஹா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(எ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.10.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org